JULY 23, 2020
THURSDAY
VOL: 006/054
RS. 10.00
LATE CITY

தேர்தல் சிறப்பிதழ் Rs.10

Find us on facebook/tamilmirror Follow us on tamilmirror epaper/tamilmirror.lk

www.tamilmirror.lk

# தமிழ் Mirror







# அங்கொட லொக்கா நஞ்சூட்டிப் படுகொலை



## இந்தியாவில் சம்பவம்: நெருங்கி பழகிய பெண் தலைமறைவு

- இறுதிக்கிரியை விடியோ காண்பிப்பு
- ஒரு வாரகாலம் சிகிச்சை பெற்றார்

ஒருங்கிணைக்கப்பட்ட குற்றச்செயல்களை முன்னெடுத்த பாதாள உலகக் கோஷ்டியின் தலைவரான, 'அங்கொட லொக்கா' என்றழைக்கப்படும், மத்துமகே லசந்த ஷமிந்திர பெரேரா, இந்தியாவில் நஞ்சூட்டிப் படுகொலை செய்யப் பட்டுள்ளாரென தகவல்கள் தெரிவிக்கின்றன.

தொடர்ச்சி P2



## 'ஓகஸ்ட் 1 முதல் பாலர் பாடசாலை'

கொரோனா வைரஸ் அச்சம் காரணமாக, மார்ச் மாதம் முதல் தொடர்ச்சியாக மூடப்பட்டிருக்கும், நாடளாவிய ரீதியிலுள்ள பாலர் பாடசாலைகளை ஓகஸ்ட் 1ஆம் திகதி முதல் மீண்டும் திறப்பதற்கு அரசாங்கம் அவதானம் செலுத்தியுள்ளதெனத் தெரிவித்த சுகாதார அமைச்சர் பவித்திரா

தொடர்ச்சி P2

## 'தமிழர் அரசியலில் ஒன்றுமை இல்லை'

**மன்னார் மறைமாவட்ட ஆயர் தெரிவிப்பு**



தமிழர்களான எம்மிடத்தில், இன்றிருக்கும் வாக்குச் சீட்டுத்தான் ஒரேயோர் ஆயுதம். அதனை நாம் முறையாகப் பயன்படுத்தி, தகுதியான பிரதிநிதிகளை நாடாளுமன்றத்துக்கு அனுப்ப வேண்டுமெனக் கேட்டுக்கொண்ட

தொடர்ச்சி P2

## வடக்கு, கிழக்குக்கு 'வாய்ப்பு'



### கொரோனா வழிசமைத்துள்ளது என்கிறார் ரணில்

- சிக்கல்களைப் போக்க, அரசாங்கத்திடம், முறையான திட்டமிடல் இல்லை

உலகம் முழுவதும் தற்போது கொரோனா வைரஸ் பாதிப்பால் முடங்கிக் கிடக்கின்ற இந்தத் தறுவாயில், இலங்கையின் வடக்கு, கிழக்கு வாழ் மக்கள், இக்காலத்தைச் சரியாகப் பயன்படுத்திக் கொண்டால், பொருளாதார ரீதியில் முன்னேறுவதற்கான வாய்ப்பு உள்ளதென்று, ஐக்கிய தேசிய கட்சியின் தலைவரும் முன்னாள் பிரதமருமான ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

தொடர்ச்சி P2



குருநாகல் புவனேகபாஹு கட்டடம்

## விரைந்து பாதுகாக்குமாறு மஹிந்தவிடம் பரிந்துரை

குருநாகல் புவனேகபாஹு ஹோட்டல் நடத்தப்பட்டுவந்த கட்டடம் சேதமாக்கப்பட்டமை தொடர்பான இடைக்கால அறிக்கை, நேற்று (22) முற்பகல், அலரி மாளிகையில் வைத்து, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவிடம் கையளிக்கப்பட்டது.

தொடர்ச்சி P2




## கந்தகாடு கைகலப்பில் ஐந்து பேருக்கு காயம்

**தும்புத்தடி, விளக்குமாறுடன் சண்டை**




கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளானவர்களுக்கு விசேடமாக சிகிச்சையளிக்கப்படும், வெலிகந்த- கந்தகாடு விசேட மத்திய நிலையத்தில், இரண்டு குழுக்களைச் சேர்ந்தவர்களுக்கிடையில் ஏற்பட்ட கைகலப்பில், ஐவர் காயமடைந்துள்ளனர் என வெலிகந்த பொலிஸார் தெரிவித்தனர்.

தொடர்ச்சி P2

அரந்தலாவ படுகொலைக்கு எதிரான மனு:

## நவம்பர் 12இல் ஆராய்வு



அம்பாறை - அரந்தலாவ பகுதியில், பௌத்த பிக்குகள் 31 பேர், 1987 ஜூன் 2ஆம் திகதியன்று படுகொலை செய்யப்பட்டமைக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட மனுவுக்கு மட்டுப்படுத்தப்பட்ட எதிர்ப்புகளை தாக்கல் செய்யுமாறு, சட்டமா அதிபர் திணைக்களத்துக்கு உயர்நீதிமன்றம், நேற்று (22) உத்தரவிட்டுள்ளது.

தொடர்ச்சி P2



## 'மனைவி முஸ்லிம் என்பதாலா புவனேகபாஹுக்கு இந்தப் பேரிடி'

**மனோ கேள்வி: மஹிந்தவின் கருத்து விகடமானது என்கிறார்**

ரம்ஸி குத்தூஸ்

முஸ்லிம் பெண்ணைத் திருமணம் செய்ததால் புவனேகபாஹு மன்னனின் தராதரம் குறைந்து போய்விடுமா? என பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவிடம் கேள்வியெழுப்பிய ஐக்கிய மக்கள் சக்தியின் கொழும்பு மாவட்ட வேட்பாளர் மனோ கணேசன்,

தொடர்ச்சி P2

## 'தேர்தலுக்கு முன் என்னை சிறையிலடைக்க முயற்சி'

- 20 வருடகால அரசியல் அனுபவம் எனக்கு இருக்கிறது



பயங்கரவாதச் செயற்பாடுகள் எவற்றுடனும் எந்தத் தொடர்பும் இல்லாத என்னை, சஹ்ரானின் மிலேச்சத்தனமான தாக்குதலுடன் கோர்த்து, தேர்தலுக்கு முன்னர் என்னை சிறையிலடைக்க முயல்கின்றனர் எனத் தெரிவித்த மக்கள் காங்கிரஸ் தலைவர் ரிஷாட் பதியுதீன், உங்கள் மீது கைககளை வைக்கும் போது, பொம்மைகளாக இருக்கச் சொல்கின்றனரா என வினவினார்.

தொடர்ச்சி P2

டிஜிட்டல் பிறப்புச் சான்றிதழில்

## 'இனம், மதத் தகவல்கள் இனி உள்ளடக்கப்படாது'

டிஜிட்டல் முறைமையில் பிறப்புச் சான்றிதழை வழங்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளனவெனத் தெரிவித்துள்ள ஆட்பதிவுத் திணைக்கள பதிவாளர் நாயகம் என்.சீ. விதானகே, இனம், மதம் ஆகிய தகவல்கள் இனிமேல் உள்ளடக்கப்படமாட்டாது. "இலங்கையர்" என மட்டுமே குறிப்பிடப்படும் என்றார்.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்



## ‘ஒகஸ்ட் 1 முதல் பாலர் பாடசாலை’

வன்னியராச்சி, இதுதொடர்பில், அமைச்சரவைக் கூட்டத்தில் வெகுவாக ஆராயப்பட்டதென்றார்.

அவ்வாறு ஆராயப்பட்டதில், ஒகஸ்ட் 1ஆம் திகதி முதல், பாலர் பாடசாலைகளை ஆரம்பிப்பதற்கு அமைச்சரவையில் அங்கிகாரம் கிடைத்துள்ளதெனத் தெரிவித்த அவர், உத்தியோகபூர்வ அறிவிப்பொன்று, கல்வியமைச்சின் ஊடாக விரைவில் வெளியிடப்படும் என்றார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில், இன்று (நேற்று) நடத்தப்பட்ட வாராந்த அமைச்சரவைக் கூட்டத்தில், மேற்படி விவகாரம் தொடர்பில் விரிவாக கலந்துரையாடப்பட்டதெனத் தெரிவித்த அவர், கல்வியமைச்சரும், சுகாதார அமைச்சர் என்றவகையில் நானும், பாலர் பாடசாலைகளை ஒகஸ்ட் 1ஆம் திகதியன்று ஆரம்பிப்பதற்கு இணங்கினோம் என்றார்.

## ‘தமிழர் அரசியலில்...



மன்னார் மறைமாவட்ட ஆயர் இம்மானுவேல் பெர்ணான்டோ ஆண்டகை, இந்த விடயத்தில் நாம் அலட்சியமாக இருக்கக்கூடாது என்பதுடன், தமிழ் அரசியல் நிலைமை இன்னும் குழப்பமானதாக உள்ளது. ஓரளவுக்கேனும் முன்பிருந்த ஒற்றுமை இன்று இல்லாது போய்விட்டது எனத் தெரிவித்துள்ளார்.

ஓர் இக்கட்டான சூழ்நிலையில் நாம் மீண்டுமொரு பொதுத் தேர்தலைச் சந்திக்கின்றோம் எனத் தெரிவித்துள்ள அவர், தமிழ்த் தேசியத்தின் அடிப்படைகள், தீர்க்கப்படாத தொடரும் பிரச்சினைகள், ஜனநாயக உரிமைகளைப் பயன்படுத்துவதன் அவசியம் குறித்தும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

ஊடகங்களுக்கு நேற்று (22) விடுத்திருந்த ஊடக அறிக்கையில் மேற்கண்டவாறு கோரியுள்ள அவர், அரசியலுக்கு அப்பாற்பட்டவர்களாக, அரசியலிலிருந்து ஒதுங்கிக் கொண்டவர்களாக, கிறிஸ்தவர்கள் இருக்க முடியாது. மாறாது பொறுப்புள்ள குடிமக்கள் என்ற வகையில் தமது அரசியல் கடமைகளை தவறாது நிறைவாக ஆற்றவேண்டுமெனக் கேட்டுக்கொண்டார்.

“அரசியல் புனிதமானது. ஆனால், தவறானவர்கள் அதற்குள் நுழைவதனால் அது சிலவேளை சாக்கடையாகின்றது. இந்தப் புனிதமான அரசியலில் எல்லா மக்களைப்போல கிறிஸ்தவர்களும் ஈடுபடவேண்டும் எனத் திருச்சபை விரும்புகின்றது, ஊக்குவிக்கின்றது. அதேவேளை மிக முக்கியமான, மிக அவசியமான சூழ்நிலையில் அன்றி பொதுவாகத் திருச்சபை, கட்சி அரசியலில் ஈடுபடுவதில்லை” என, அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ் அரசியல் நிலைமை இன்னும் குழப்பமானதாக உள்ளது. முன்பு ஓரளவுக்கேனும் இருந்த ஒற்றுமை நிலைமை இன்று இல்லாது போய்விட்டது. குழப்பவாதிகளையும், சந்தர்ப்பவாதிகளையும் நிராகரிப்போம். சமாதான விரும்பிகளையும், சமூக அக்கறை கொண்டவர்களையும் ஆதரிப்போம் என்றும் அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கந்தகாடு கைகலப்பில் ஐந்து பேருக்கு காயம்




சிகிச்சையளிப்பதற்காக, அந்த மத்திய நிலையத்தில் அனுமதிக்கப்பட்டவர்களே இவ்வாறு, நேற்று காலை (22) கைகலப்பில் ஈடுபட்டுள்ளனர் எனத் தெரியவருகின்றது.

காயமடைந்தவர்களின் நிலைமை அவ்வளவு மோசமானதாக இல்லையெனத் தெரிவித்த பொலன்னறுவை பெரியாஸ்பத்திரியின் பணிப்பாளர். விசேட வைத்தியர் சம்பத் இந்திக குமார, பொலிஸ் பாதுகாப்புடன் அவர்களுக்கு சிகிச்சையளிக்கப்பட்டு வருகின்றது என்றார்.

கந்தகாடு மற்றும் சேனபுர ஆகிய இடங்களிலுள்ள, போதைப்பொருள்களுக்கு அடிமையானவர்களுக்கு புனர்வாழ்வளிக்கும் மத்திய நிலையங்களில், கொரோனா வைரஸ் தொற்றுக்குள் உள்ளானவர்கள் இனங்காணப்பட்டனர். அவர்கள், வெலிக்கந்த- கந்தகாடு தனிமைப்படுத்தல் மத்திய நிலையத்துக்கு நேற்று காலை அழைத்துவரப்பட்டனர்.

இதேவேளை, கந்தகாட்டில் அமைந்துள்ள புனர்வாழ்வளிப்பு நிலையத்தில் சிகிச்சைபெறும், கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளானவர்களின் எண்ணிக்கை 279ஆகும். வெலிக்கந்த- சேனபுர புனர்வாழ்வளிப்பு நிலையத்தில் கொரோனா தொற்றுக்கு உள்ளானவர்களின் எண்ணிக்கை 84ஆகும். அவர்கள், இரண்டு குழுக்களாகப் பிரிந்தே இவ்வாறு கைகலப்பில் ஈடுபட்டுள்ளனர் என ஆரம்பக்கட்ட விசாரணைகளிலிருந்து கண்டறியப்பட்டுள்ளது.

கைகளால் தாக்கி, கால்களால் எத்திக்கொண்டது மட்டுமன்றி, விசேட மத்திய நிலையத்தின் சுகாதார பாதுகாப்புக்காக பயன்படுத்தப்படும் தும்புத்தடி, விளக்குமாறு ஆகியவற்றையும் கொண்டு, தாக்கிக்கொண்டனர் என, விசாரணைகளின் ஊடாகக் கண்டறிப்பட்டுள்ளதெனத் தெரிவித்த வெலிக்கந்த பொலிஸார், அங்கு பாதுகாப்புக் கடமைகளில் ஈடுபட்டிருந்த இராணுவத்தினரே, நிலைமையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தனர் என்றனர்.

# அங்கொட லொக்கா நஞ்சூட்டிப் படுகொலை

உடலில் நஞ்சேறியமையால், கடுமையாக சுகயீன முற்றிருந்த அவர். இந்தியா- பெங்களூரிலுள்ள தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்தார். அதன் பின்னர், ஜூலை 3ஆம் திகதியன்று அவர் மரணமடைந்துவிட்டாரென அந்த தகவல்கள் தெரிவித்தன.

இலங்கை பொலிஸாரால் தேடப்பட்டு வரும் “அங்கொட லொக்கா” இந்தியாவுக்கு தப்பிச் சென்று அங்கு தலைமறைவாகி வாழ்ந்துவந்தார்.

இந்நிலையில், இங்கிருந்து இந்தியாவுக்குச் சென்றிருந்த பெண்ணொருவரே, அவருக்கு சக்திமிக்க பானமொன்றில் நஞ்சை கலந்து, அவருக்கு ஊட்டி, படுகொலை செய்திருக்க லாமென அந்த தகவல்கள் தெரிவித்தன. சுமார் ஒருவார காலம் மருத்துவமனையில் சிகிச்சைப்பெற்றுவந்த “அங்கொட லொக்கா” இவ்வாறு மரணமடைந்துவிட்டாரென அறியமுடிகின்றது.

அவரது இறுதி கிரியைகள், தமிழ்நாடு- கோலாலம்பூரில் நடத்தப்பட்டுள்ளன. அதன் வீடியோ காட்சிகளை, அவருடைய தங்கையும் பார்ப்பதற்கான ஏற்பாடுகள் செய்து கொடுக்கப்பட்டிருந்தன என அறியமுடிகின்றது.

சம்பவத்துக்குப் பின்னர், மற்றுமொரு பிரபலமான பாதாள உலகக்கோஷ்டியினர் இருக்கலாமென சந்தேகிக்கப்படும் அதேவேளை, அந்தக் குழுவே, அப்பெண்ணை இந்தியாவுக்கு அனுப்பி, அங்கொட லொக்காவுக்கு நஞ்சூட்டி இவ்வாறு படுகொலை செய்திருக்கலாமென சந்தேகம் எழுகிறது. அப்பெண்ணும் தற்போது தலைமறைவாகிவிட்டாரென அந்த தகவல்கள் தெரிவித்தன.

அங்கொட லொக்காவால் அனுப்பிய சகா ஒருவரினால் படுகொலை செய்யப்பட்ட ஒருவரின் மனைவியே, அந்தப் பெண் என அறியமுடிகின்றது. அழகுசாதன நிபுணரான அப்பெண், தனது கணவன் படுகொலை செய்யப்பட்டதன் பின்னர், அங்கொட லொக்காவுடன் மிக நெருக்கமாக பழகியுள்ளார். அதன்பின்னர், பல தடவைகள் இந்தியாவுக்கு சென்று அங்கொட லொக்காவை சந்தித்துவிட்டு திரும்பியுள்ளாரென அறியமுடிகின்றது.

இதுதொடர்பில் உத்தியோகபூர்வ தகவல்கள் எவையும் இதுவரையும் தங்களுக்கு கிடைக்கவில்லையென பொலிஸ் ஊடகப் பேச்சாளர், சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி ஜாலிய சேனாரத்ன, நேற்று (22) தெரிவித்துள்ளார்.

களுத்துறை வடக்கு, எனமல்மட பிரதேசத்தில், சிறைச்சாலைகள் பஸ் ஸொன்றின் மீது, 2017 பெப்ரவரி 27ஆம் திகதியன்று, 20 பேரடங்கிய குழுவொன்றினால் துப்பாக்கிப் பிரயோகங்களை மேற்கொண்டு, மற்றுமொரு பாதாள உலகக் கோஷ்டியின் தலைவர் “சமயங்” உள்ளிட்ட ஏழுபேரை படுகொலைச் செய்தார் என்றக் குற்றச்சாட்டின் கீழ் அங்கொட லொக்கா தேடப்பட்டு வந்தவர்.

அவ்வாறு தேடப்பட்டுவந்த அங்கொட லொக்காவும் அவருடைய சகாவான “லடியா” என்பவரும் இந்தியாவுக்கு தப்பிச் சென்றிருந்த வேளையில், 2017 மே 22ஆம் திகதியன்று சென்னை பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டனர்.

இரண்டு போலிக் கடவுச்சீட்டுகளை பயன்படுத்தி, வேறொரு நாட்டுக்கு தப்பிச் செல்வதற்கு முயன்ற வேளையிலேயே இவ்விருவரும் சென்னை விமான நிலையத்தில் வைத்து தடுத்துவைக்கப்பட்டனர். அதன்பின்னர், ஸ்ரீ லங்கா பொலிஸாரினால் இவ்விருவரும் தேடப்படுபவர்கள் என்றத் தகவல்களை அடுத்து, சென்னை பொலிஸாரினால் அவ்விருவரும் கைது செய்யப்பட்டனர்.

அவ்விருவரையும் இந்நாட்டுக்கு அழைத்துவருவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன எனினும், பிணையில் விடுவிக்கப்பட்டிருந்த அவர்கள் இருவரும், சென்னையிலிருந்து தலைமறைவாகி அங்கிருந்து தப்பிச் சென்றிருந்துள்ளனர்.

அங்கொட லொக்காவுக்கு எதிராக பல்வேறான குற்றச் சாட்டுகளின் கீழ், பல வழக்குகள் இலங்கை நீதிமன்ற ங்களில் உள்ளன. களுத்துறை சிறைச்சாலை பஸ் மீதான துப்பாக்கிப் பிரயோகம் தொடர்பிலான வழக்கில் அவர் பிரதான சந்தேகநபராக பெயர்க் குறிப்பிடப்பட்டுள்ளார்.

இந்நிலையில், இந்தியாவுக்கு தப்பிச் சென்றிருந்த அங்கொட லொக்காவையும் அவருடைய சகாக்களில் ஒருவரான “லடியா” என்பவரையும், சென்னையில் தலைமறைவாகியிருக்கும், இந்நாட்டின் மற்றுமொரு பாதாள உலகக் கோஷ்டியின் தலைவரென அறியப்பட்ட “கிம்புலாஎல குணா” என்பவரே, பாதுகாப்பளித்துள்ளார் என அந்த தகவல்கள் தெரிவிக்கின்றன.

## நவம்பர் 12இல் ஆராய்வு



மட்டுப்படுத்தப்பட்ட எதிர்ப்புகளை செப்டெம்பர் 30ஆம் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ தாக்கல் செய்யுமாறு உத்தரவிட்டுள்ள உயர்நீதிமன்றம், அது தொடர்பில், பதிலெதிர்ப்புகள் இருப்பின், அவற்றை ஒக்டோபர் 9ஆம் திகதிக்கு முன்னர் தாக்கல் செய்யுமாறு, மனுதாரருக்கு உயர்நீதிமன்றம் கட்டளையிட்டது.

இந்த மனு அழைக்கப்பட்டபோது, சட்டமா அதிபர் சார்பில், நீதிமன்றத்தில் ஆஜராகியிருந்த பிரதி சொலிஸிட்டர் ஜெனரல் அவந்தி பெரேரா, “மனு தொடர்பில், தனக்கு நேற்றே (நேற்றுமுன்தினம்) அறிவுறுத்தப்பட்டது. ஆகையால், மேலதிக ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்வதற்கு தனக்கு காலம் தேவை” என நீதிமன்றத்தின் கவனத்துக்கு கொண்டுவந்தார்.

இந்த மனு, பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரிய, நீதியரசர்களான எஸ். துரைராஜா, மூர்து பெர்ணான்டோ ஆகியோர் முன்னிலையில், நேற்று (22) அழைக்கப்பட்டது. இதன்போதே, மட்டுப்படுத்தப்பட்ட எதிர்ப்புகளை மட்டுமே சமர்ப்பிக்குமாறு கட்டளையிட்ட உயர்நீதிமன்றம் மனுவை நவம்பர் 12ஆம் திகதியன்று ஆராய்வதற்கு தீர்மானித்தது.

இன்றைக்கு 33 வருடங்களுக்கு முன்னர், இடம்பெற்ற படுகொலைக்கு எதிராக, ஜூன் 30ஆம் திகதியன்று, அந்தப் படுகொலையிலிருந்து உயிர்த்தப்பி, வலதுகுறைந்துள்ள ஆதாஉல்பன புத்தசார தேரரின் சார்பில் மனுத்தாக்கல் செய்யப்பட்டது.

## ‘வாய்ப்பு’

வடக்கு, கிழக்கு வாழ் மக்கள், விவசாயம், மீன்பிடித்துறையில் வளர்ச்சி காண்பதற்கான வாய்ப்புக் கிட்டியுள்ளது. அதனால், இச்சந்தர்ப்பத்தை அவர்கள் சரியாகப் பயன்படுத்திக் கொண்டால், பொருளாதார ரீதியான அபிவிருத்தியை நோக்கிப் பயணிக்க முடியுமென, தமிழ்மிரருக்குத் தெரிவித்தார்.

கொரோனாவால், முழு உலகமும் பொருளாதார ரீதியில் சிக்குண்டுள்ள நிலையில், இதிலிருந்து மீள்வதற்கு எவ்வளவு காலமெடுக்கும் என்று கூற முடியாதெனத் தெரிவித்த விக்கிரமசிங்க, கொரோனா பிரச்சினையால் ஏற்பட்டுள்ள தொழில் இழப்பு, வாழ்வாதாரச் சிக்கல்களைப் போக்க, தற்போதைய அரசாங்கத்திடம், முறையான திட்டமிடல் இல்லையென்றும் சாடினார். இதனால், வடக்கு, கிழக்கு மாகாணங்களில் பிரசித்திபெற்ற விவசாயம், மீன்பிடி போன்ற துறைகளை விருத்தி செய்துகொள்வது, அப்பிரதேசங்களைச் சேர்ந்த மக்களின் தற்போதைய வாழ்வாதாரச் சிக்கல்களுக்கு, ஓரளவு தீர்வு கொடுக்குமெனத் தான் நம்புவதாக, அவர் மேலும் கூறினார்.

## ‘மனைவி முஸ்லிம்...

அவருடைய மனைவி, முஸ்லிம் என்பதாலா, புவனேகபாஹு மன்னனின் சட்டசபை மண்டபம், இடித்தழிப்பு செய்யப்பட்டதெனக் கேட்டார். “13ஆம் நூற்றாண்டில், குருநாகல் இராசதானிக்கு சொந்தமான, புவனேகபாஹு ஹோட்டல் என்றழைக்கப்படும், இரண்டாம் புவனேகபாஹு மன்னனின் சட்டசபை மண்டபம், இடித்தழிப்பு செய்யப்பட்டமை தொடர்பில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் கருத்து விகடமானது, கேவலமானது” என மனோ கணேசன் கண்டித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் காரியாலயத்தில் நேற்று (22) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துரைத்த அவர், புவனேகபாஹு மன்னனின் தராதரம் குறைந்தது என்பதாலேயே அம்மண்டபம் தரைமட்டமாக்கப்பட்டது எனவும் கேட்டார்.

முஸ்லிம் பெண்ணைத் திருமணம் செய்ததால் புவனேகபாஹு மன்னனின் தராதரம் குறைந்தா போய்விடும். கண்டி இராச்சியத்தின் கடைசி மன்னன் ஓர் இந்திய தமிழர். பிரித்தானியாவுடன் ஒப்பந்தம் செய்யும் போது அவர் தமிழில்தான் கையொப்பம் இட்டுள்ளார் எனத் தெரிவித்த மனோ கணேசன், இலங்கையில் தமிழ் மன்னர்கள் இருந்துள்ளனர். இதுதான் வரலாறாகும் என்றார்.

“இன,மத பேதமின்றி சிங்களவர், தமிழர், முஸ்லிம் என்று வேறுபாடில்லாமல் அன்று வாழ்ந்துள்ளனர். இவ்வாறான நிலையில், புவனேகபாஹு மன்னனின் சட்டசபை மண்டபம் உடைக்கப்பட்டதென்பது மிகவும் பிழையான விடயமாகும்” என்றார்.

## விரைந்து பாதுகாக்குமாறு மஹிந்தவிடம் பரிந்துரை

மேற்படி கட்டடத்தின் முன்பக்கக் கூரையின் ஒரு பகுதிக்கும் ஜன்னல்களுக்கும் சேதம் விளைவிக்கப்பட்டுள்ளது என்பதால், அப்பகுதிகளைத் தொல்பொருள் ரீதியில் ஆராய்ச்சிக்கு உட்படுத்த வாய்ப்புள்ளது என்றும் முழுமையாகச் சேதமாக்கப்பட்டுள்ள பின்பக்கத்திலுள்ள மரத்தாலான விட்டங்கள் மற்றும் செங்கல்கள் உள்ளிட்ட கட்டடப் பொருள்கள் பாதுகாப்பாக உள்ளன என்றும், அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த விடயங்கள் தொடர்பில், இதற்கு முன்னர் தொல்பொருள் திணைக்களத்தினால் விரிவாக அறிக்கையிடப்பட்டுள்ள அதேவேளை, பாதுகாப்புத் திட்டங்கள் தயார்படுத்தப்பட்டு உள்ளதால், அந்தப் பழைமைவாய்ந்த பகுதியை மீட்டெடுப்பதற்கான வாய்ப்புள்ளது என்றும் அதனால், பழைமைவாய்ந்த கட்டடம் விரைந்து பாதுகாக்கப்பட வேண்டும் என்றும், அறிக்கையில் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

அத்துடன், இக்கட்டடத்தைத் தொல்பொருள் திணைக்களத்துக்குக் கையகப்படுத்துமாறும் வலியுறுத்தப்பட்டுள்ள அதேவேளை, குறித்த இடத்தை விரிவாக்கும் திட்டத்தைத் திருத்துமாறு, வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு ஆலோசனை வழங்குமாறும் கோரப்பட்டுள்ளது.

இந்தச் சேதமாக்கலுக்குப் பொறுப்புக்கூற வேண்டிய நிறுவனம் அல்லது நபர்களின் பாதுகாப்புக்கு அவசியமான ஏற்பாடுகளைச் செய்யுமாறும், இடைக்கால அறிக்கையினூடாகக் கோரப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## ‘இனம், மத...

இதேவேளை, தாய் - தந்தையின் திருமண விவரங்களையும் பிறப்புச் சான்றிதழில் உள்ளடக்காமல் இருப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளதென தெரிவித்துள்ள அவர், தாய் - தந்தையரின் திருமண விவரங்களால் சிறுவர்கள் சமூகத்தில் எதிர்நோக்கும் பிரச்சினைகளை கருத்திற் கொண்டு இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டது என்றார்.

நாட்டின் அனைத்துப் பிரஜைகளினதும் புதிய பிறப்புச் சான்றிதழில் இலங்கையர் என குறிப்பிடப்படும் எனத் தெரிவித்த அவர், பெற்றோர், திருமணமானவர்களா அல்லது திருமணமாகாதவர்களா என்ற விடயம் பிறப்புச் சான்றிதழ்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையால், பாடசாலைகளில் பிள்ளைகளைச் சேர்க்கும் போது, அவர்கள் பெரிதும் மன உளைச்சலுக்கு ஆளாகிய சந்தர்ப்பங்கள் உள்ளன என்றார்.

## ‘தேர்தலுக்கு முன் என்னைச் சிறையிலடைக்க முயற்சி’

ஐக்கிய மக்கள் சக்தியில், குருநாகல் மாவட்டத்தில் போட்டியிடும், மக்கள் காங்கிரஸ் வேட்பாளர் முஹம்மட் நஸீரை ஆதரித்து, குருநாகல், பொத்துஹெரவில், நேற்று (22) நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே, மேற்கண்டவாறு தெரிவித்தார்.

“குருநாகலுக்கு இன்று வருவேனா என்பது, எனக்குச் சந்தேகமாகவே இருந்தது. வரமுடியுமா அல்லது வரவிடுவார்களா? என எதுவுமே தெரியாத நிலையில் இருந்தேன். கட்சியின் தவிசாளர் அமீர் அலியுடன் தொடர்புகொண்டு, ஏற்பாடு செய்யப்பட்டுள்ள கூட்டங்களில், என் சார்பில் கலந்துகொள்ள ஆயத்தமாகுமாறும் வேண்டினேன்” என்றார்.



“17 வருடங்கள் அமைச்சராகப் பதவி வகித்துள்ளேன். சுமார் 20 வருடகால அரசியல் அனுபவம் எனக்கிருக்கிறது. அன்றிலிருந்து இன்றுவரையிலும் என்னைப் பற்றிப் போலியான கதைகளை பரப்பினார்களேயொழிய, எந்தக் குற்றச்சாட்டும் பொலிஸில் இதுவரை பதிவு செய்யப்படவில்லையெனத் தெரிவித்த அவர், மக்களுக்கு காணி வழங்கியதற்காக, வழக்குத்தாக்கல் செய்தனர், சமூகத்துக்காக பேசியதனால் மதவாதிகள் நீதிமன்றத்தை நாடினர்.



தேர்தலில் போட்டியிட

# ‘விமலுக்குத் தடை விதிக்க வேண்டும்’



■ றம்ஸி குத்தூஸ்

அமைச்சர் விமல் வீரவன்ச, சட்டத்துக்கு முரணாக அவரது முகம் அச்சிடப்பட்ட முத்திரையை வெளியிட்டுள்ளதால், அவரை உடனடியாகக் கைதுசெய்ய வேண்டுமெனத் தெரிவித்த முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான், விமல் வீரவன்ச தேர்தலில் போட்டியிடுவதற்கு, தேர்தல்கள் ஆணைக்குழுவின் தவிசாளர் தடை விதிக்க வேண்டுமெனவும் கேட்டுக்கொண்டார்.

ஐக்கிய மக்கள் சக்தி அலுவலகத்தில், நேற்று (22) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே, அவர் இதனைத் தெரிவித்தார்.

இதன்போது மேலும் கருத்துரைத்த அவர், வேட்பாளரோ அல்லது நாட்டில் எந்தவொரு பிரஜையோ, தாம் விரும்பியவாறு முத்திரை வெளியிட முடியாது என்றும், அது சட்டத்துக்கு முரணானது என்றும் கூறினார். எனவே, இவ்வாறான சட்டவிரோதச் செயலில் ஈடுபட்டுள்ள விமல் வீரவன்சவுடன் தொடர்புடையோரை, உனடியாகக் கைதுசெய்ய வேண்டும் என்றும் கூறினார்.

இவ்வாறான சட்டவிரோதச் செயலில் ஈடுபட்டுள்ள எந்தவொரு வேட்பாளரும் தேர்தலில் போட்டியிட முடியாது என்று கூறிய அவர், தேர்தலில் போட்டியிடுவதைத் தடுக்கும் அதிகாரம் தவிசாளரிடமே உள்ளது. ஆகையால், அந்த அதிகாரத்தைப் பயன்படுத்தி, விமல் வீரவன்ச தேர்தலில் போட்டியிடுவதற்குத் தடை விதிக்க வேண்டும் எனத் தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பில், குற்றப்புலனாய்வுப் பிரிவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. தேர்தல்கள் ஆணைக்குழுவின் தவிசாளர் இதற்கு என்ன பதிலளிப்பார் என்றுரைத்த அவர், இவ்வாறு ஒவ்வொருவரும் விரும்பியவாறு முத்திரை வெளியிடுவதற்கு, நாட்டின் சட்டத்தில் இடமுண்டா? என்றும் வினவினார்.

இந்த விடயம் தேர்தல் சட்ட மீறல் மாத்திரமல்ல. முற்று முழுதாக நாட்டின் சட்டத்தை மீறிய செயலாகும் என்று கூறிய முஜிபூர் ரஹ்மான், தேர்தல்கள் ஆணைக்குழுவால் சட்ட விதிமுறைகள் முன்வைக்கப்பட்டுள்ள போதிலும், அவற்றை ஆளுங்கட்சி பின்பற்றுவதில்லை. ஜனாதிபதி கலந்துகொள்ளும் கூட்டங்களில், அவரே தேர்தல் சட்டங்களை மீறுகின்றார் என்றும் சாடினார்.

# ‘தேர்தல் மூலம் நாடாளுமன்றத்தை தூய்மைப்படுத்த வேண்டும்’

இம்முறை நாடாளுமன்றத் தேர்தலைப் பயன்படுத்தி, நாடாளுமன்றத்தை மக்கள் தூய்மையாக்க வேண்டுமெனத் தெரிவித்துள்ள தேசிய மக்கள் சக்தியின் வேட்பாளர் அநுரகுமார திஸாநாயக்க, பாரிய குற்றங்களுடன் தொடர்புடையவர்களே நாடாளுமன்றத்துக்கு அனுப்பி வைக்கப்படுகின்றனர் எனவும் குற்றஞ்சாட்டியுள்ளார்.

தனியார் ஊடகமொன்றுக்கு வழங்கிய செவ்வியிலேயே, அவர் இக்கருத்தைத் தெரிவித்துள்ளார்.

அத்துடன், நாட்டின் நிதியைப் பாதுகாப்பதற்கும் அதனைக்கொண்டு அபிவிருத்தி வேலைத்திட்டங்களை முன்னெடுக்கவுமே, நாட்டு மக்கள் 225 உறுப்பினர்களைத் தெரிவுசெய்து நாடாளுமன்றத்துக்கு அனுப்புகின்றனர் எனவும் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றமானது, அதியுயர் சபை என்றே அரசமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால்,

**“ பொலிஸார் மீது மிளகாய் தூளை வீசுகிறார்கள் இவ்வாறு பாரக்கின்றபோது, நாட்டில் பாரியக் குற்றங்களைப் புரிந்தவர்களே நாடாளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்றனர் எனவும் தெரிவித்துள்ளார்**

கொள்கையில்லாதவர்களே நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கின்றனர். அதாவது, நாடாளுமன்றத்துக்கு தெரிவுசெய்யப்பட்ட பின்னர், அங்கும் இங்குமாக அவர்கள் கட்சித்தாவுகின்றனர் எனவும் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்துக்குக் கத்தி, மிளகாய்த்தூள் என்பவற்றை கொண்டுவருகின்றனர். சபாநாயகரின் ஆசனத்தில் தண்ணீரை ஊற்றுகிறார்கள், பொலிஸார் மீது மிளகாய்த் தூளை வீசுகிறார்கள் அந்தவகையில், நாட்டில் பாரிய குற்றங்களைப் புரிந்தவர்களே நாடாளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்றனர் எனவும் தெரிவித்துள்ளார்.






ஐக்கிய தேசிய கட்சியின் மத்திய கொழும்பு அமைப்பாளராக, பைரூஸ் ஹாஜியார் நேற்று (22) நியமிக்கப்பட்டுள்ளார்.

# ‘பலமான அரசாங்கத்தை அமைக்க 2/3 அவசியம்’

நாட்டைப் புதிய பாதையில் கொண்டு செல்ல, கிராம மட்டத்திலிருந்து மாற்றத்தை ஏற்படுத்த வேண்டுமெனத் தெரிவித்த ஸ்ரீ லங்கா சுதந்திர பொதுஜன முன்னணியின் அநுராதபுரம் மாவட்ட வேட்பாளர் துமிந்த திஸாநாயக்க, வாக்களிப்பதற்கு, இரு வாரங்கள் மாத்திரமே இருப்பதால், மக்கள் சிந்தித்து வாக்களிக்க வேண்டுமெனவும் தெரிவித்தார்.

எப்பாவல பிரதேசத்தில், நேற்று (22) நடைபெற்ற மக்கள் சந்திப்பிலேயே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது தொடர்ந்து



**“ அரசாங்கத்தை அமைக்க எமக்கு வாக்களிக்க வேண்டுமெனக் கோரியிருந்தோம். ஆனால், இம்முறை அதில் மாற்றம் ஏற்பட்டுள்ளது. மூன்றிலிரண்டு பெரும்பான்மையை வழங்குங்கள் என்றே கூறிவருகிறோம் என்றார்**

உரையாற்றிய அவர், கடந்த பொதுத் தேர்தலின்போது, அரசாங்கத்தை அமைக்க எமக்கு வாக்களிக்க வேண்டுமெனக் கோரியிருந்தோம். ஆனால் இம்முறை, அதில் மாற்றம் ஏற்பட்டுள்ளது. மூன்றிலிரண்டுப் பெரும்பான்மையை வழங்குங்கள் என்றே கூறிவருகிறோம் என்றார்.

அதாவது, பலமான அரசாங்கம் ஒன்றை அமைக்கவே இவ்வாறு கோருவதாகத் தெரிவித்த அவர், இன, மத பேதங்களை ஒருபுறம் வைத்துவிட்டு, அனைவரும் ஒன்றாக இணைந்து இத்தேர்தலை வெற்றிக்கொள்ள வேண்டும் எனவும் தெரிவித்தார்.


## பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகளின் சட்டத்தின் பிரிவு 9 (1) விதிகளின் கீழ் கீழ்க்கானும் கம்பனியின் கீழே விபரிக்கப்பட்டுள்ளவாறு கூட்டிணைக்கப்பட்டுள்ளது என இத்தால் வழங்கபடுகின்ற அறிவித்தல்.

**ஸ்வுன்தி எண்ட கம்பனி (பீவீடி) எல்டிடீ**
**PV - 116713**
இல. 523/15, தேசத் மாவத்தை, லேக் வீதி, தலங்கம தெற்கு.

**ஐரோ இனோவேட் (பீவீடி) எல்டிடீ**
**PV - 00224508**
இல. 120/4, வத்தேகெதர வீதி, மாஹாரகம.

**ஓமெக்ஸ் கெயார் (பீவீடி) எல்டிடீ**
**PV - 00224103**
லெவல் 1, இல. 335, கொழும்பு வீதி, கம்பாஹா, 11000, சிறீ லங்கா.

**இசிவர அசப்புவ ஆயுர்வேத சென்டர் (பீவீடி) எல்டிடீ**
**PV - 00223950**
இல. 78, துடாவ வீதி, உஸ்வெல்ல, மகோனா.

**பணிப்பாளர்**


# ‘முஸ்லிம்களின் பிரச்சினைகளை ஹக்கீம், ரிஷாட்டால் தீர்க்க முடியாது’



முன்னாள் அமைச்சர்களான ரவூப் ஹக்கீம், ரிஷாட் பதியூதீன் ஆகியோரால், முஸ்லிம்களின் பிரச்சினைகளைத் தீர்க்க முடியாதெனத் தெரிவித்துள்ள ஜனாதிபதி சட்டத்தரணி அலி சப்ரி, பொய்களைக் கண்டு மீண்டும் மீண்டும் ஏமாற வேண்டாமெனவும் கோரிக்கை விடுத்துள்ளார்.

ஏற்றுக்கொண்டாலும் ஏற்றுக்கொள்ளவில்லை என்றாலும், சிங்கள பௌத்த பெரும்பான்மை மக்களின் விருப்பத்தையும் ஆசிர்வாதத்தையும் பெற்றுக்கொண்ட அணியால் மாத்திரமே, நாட்டைக் கட்டியெழுப்ப முடியுமெனவும் அவர் தெரிவித்துள்ளார்.

சிங்கள மற்றும் தமிழர்கள் மத்தியிலும் அடிப்படைவாதிகள் இருக்கின்றனர் என்று தெரிவித்துள்ள அவர், அவர்களைப் புறக்கணித்துவிட்டு, நல்ல மனிதர்களை ஒன்றாக இணைத்து, சகோதரத்துடன் வாழ வேண்டுமெனவும் கேட்டுக்கொண்டுள்ளார்.

முஸ்லிம் காங்கிரஸ், ரிஷாட்டினது கட்சியின் பின்னால் செல்வது பயனற்றது எனத் தெரிவித்துள்ள அலி சப்ரி, ஐக்கிய தேசிய கட்சி செல்லாக்காசாவிட்டது எனவும் தெரிவித்துள்ளார்.

அத்துடன், ஐக்கிய தேசிய கட்சியானது, பிரதமராவதற்கான போராட்டங்களைக் கைவிட்டுள்ளது என்றும் சஜித் சிறிகொத்தவை கைப்பற்றவே முயற்சிக்கிறார் எனவும் தெரிவித்துள்ளார்.


## வாகனங்கள் விற்பனைக்கு

IDEAL Finance ஐடியல் பினான்ஸ் லிமிடெட்

இல,299, டாக்டர், கொல்வின் ஆர். டி சில்வா மாவத்தை, யூனியன் பிளேஸ் - கொழும்பு 02.

| VEHI. NO | MAKE | MODEL | YEAR | LOCATION |
|---|---|---|---|---|
| ABS-6XXX | பஜாஜ் | 4Stroke | 2018 | மொனராகலை |
| QY-8XXX | மைந்த்ரா | Alfa Load Carrier | 2018 | கடவத்தை |
| LG-0XXX | சுசுகி | LE-DA63T | 2004 | |
| QY-7XXX | மைந்த்ரா | Alfa Load Carrier | 2017 | |

மொனராகலை
ரசிக - 0719 923 732

கடவத்தை
சமத் - 0714 940 020 / சாலங்க - 0703 561 461
ரவி - 0703 561 465


# ‘தேர்தல் கூட்டங்களில் சுகாதார வழிமுறைகள் பின்பற்றப்படுவதில்லை’

தேர்தல் கூட்டங்களின்போது, அரசியல் கட்சிகள், அதன் ஏற்பாட்டாளர்கள் எவ்விதச் சுகாதார வழிமுறைகளையும் பின்பற்றுவதில்லையெனக் குற்றஞ்சாட்டிய பெப்ரல் அமைப்பு, பொலிஸாரும் இந்த விடயத்தில் மௌனம் காக்கின்றனர் எனவும் தெரிவித்துள்ளது.

இந்த விடயம் குறித்து, பிரதிப் பொலிஸ் மா அதிபருக்குக் கடிதம் மூலம் அறிவித்துள்ளதாக, மேற்படி அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹன ஹெட்டியாரச்சி தெரிவித்துள்ளார்.

அத்துடன், சுகாதார வழிமுறைகளைப் பின்பற்றாது அரசியல்



கூட்டங்களை நடத்துவோருக்கு எதிராக, பொலிஸார் நடவடிக்கை எடுப்பது குறித்துக் காண முடிவதில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

கொவிட் 19 பரவலைக் கட்டுப்படுத்துவதற்காக, பொலிஸார் சுகாதாரத் துறையினருடன் இணைந்து, கடந்த மூன்று மாதங்களில் மேற்கொண்ட செயற்பாடுகளுக்கு மதிப்பளிப்பதாகத் தெரிவித்துள்ள அவர், சுகாதார வழிகாட்டல்கள், அரச வர்த்தமானியில் வெளியிடப்பட்டிருப்பினும், அரசியல் கூட்டங்களை நடத்துவோர், சுகாதார வழிமுறைகளை முறையாகப் பின்பற்றுவதில்லை எனவும் தெரிவித்துள்ளார்.

இத்தகைய நிலையானது, சுகாதாரத்துக்குப் பாரிய அச்சுறுத்தலை ஏற்படுத்துமென, ரோஹன ஹெட்டியாரச்சி தெரிவித்துள்ளதுடன், இதற்கு உரிய நடவடிக்கைகளை எடுக்குமாறு, பிரதிப் பொலிஸ் மா அதிபருக்குக் கடிதம் மூலம் அறிவித்துள்ளார்.

பின்தங்கிய கிராமத்தைச் சேர்ந்த


# 52 பேர் வாக்களிக்க ஒரு வாக்குச் சாவடி

■ துசித குமார

அரச பொதுக் கட்டடங்களோ அல்லது விகாரையோ இல்லாத களுத்துறை மாவட்டத்தின் - களுகந்தாவ பகுதியில், தற்காலிக வாக்குச் சாவடி ஒன்றை அமைத்து, மக்கள் வாக்களிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு ஆலோசனை வழங்கியுள்ளதாக, களுத்துறை மாவட்டத் தெரிவத்தாட்சி அதிகாரி யூ.டீ.சி ஜயலால் தெரிவித்தார்.

மேற்படி வாக்களிப்பு நிலையமானது, களுத்துறை மாவட்டத்திலேயே மிகவும் குறைந்தளவான, 52 வாக்காளர்களைக் கொண்டுள்ளதாகவும் மிகவும் பின்தங்கிய இக்கிராமத்தில், சுமார் 20 குடும்பங்கள் வசித்து வருகின்றனரெனவும் தெரிவிக்கப்படுகிறது.

மேல் மாகாணத்திலுள்ள மிகவும் பின்தங்கிய கிராமமாக இக்கிராமம் விளங்குகிறது. கலவானை,



அத்வெல்தொட்ட, சிங்கராஜ, திக்ஹேன வீதி ஊடாக, 17 கிலோ மீற்றர் தொலைவில், களுவந்தாவ என்ற இக்கிராமம் அமைந்துள்ளது. இங்குள்ள அனைவரும், கித்துள் உற்பத்தியில் ஈடுபடுபவர்கள் எனவும் தெரிவிக்கப்படுகிறது.




ஜனநாயகப் போராளிகள் கட்சி

# த.தே.கூக்கு ஆதரவு

■ வடமலை ராஜ்குமார், கதிரவன், அ.அச்சுதன்

நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில், ஜனநாயகப் போராளிகள் கட்சியின் மத்திய குழுவின் தீர்மானத்துக்கு அமைய, தமிழ்த் தேசிய கூட்டமைப்புக்கு ஆதரவு வழங்கியுள்ளது.

இது தொடர்பாக, திருகோணமலையில் உள்ள தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனின் இல்லத்தில் சம்பந்தனுக்கும் ஜனநாயகப் போராளிகள் கட்சியினருக்கும் இடையே நேற்று (22) நடைபெற்ற ஒரு கலந்துரையாடலின் பின்னர் ஊடகங்களுக்கு அறிவிக்கப்பட்டது.

இது தொடர்பில் இரா.சம்பந்தன் கருத்துத் தெரிவிக்கையில், "நாடாளுமன்றத் தேர்தலில், வடக்கிலும் கிழக்கிலும் ஜனநாயகப் போராளிகள் கட்சி தமது ஆதரவை எமக்கு வழங்கவுள்ளார்கள்.



நாடாளுமன்றத் தேர்தல் முடிவடைந்த பிறகும் நாம் இணைந்து செயற்பட இருக்கின்றோம்.

"தமிழ் மக்களுடைய தீர்வுக்காக எவ்வாறான செயற்பாடுகளை முன்னெடுப்பது தொடர்பாக நாம் திறந்த மனதுடன் பேசவுள்ளோம்.

" ஒருமித்த நாட்டுக்குள் பிரிபடாத நாட்டுக்குள் எமது மக்கள் கௌரவமாக, சுதந்திரமாக, சமத்துவமாக வாழவேண்டும் என்ற நோக்கிலே நாம் செயற்படுவோம்" என்றார்.

இக்கலந்துரையாடல் தொடர்பாக ஜனநாயகப் போராளிகள் கட்சியின் செயலாளர் கதிர் கருத்துரைக்கையில், "ஜனநாயகப் போராளிகள் கட்சியானது, தமிழ்த் தேசியம் தொடர்பாக சம்பந்தன் ஐயாவுடன் பல விடயங்களைக் கலந்துரையாடியுள்ளது. எதிர்காலத்தில் எவ்வாறு தமிழ்த் தேசியத்தைப் பலப்படுத்துவது என்பது தொடர்பாகவும் ஐயாவோடு கலந்துரையாடியுள்ளோம்.

"முன்னாள் போராளிகள் தொடர்ச்சியாக, தமிழ்த் தேசிய கூட்டமைப்புடன் பயணிப்பதாகத் தெரிவித்துள்ளோம். தமிழர்களுடைய உரிமையைப் பெறுவதற்கு நாம் ஜனநாயக ரீதியாக உறுதியாகவும் நிதானமாகவும் பயணித்து வருகின்றோம் என்பதை ஐயா எமக்குத் தெளிவாகக் கூறியிருந்தார்" என்றார்.

# கதிர்காமத்தில் அன்னதானம் நிறுத்தம்

■ சகா

நாட்டின் கொரோனா வைரஸ் சூழ்நிலை கருதி, கதிர்காம ஆடிவேல் விழாவையொட்டி நடைபெற்று வந்த அன்னதானம், இம்முறை நிறுத்தப்பட்டுள்ளதாக, அன்னதான சபையின் இணைப்பாளர் எஸ். ஞானசுந்தரம் தெரிவித்தார்.

இந்துக் கலாசாரத் திணைக்களத்தின் கதிர்காம இந்து யாத்திரிகர் விடுதியில், சிவபூமி அன்னதான தொண்டர் சபையினரால் கடந்த 17 வருடகாலமாக அன்னதானம் நடைபெற்றுவந்தது. ஆனால், இம்முறை அதனை நடத்தக்கூடிய சூழ்நிலை இல்லையென, இணைப்பாளர் எஸ். ஞானசுந்தரம் தெரிவித்தார்.

இதேவேளை, கதிர்காமத்துக்கான விசேட பஸ்சேவைகளும் இம்முறை இரத்துச் செய்யப்பட்டுள்ளன.

கதிர்காமம், உகந்தமலைமுருகன் கோவில்களில் ஆடிவேல் விழாக் காலங்களில் மேற்கொள்ளப்படும் வழமையான விசேட போக்குவரத்து ஒழுங்குகள் மேற்கொள்ளப்படவில்லை.

இதன்படி, கல்முனையிலிருந்து கதிர்காமத்துக்கும் உகந்தைக்குமான பஸ் சேவைகள் இம்முறை நடத்தப்படவில்லையென, கல்முனைச்சாலை அத்தியட்சகர் வெள்ளத்தம்பி ஜௌபர் தெரிவித்தார்.

இச்சேவைகளால் கடந்த காலங்களில் டிப்போவுக்கு மிகுந்த வருமானம் கிடைக்கப் பெற்றிருந்ததாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

# ஹெரோய்னுடன் ஒருவர் கைது

■ எப்.முபாரக்

திருகோணமலை, சூரியபுர பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் 423 மில்லிகிராம் ஹெரோய்ன் போதைப்பொருளுடன் நபரொருவரை, நேற்று (22) கைது செய்துள்ளதாக, சூரியபுர பொலிஸார் தெரிவித்தனர்.

பாணந்துறை பகுதியைச் சேர்ந்த 38 வயதுடைய ஒருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபர், பாணந்துறையிலிருந்து வியாபார நடவடிக்கைக்காக திருகோணமலை, சூரியபுர பகுதிக்குச் சென்ற நிலையிலே, இவர் தொடர்பாக சூரியபுர பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலையடுத்து 423 மில்லிகிராம் ஹெரோய்ன் போதைப்பொருளுடன் கைதுசெய்யப்பட்டார் என, சூரியபுர பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

வாக்களிக்கச் செல்லும் மக்களுக்கு

# சுகாதார விடயங்கள் குறித்து விழிப்புணர்வு

■ துவாரகஷான்

நாட்டில் கொரோனா வைரஸ் அச்சம் காரணமாக, பொதுத் தேர்தல் தினத்தன்று வாக்களிக்கச் செல்லவுள்ள மக்கள், எவ்வாறான சுகாதார விடயங்களைப் பின்பற்றுவது குறித்தான விழிப்புணர்வு வேலைத்திட்டத்தை, பிரிடோ நிறுவனம் முன்னெடுத்து வருகின்றது.

இதன்படி, மலையகப் பிரதேசத்திலுள்ள வாக்காளர்கள் மத்தியில், தேர்தல் நடைபெறும் தினத்தில் வாக்குச்சாவடிக்குச் செல்லும் நபர்கள் முகக்கவசம் அணிதல், கிருமித் தொற்று நீக்கி பாவிக்கும் முறை, சமூக இடைவெளியைப் பின்பற்றுதல், நேரத்துடன் வாக்களிப்பு நிலையங்களுக்குச் செல்லுதல், பேனா கொண்டு செல்லுதல், வாக்களித்த பின்பு வீடுகளுக்குத் திரும்புதல் போன்ற விடயங்கள் தொடர்பாக விழிப்புணர்வு வேலைத்திட்டத்தை முன்னெடுக்கப்படுவதாக, நிறுவன தலைவர் மைக்கல் ஜோக்கிம் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், "தேர்தல் காலத்தில் வெளி மாவட்டங்களில் இருந்து வாக்களிப்பதற்காக அதிகமானவர்கள் வருகை தருவார்கள். இவர்கள் மத்தியிலும் இது தொடர்பான விழிப்புணர்வு முன்னெடுக்கப்படும்.

"தோட்டங்களில் இயங்கும் 200 முன்பள்ளி ஆசிரியர்களுக்கு இது தொடர்பான கையேடுகளும் விசேட பயிற்சிகளும் பிரிடோ நிறுவனத்தால் ஏற்கெனவே வழங்கப்பட்டுள்ளன.

"அத்தோடு, பொலிஸ் உத்தியோகத்தர்கள், கிராம சேவகர்கள், அரச ஊழியர்கள் ஆகியோர்களுக்கும் இது தொடர்பான கடிதங்கள், கையேடுகள் ஒப்படைக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன" என்றார்.

# வீடுகளுக்கு அனுப்பி வைப்பு...







முல்லைத்தீவு, கேப்பாபிலவு இராணுவப் படைத்தள தனிமைப்படுத்தல் கண்காணிப்பு நிலையத்தில், 14 நாள்கள் கண்காணிப்பினை நிறைவு செய்த 149 பேர், நேற்று (22) வீடுகளுக்கு அனுப்பிவைக்கப்பட்டனர்.
எதியோப்பியா நாட்டிலிருந்து நாடுதிரும்பியவர்கள், கட்டுநாயக்கா விமான நிலைத்தில் இருந்து தனிமைப்படுத்தல் நடவடிக்கைக்காக கேப்பாபிலவு இராணுவப் படைத்தள தனிமைப்படுத்தல் கண்காணிப்பு நிலையத்துக்கு அழைத்து வரப்பட்டனர்.
இவர்கள், 14 நாள்கள் கண்காணிப்பு, பிசிஆர் பரிசோதனையின் போது இவர்களுக்கு கொரோனா தொற்றுக் கண்டறியப்படாத நிலையில் இவர்கள் வீடுகளுக்கு அனுப்பிவைக்கப்பட்டனர்.

(படங்கள் – சண்முகம் தவசீலன்)

# மன்னாரில் கஞ்சாவுடன் ஒருவர் கைதாகினார்

■ எஸ்.றொகேரியன் லெம்பேட்



மன்னார், சின்னக்கருஸல் பகுதியில், கேரளா கஞ்சா பொதிகளுடன் குறித்த கிராமத்தைச் சேர்ந்த 32 வயதுடைய நபரொருவர், நேற்று முன்தினம் (21) இரவு மன்னார் மாவட்ட பொலிஸ் ஊழல் தடுப்பு பிரிவு அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளார்.

மூன்று பொதிகளில் பொதி செய்யப்பட்ட சுமார் 6 இலட்சம் ரூபாய் பெறுமதியான 6 கிலோ 90 கிராம் எடை கொண்ட கேரளா கஞ்சா இவரிடமிருந்து கைப்பற்றப்பட்டுள்ளது.

மேலதிக விசாரணைகளை மன்னார் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

பிரதமர் பங்குபற்றும் கூட்டம்

# நற்பிட்டிமுனைக்கு மாற்றம்

■ அஸ்லம் எஸ்.மௌலானா

சாய்ந்தமருது பிரதேசத்தில் இன்று (23) நடத்துவதற்குத் திட்டமிடப்பட்டிருந்த பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ பங்குபற்றும் தேர்தல் பிரசாரப் பொதுக் கூட்டம், திடீரென கல்முனை, நற்பிட்டிமுனைக்கு மாற்றப்பட்டுள்ளது.

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் திகாமடுல்ல மாவட்ட வேட்பாளர் ரிஸ்லி முஸ்தபாவை ஆதரித்து, முன்னாள் உயர் கல்வி பிரதி அமைச்சர் மயோன் முஸ்தபா தலைமையில், சாய்ந்தமருது பௌஸி விளையாட்டு மைதானத்தில், இன்று பிற்பகல் 03 மணியளவில் இப்பிரசாரப் பொதுக் கூட்டம் நடைபெறும் என்று முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது.



கல்முனை மாநகர சபையின் கீழுள்ள சாய்ந்தமருது பௌஸி மைதானம் இக்கூட்டத்துக்காக ஏற்பாட்டாளர்களால் முன்பதிவு செய்யப்பட்டிருந்த நிலையில், தற்போது இக்கூட்டம், நற்பிட்டிமுனை விளையாட்டு மைதானத்தில் நடைபெறுமென அறிவிக்கப்படுகிறது.

ஆயுள் தண்டனை விதிக்கப்பட்ட

# கண்ணதாசன் விடுதலை

■ எம்.றொசாந்த், என்.ராஜ்

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்புக்கு கட்டாய ஆட்சேர்ப்பில் ஈடுபட்டார் என்ற குற்றச்சாட்டில், வவுனியா மேல் நீதிமன்றத்தால் ஆயுட்கால சிறைத் தண்டனை விதிக்கப்பட்ட யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முன்னாள் மிருதங்க விரிவுரையாளர் கண்ணதாசன், அந்தக் குற்றத்திலிருந்து விடுதலை செய்யப்பட்டார்.

அத்துடன், இந்த வழக்கை மேல் நீதிமன்றில் மீள விளக்கத்துக்கு எடுக்கவும் மேன்முறையீட்டு நீதிமன்றம் கட்டளையிட்டது.

கண்ணதாசனால் தாக்கல் செய்யப்பட்ட மேன்முறையீட்டின் அடிப்படையில் அவரை விடுவித்து, மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்று (22) கட்டளை வழங்கியது.

இந்த மேன்முறையீட்டு வழக்கின் விளக்கம், சட்டத்தரணி சுமந்திரனால் எழுத்தில் வழங்கப்பட்ட நிலையில், கடந்த மே மாதம் 13ஆம் திகதி வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இவ்வாறு கண்ணதாசனால் மேன்முறையீடு செய்யப்பட்டு எடுத்துக்கொள்ளப்பட்ட வழக்கில் வவுனியா மேல் நீதிமன்றத்தால் வழங்கப்படுட்ள்ள தீர்ப்பை நியாயப்படுத்த முடியவில்லை என்றும் அதனால் மீண்டும் விசாரணை வேண்டுமென, அன்றைய தினம் சட்ட மா அதிபர் திணைக்களம் சார்பில் முன்னிலையான பிரதி மன்றாடியார் குமார் ரட்ணம் விண்ணப்பத்தை முன்வைத்தார்.

ஏற்கெனவே இடம்பெற்ற விசாரணையை நியாயப்படுத்த முடியவில்லை என சட்டமா அதிபர் திணைக்களம் ஏற்றுக்கொண்டதன் அடிப்படையில் குற்றம் சாட்டப்பட்டவர் விடுவிக்கப்பட வேண்டுமே அன்றி, மீள் விசாரணைக்கு இணங்க முடியாது என ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் மன்றுரைத்திருந்தார்.

அன்றைய தினம் குற்றவாளியும் மன்றுக்கு அழைத்துவரப்பட்டிருக்கவில்லை. அதனால் குற்றம் சாட்டப்பட்டவரையும் அழைத்துவருமாறும் மீள் விசாரணையா அல்லது விடுதலையா என்பதற்கான கட்டளையை வழங்குவதாக வழக்கு, நேற்றைய தினத்துக்கு ஒத்திவைக்கப்பட்டிருந்தது.

இதன் அடிப்படையில் இந்த வழக்கு நேற்று எடுத்துக்கொள்ளப்பட்ட போதே, அவர் விடுதலை செய்யப்பட்டார்.

மு.கா உறுப்பினர் ஹரீஸ்

# மக்கள் காங்கிரஸில் இணைவு

■ ஹஸ்பர் ஏ ஹலீம்

ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியினுடைய உயர்பீட உறுப்பினரும் மூதூர் பிரதேச சபை உறுப்பினருமாகிய ஏ.எம். ஹரீஸ், அவருடைய ஆதரவாளர்களுடன், அகில இலங்கை மக்கள் காங்கிரஸில் உத்தியோகபூர்வமாக இணைந்துகொண்டார் .

இந்த நிகழ்வு, மூதூர் பேர்ல் கிரேன்ட் ஹோட்டலில் நேற்று முன்தினம் (21) நடைபெற்றதோடு, அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தேசிய அமைப்பாளரும் ஐக்கிய மக்கள் சக்தியின் திருகோணமலை மாவட்ட முதன்மை வேட்பாளருமான அப்துல்லா மஃறூபின் முன்னிலையில் இணைந்துகொண்டார்.

இதில் முன்னாள் மாகாண சபை உறுப்பினர் ஆர்.எம். அன்வர், தம்பலகாம் பிரதேச சபை தவிசாளர் எச்.தாலிப் அலி உட்பட உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள், கட்சி ஆதரவாளர்கள் எனப் பலர் பங்கேற்றனர்.

# நானுஓயா விபத்தில் இளைஞன் உயிரிழப்பு

## 75 அடி பள்ளத்தில் பாய்ந்தது ஓட்டோ

■ டி.சந்ரு



நானுஓயா- கிலாசோ ஆர்.டி1 பகுதியில், ஓட்டோவொன்று

வீதியை விட்டு விலகி, 75 அடி பள்ளத்தில் பாய்ந்து விபத்துக்குள்ளானதில், நானுஓயா, பெரகும்பரவைச் சேர்ந்த, கே.யோகேஸ்வரன் (வயது 20) என்ற இளைஞன் உயிழந்துள்ளாரென, நானுஓயா பொலிஸார் தெரிவித்தனர்.

இவர், நானுஓயாவிலிருந்து கிலாசோ மேற்பிரிவுக்கு நேற்று முன்தினம் (21) இரவு 10 மணியளவில் பயணித்த ஓட்டோவில் பின்னால் அமர்ந்திருந்து பயணித்துள்ளார்.

இதன்போது விபத்துச் சம்பவித்துள்ளது. அதில், பலத்த காயங்களுக்கு உள்ளான ஓட்டோ சாரதி, அங்கிருந்து தப்பிச்செல்ல முற்பட்டபோது, கைதுசெய்யப்பட்டு, நுவரெலிய மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர்.

பிரேத பரிசோதனைக்காக, சடலம் நுவரெலியா மாவட்ட வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளதெனத் தெரிவித்த பொலிஸார் மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்படுகின்றன என்றனர்.

தேர்தல் தொடர்பாக

# வேட்பாளர்களுக்குத் தெளிவூட்டல்

■ க.அகரன்

நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களுக்கான தெளிவூட்டல் கூட்டமொன்று, வவுனியா மாவட்டச் செயலகத்தில் நேற்று (22) நடைபெற்றது.

இதன்போது, கொரோனா வைரஸ் தாக்கத்துக்கு மத்தியில் தேர்தல் காலத்தில் கடைப்பிடிக்கவேண்டிய சுகாதார நடைமுறைகள் தொடர்பாக வேட்பாளர்களுக்குத் தெளிவூட்டப்பட்டன.



வவுனியா மாவட்ட தேர்தல் திணைக்களத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற இக்கூட்டத்தில், மாவட்ட அரச அதிபர் சமன்பந்துலசேன, பொலிஸ் அத்தியட்சகர் திஸ்சலால் சில்வா, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், காதர் மஸ்தான், இ.கனகரட்ணம், ஏனைய வேட்பாளர்கள் கலந்துகொண்டனர்.

நிகழ்வில் வளவாளராக கலந்துகொண்ட வவுனியா பிரதிப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அ.மகேந்திரன், தேர்தல் பிரசாரம், வாக்களிப்பு நடவடிக்கைகளில் கையாளவேண்டிய சுகாதார நடைமுறைகள் தொடர்பாக வேட்பாளர்களுக்குத் தெளிவூட்டினார்.

# 'நல்லிணக்கத்தை கட்டியெழுப்புங்கள்'

■ எம்.எஸ்.எம்.நூர்தீன்

நல்லிணக்கத்துக்கான எண்ணக்கரு சமுகத்தின் அடிமட்டத்திலிருந்தே கட்டியெழுப்பப்படல் வேண்டுமென, மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பிராந்திய இணைப்பாளர் அப்துல் அஸீஸ் தெரிவித்தார்.

முஸ்லிம் பெண்கள் ஆராய்ச்சி செயல் முன்னணியின் ஏற்பாட்டில், அதன் செயற்பாட்டு உறுப்பினர் மௌலவி யு.எல். எச். மக்கி தலைமையில் மாவிலங்கதுறை கிராம அபிவிருத்தி சங்க மண்டபத்தில், நேற்று (22) நடைபெற்ற கலந்துரையாடலின்போது, வளவாளராக கருத்துரை வழங்கிய அப்துல் அஸீஸ் மேற்கண்டவாறு கூறினார்.

"பரஸ்பர புரிந்துணர்வுகளின் ஊடாகவே மக்கள் மத்தியில் மனிதத்தை மீளக் கட்டியெழுப்ப முடியும்" எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# ETI வைப்பாளர்களுக்கு காப்பீட்டு இழப்பீடு

ETI, (ETIFL) ஆகிய நிதி நிறுவனங்களில் நாளாந்த வைப்பீட்டுகளை செய்தோருக்கு, இலங்கையின் வைப்பு காப்பீடு மற்றும் பணப்புழக்க ஆதரவு நிதியத்தால் காப்பீட்டு இழப்பீடு வழங்க, இலங்கை மத்திய வங்கி நடவடிக்கை எடுத்துள்ளது.

ETI நிதி நிறுவனம், (ETIFL) இன் வணிகச் செயற்பாடுகளை இலங்கை மத்திய வங்கியின் நிதிச்சபை, நிறுத்தி வைத்தது அதன்பின்னரே மேற்கண்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என மத்திய வங்கி அறிவித்துள்ளது.

அதனடிப்படையில், நாடளாவிய ரீதியிலுள்ள மக்கள் வங்கி கிளைகள் 45இன் ஊடாக, ஜூலை 25ஆம் திகதி முதல், காப்பீட்டு இழப்பீடு வழங்கப்படும். வைப்பாளர் ஒருவருக்கு ஆகக் கூடுதலாக 6 இலட்சம் ரூபாய் காப்பீடு இழப்பீடு வழங்கப்படுமென இலங்கை மத்திய வங்கி அறிவித்துள்ளது.

சட்டரீதியிலான வைப்பீட்டாளர்களுக்கு காப்பீடு இழப்பீடு தொகையை வழங்குவதற்காக, நிதியம் ஆரம்பிக்கப் பட்டுள்ளது. இந்தக் கொடுப்பனவு செயற்பாடுகளை திறம்பட முன்னெடுப்பதற்கு சகல நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளனவென, மத்திய வங்கி அறிவித்துள்ளது.

வைப்புச் சான்றிதழ், தேசிய அடையாள அட்டை ஆகியவற்றின் பிரதிகளை அருகிலிருக்கும் மக்கள் வங்கியிடம் கையளிப்பதன் ஊடாக, காப்பீட்டு இழப்பீட்டை பெற்றுக்கொள்ளலாம் எனத் தெரிவித்துள்ள இலங்கை மத்திய வங்கி, இதுதொடர்பிலான மேலதிக விவரங்களை 0112-481594,0112-481320,0112-481617,0112-481703 ஆகிய இலக்கங்களுக்கு தொடர்பை ஏற்படுத்தி மக்கள் வங்கியின் ஊடாக தகவல்களை பெற்றுக்கொள்ளலாம். இன்றேல், 0112-398788 அல்லது 0112-477261 ஆகிய இலங்கங்களுடன் இலங்கை மத்திய வங்கியுடன் தொடர்பை ஏற்படுத்தி மேலதிக விவரங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

## ‘வாக்களிக்கச் செல்வோருக்கு விசேட போக்குவரத்துச் சேவை’

நாடாளுமன்றத் தேர்தலில் வாக்களிக்கச் செல்லும் வாக்காளர்களின் நலன்கருதி, விசேட போக்குவரத்து ஏற்பாடுகள், ஜூலை 31ஆம் திகதிமுதல் முன்னெடுக்கப்படுமெனத் தெரிவித்த போக்குவரத்து அமைச்சர் மஹிந்த அமரவீர, கொழும்பு உள்ளிட்ட சனநெரிசல் மிக்க நகரங்களிலிருந்து, தூரப்பிரதேசங்களுக்குச் செல்வோரின் நலன்கருதியே இந்த ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்றார்.

அரச மற்றும் தனியார் துறைகளில் சேவையாற்றும் பணியாளர்களுக்கு ஜூலை 31க்குப் பின்னர் வாராந்த விடுமுறைகள் உள்ளன. ஓகஸ்ட் 3ஆம் திகதி போயா தினமாகும். ஆகையால், ஓகஸ்ட் 5ஆம் திகதியன்று நடத்தப்படும் பொதுத் தேர்தலுக்கு வாக்களிக்க செல்வோரின் எண்ணிக்கை அதிகரிக்கப்படுமென எதிர்ப்பார்ப்பதாக அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

அமைச்சின் கேட்போர் கூட்டத்தில் நேற்று (22) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரை க்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்த அவர், தனியார் பஸ்களுக்கு மேலதிகமாக, இலங்கை போக்குவரத்து சபைக்குச் சொந்தமான 600 பஸ்களும் சேவையில் இணைத்துகொள்ளப்படவுள்ளன என்றார்.

அதுமட்டுமன்றி, வாக்களித்ததன் பின்னர், சொந்த ஊர்களிலிருந்து மீண்டும் திரும்புவதற்கு, ஓகஸ்ட் 7ஆம் திகதி முதல் 9ஆம் திகதி வரையிலும் அந்த விசேட போக்குவரத்துச் சேவைகள் நடத்தப்படும் என்றார்.



## ஆர்ப்பாட்டம்...

கொழும்புத் துறைமுக வளங்களை பாதுகாக்குமாறு கோரி துறைமுக தொழிற்சங்கங்கள் நேற்று (22) பாரிய ஆர்ப்பாட்டமொன்றை முன்னெடுத்தனர். படம் குஷான் பத்திராஜா

புவனேகபாஹு விவகாரம்;

## அறிக்கை கோரினார் சட்டமா அதிபர்

13ஆம் நூற்றாண்டில், குருநாகல் இராசதானிக்கு சொந்தமான, புவனேகபாஹு ஹோட்டல் என்றழைக்கப்படும், இரண்டாம் புவனேகபாஹு மன்னனின் சட்டசபை மண்டபம், இடித்தழிக்கப்பட்டமை தொடர்பில், ஜூலை 31ஆம் திகதிக்கு முன்னர் அறிக்கையை சமர்ப்பிக்குமாறு, பதில் பொலிஸ் மா அதிபர் சீ.டி விக்ரமரத்னவுக்கு சட்டமா அதிபர் தப்புல டி லிவேரா, நேற்று (22) பணித்துள்ளார்.






## ‘தலைமைத் தெரிவுக்கு இரகசிய வாக்கெடுப்பு’



ஐக்கிய தேசிய கட்சியின் அடுத்த தலைமையைத் தெரிவுச் செய்வதற்கு, இரகசிய வாக்கெடுப்பு நடத்தப்படுமெனத் தெரிவித்துள்ள அக்கட்சியின் தேசிய அமைப்பாளரும் நுவரெலியா மாவட்ட வேட்பாளருமான நவீன் திஸாநாயக்க, இது ஜனநாயக முறையாகும். இதனால், போட்டிகள் அதிகரிக்கும் என்றார்.

கினிகத்ஹேனையில் நேற்று (22) இடம்பெற்ற, தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஐக்கிய தேசிய கட்சியின் உப-தலைவராக சஜித் பிரேமதாஸ, 2011ஆம் ஆண்டு இரகசிய வாக்கெடுப்பின் ஊடாகவே தேர்ந்தெடுக்கப்பட்டார்.

பிணைமுறி மோசடி தொடர்பில், தேர்தல் மேடைகளில் பேசுவது, சேறுபூசும் நடவடிக்கையாகும்; ஏனெனில், அது தொடர்பிலான அறிக்கை வந்திருக்கிறது. ஜனாதிபதி ஆணைக்குழுவும் நியமிக்கப்பட்டுள்ளது எனத் தெரிவித்த அவர், தவறிழைப்பவர்களுக்கு சட்டரீதியில் நடவடிக்கை எடுப்பதே, கட்சியின் நிலைப்பாடாகும் என்றார்.

புவனேகபாஹு மன்னன் காலத்தில் கட்டப்பட்ட அரச சபை மண்டபத்தை இடித்தழித்தமை முற்றுமுழுதாக பிழையான செயற்பாடாகுமெனத் தெரிவித்த அவர், அந்த விவகாரம் தொடர்பிலான விசாரணைகள் நிறைவடையும் வரையிலும் குருநாகல் நகர சபையின் தலைவரை கைது செய்வது அவசியம்” என்றார்.

## தெவரப்பெரும மீது தாக்குதல்

**என். ஜெயரட்ணம்**

ஐக்கிய தேசிய கட்சியின் களுத்துறை மாவட்ட வேட்பாளர் பாலித தெவரப்பெரும, தாக்குதலுக்கு உள்ளான நிலையில், நாகொட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். களுத்துறை-மத்துகம, வெல்கந்தல பகுதியில் குடிநீர் திட்டமொன்று மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அதில், நிலத்தடியில் பதிக்கப்பட்ட, குழாய்களின் தரத்தை நேற்று (22) மாலை சோதனையிட அவர், முற்பட்டுள்ளார். இதன்போதே, தாக்கப்பட்டுள்ளார். அந்தத் திட்டத்தை முன்னெடுத்துவரும் ஒப்பந்தகாரரினால், பாலித தெவரப்பெரும தாக்கப்பட்டாரென தெரிவிக்கப்படும் அதேவேளை, இரு தரப்பினர்களுக்கு இடையில் மோதல் இடம்பெற்றுள்ளதாகவும் அதுதொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்ப டுகின்றனஎனவும் தெரிவிக்கப்படுகிறது.



தனிமைப்படுத்தப்பட்டிருப்போர்

## ஜூலை 31இல் வாக்களிப்பு

கொரோனா வைரஸ் காரணமாக, தனிமைப்படுத்தல் முகாம்களில் தனிமைப்படுத்தப்பட்டிருக்கும் வாக்காளர்கள், தங்களுடைய வாக்குகளை அளிப்பதற்காக, ஜூலை 31ஆம் திகதியன்று ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என தேர்தல் ஆணைக்குழுவின் தவிசாளர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்தார்.

தேர்தல் ஆணைக்குழுவில் நடைபெற்ற கலந்துரையாடலின் போதே, மேற்படி விவகாரம் தொடர்பில் ஆராயப்பட்டு, திகதி குறிக்கப்பட்டதென ஆணைக்குழு தகவல்கள் தெரிவிக்கின்றன.




# தேசியபட்டியலும் சூழ்ச்சி அரசியலும்...

நாடாளுமன்றத் தேர்தலில் தேசியபட்டியல் மூலம் தெரிவுசெய்யப்படுபவர்கள் யார் என்ற கேள்வி அனைவருக்கும் எழுவது சகஜம். 225 உறுப்பினர்களைக்கொண்ட நாடாளுமன்றத்தில், 160 உறுப்பினர்கள் நேரடியாக மக்கள் தெரிவின் மூலமும், 36 உறுப்பினர்கள் ஒவ்வொரு மாகாணத்திலிருந்தும் தலா நான்கு போனஸ் ஆசனங்கள் என்ற தெரிவின் மூலமாகவும், 29 உறுப்பினர்கள் நேரடியாக தேசியபட்டியல் மூலமாகவும் நாடாளுமன்றத்துக்குத் தெரிவுசெய்யப்படுகிறார்கள்.

அதாவது, 196 உறுப்பினர்கள் மக்கள் ஆணையைப் பெற்றவர்களாகவும், மிகுதி 29 உறுப்பினர்களும் கட்சிகள் பெற்றுக்கொண்ட மொத்த வாக்குகளின் அடிப்படையில் பிரித்துக் கொடுக்கப்படும் தேசியபட்டியல் உறுப்பினர்களாகவும் நாடாளுமன்ற உறுப்பினர் என்னும் தகுதியைப் பெறுகின்றார்கள். 196 உறுப்பினர்களின் தெரிவுகளை எவரும் தடுத்துவிடமுடியாது. ஏனெனில், அவர்கள் நேரடியாக மக்கள் ஆணையைப் பெற்றவர்களாக இருக்கின்றார்கள். ஆனால், தேசியபட்டியல் மூலம் தெரிவுசெய்யப்படுகின்ற 29 நாடாளுமன்ற உறுப்பினர்களின் தெரிவுகளின்தான் குளறுபடிகள் இடம்பெறுகின்றன.

அகில இலங்கை ரீதியில் பதிவாகிய வாக்குகளில் ஒவ்வொரு கட்சிகளும் பெற்ற மொத்த வாக்குகளின் விகிதாசாரத்துக்கு ஏற்பவே தேசியபட்டியல் உறுப்பினர்கள் பிரிக்கப்படுகின்றனர். இந்நடைமுறைக்கிணங்க, துறைசார் நிபுணர்களாக இருக்கும் பலருக்கு மக்கள் செல்வாக்கைப் பெறமுடியாமல் இருப்பதால், அத்தகைய நிபுணர்களை நாடாளுமன்ற உறுப்பினர்களாகத் தெரிவுசெய்யும் நடைமுறையே பின்பற்றப்படுகின்றன. அதற்காகத்தான் தேசியபட்டியல் உறுப்புரிமை என்ற ஒன்றைக் கொண்டுவந்தார்கள்.

ஆனால், நடைமுறை அரசியலில் இதைப் பின்பற்றுவதில்லை என்பது துரதிர்ஷ்டவசமானது. பணபலம் உள்ளவர்களுக்கும், கட்சித் தலைவர்களின் வால்பிடிகளுக்கும், வாக்குக் கேட்டு மக்களால் நிராகரிக்கப்பட்டவர்களுக்கும் இத்தகைய தேசியபட்டியல் உறுப்புரிமையைத் தாரைவார்க்கும் நிலை நீடிக்கிறது. பொதுத் தேர்தலில் போட்டியிட்டுத் தோற்றுப்போனவர்களுக்குத் தேசியபட்டியல் வழங்கப்படமாட்டாது எனக் கட்சித் தலைவர்கள் மார்தட்டிக் கொண்டாலும், இறுதிவரை அதைக் கடைப்பிடிப்பதில்லை. கடந்தகாலங்களிலும், மக்களால் நிராகரிக்கப்பட்ட பலருக்குத் தேசியபட்டியல் உறுப்புரிமை தாரைவார்க்கப்பட்டிருந்தமை கண்கூடு.

இவ்வாறான நிலை நீடிப்பதை ஊக்கப்படுத்த முடியாது. தேர்தல் களத்தில் வாக்குச் சேகரிக்க முடியாமல் தோல்வியுற்றவர்களை மீண்டும் தேசியபட்டியலூடாக நாடாளுமன்றுக்குள் கொண்டுவருவது, மக்கள் ஆணையை மீறும் செயலாகும். உண்மையான துறைசார் நிபுணர்களை உள்வாங்கும் உத்தரவாதத்தைத் தேசிய கட்சிகள் வழங்க வேண்டும். தேசியபட்டியலின் மகத்துவத்தைப் பாதுகாக்கும் விதத்தில் அனைத்துக் கட்சிகளும் ஒருமித்துச் செயற்படவேண்டும். அப்படியான நிலை உருவானால்தான், துறைசார் நிபுணர்களை உள்ளடக்கிய உயரியசபை உயிர்பெறும்.

தமிழ்Mirror www.tamilmirror.lk

NO 8. HUNUPITIYA CROSS ROAD,
COLOMBO 2. P.O. BOX 1136
EDITORIAL:
TEL: 011 2 479 372-6,
011 2 479 479 (EX.375)
FAX: 011 2 304 114
MARKETING MANAGER
(DIR.) 011 2 479 822,
077 3421 476
CIRCULATION MANAGER
(DIR.) 2 479 672, 077 3 219 775,
SUBSCRIPTION MANAGER
(DIR.) 2 479 626, 2 479 628,
077 3 502 183
E-MAIL: tamilmirror@wijeya.lk

## தமிழ்மிரருக்கு எழுதுங்கள்



தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகையில் வெளியாகும் ஆக்கங்கள் தொடர்பான உங்களது கருத்துக்களையும் விமர்சனங்களையும் வரவேற்கிறோம். அத்துடன், உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகள் தொடர்பிலும் நீங்கள் எங்களுக்கு அறியத்தரலாம். மேலும், உங்கள் பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் நீங்கள் எங்களுக்கு எழுதி அனுப்பி வைக்கலாம். அவை உரிய காலத்தில் பிரசுரிக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகிறோம்.

தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
இலக்கம் 8, ஹுணுப்பிட்டிய குறுக்கு வீதி,
கொழும்பு – 02.
தொலைபேசி – 011-2479372-6
தொலைநகல் – 0112304114
மின்னஞ்சல் – tamilmirror@wijeya.lk




# தமிழ்த் தேசியமும் கறுப்பு ஜுலையும்

**இலட்சுமணன்**

இலங்கைத் தமிழ் இனத்துக்கு எதிராக, ஜே.ஆர். ஜெயவர்தன தலைமையிலான ஐ.தே.க அரசாங்கத்தின் உச்சபட்ச ஆசிர்வாதத்துடன், 1983.07.23 அன்று அரங்கேற்றப்பட்ட நாடு தழுவிய, இன வன்முறையாகிய 'கறுப்பு ஜுலை' யின் 37 ஆவது நினைவு தினம் இன்றாகும்.

யாழ்ப்பாணம், திருநெல்வேலி, தபால்பெட்டிச் சந்திக்கு அருகில், தமிழீழ விடுதலைப் புலிகளால் மேற்கொள்ளப்பட்ட கண்ணிவெடித் தாக்குதலில் 13 இராணுவத்தினர் கொல்லப்பட்டதைத் தொடர்ந்து, யாழ்ப்பாணம் எரியூட்டப்பட்டதுடன் வீதியில் போவோர் வருவோர் மீது எழுந்தமானத்துக்குத் துப்பாக்கிப்பிரயோகமும் மேற்கொள்ளப்பட்டது.

இராணுவத்தின் அடாவடித்தனங்கள் மிக மோசமான முறையில் யாழ்ப்பாணத்தில் முன்னெடுக்கப்பட்ட வேளையில், கொல்லப்பட்ட இராணுவத்தின் உடல்கள் தென்னிலங்கைக்கு எடுத்துச் செல்லப்பட்ட பின்னணியில், இலங்கைத் தீவு முழுவதும் தமிழருக்கு எதிரான வன்முறைகள் வெடித்தன.

கொழும்பு, மலையகம், காலி, கம்பஹா, கண்டி எனப் பல்வேறு இடங்களிலும் வசித்த தமிழர்களின் உடைமைகள் அழிக்கப்பட்டன; சொத்துகள் கொள்ளையிடப்பட்டு, தமிழ்ப் பெண்கள் மானபங்கப்படுத்தப்பட்டு, தமிழர்கள் உயிருடன் எரியூட்டப்பட்டனர். வடக்கு, கிழக்கு தவிர்ந்த ஏனைய இடங்களில் வசித்த அனைத்துத் தமிழர்களும் வடக்கு, கிழக்கு நோக்கி, அகதிகளாக வந்து சேர்ந்தனர். இந்த அவலம், சிங்கள இனவாத அரசாங்கத்தால் திட்டமிட்டு, ஒழுங்குபடுத்தப்பட்டு அரங்கேற்றப்பட்டிருந்தது.

இதன் எதிரொலிகளின் வெடிப்புத்தான், வடக்கிலும் கிழக்கிலும் பாதிக்கப்பட்ட மலையகத்தின் ஒரு பகுதியினரிடமும் ஆயுதப் போராட்டத்தின் மீது பற்றுறுதியை ஏற்படுத்தியது.

அன்றைய காலகட்டத்தில், சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்ற இருந்தவர்களும் தோற்றியவர்களும் க.பொ.த உயர் தரத்தில் கற்கப்புகுந்தவர்களும் பல்கலைக்கழக அனுமதிபெற்றவர்களும் தங்கள் கல்வியைத் தியாகம் செய்து கொண்டு, அலை அலையாக ஆயுதப்போராட்டப் பயிற்சிக்காக இந்தியாவுக்கும் யாழ்ப்பாணத்துக்கும் கிழக்கின் காடுகளுக்குள்ளும் புகுந்தனர்; ஆயுதப் பயிற்சிகளில் ஈடுபட்டனர். இந்த இன உணர்வும் ஆக்ரோஷமும் தமிழினத்தின் விடுதலையையும் உரிமைகளையும் அபிலாசைகளையும் உறுதிப்படுத்துவதற்கு அடிகோலியது.

விடுதலை உணர்வும் உணர்ச்சிக் கொந்தளிப்பும் உணர்ச்சிகளின் உச்சமும் இளைஞர்களை ரௌத்திரமும் ஆக்ரோஷமும் கொள்ளத் தூண்டியது. இதன் எதிரொலி, இலங்கை தீவு 1984 நடுப்பகுதியில் ஆயுதப் போராட்டத்தின் வெளிப்பாடுகளை இனங்காணத் தொடங்கியது.

இயக்கங்களின் அரசியல் பிரசாரங்களும் இயக்கங்கள் தொடர்பான கருத்தாடல்களும் இயக்கப் பிரசாரங்களும் அணி திரட்சிகளும் பயிற்சிகளும் இலங்கை இராணுவத்துக்கு எதிரான தாக்குதல்களும் படிப்படியாக வளர்ச்சியும் உக்கிரமும் கொள்ளத் தொடங்கின.

வீடுகளில் முடங்கிக் கிடந்த பெண்கள் தங்கள் விடுதலை பற்றியும் தங்களுக்கு எதிரான ஒடுக்கு முறை பற்றியும் சிந்திக்கத் தொடங்கினர். 'கிடுகுவேலி' கலாசாரத்தைத் தகர்த்து, பெண்களும் தமிழர் தேசிய விடுதலையில் புதுயுகம் படைக்கப் புறப்பட்டனர்; அரசியல், ஆயுதப் பயிற்சிகள் பெற்றனர்; களமாடினர். புதுமைப் பெண்களாக, சாதியம் தகர்த்து முன் நகர்ந்தனர். தமிழினத்தின் வீரப் பெண்கள், புறநானூற்று பாடல்கள் புகழ்ந்த பெண்கள், இருபதாம் நூற்றாண்டில் உற்பத்தி செய்யப்பட்டனர்; புரட்சி படைக்கப் புறப்பட்டனர்.

தமிழ்த் தேசியத்தில் புரையோடிப் போயிருந்த சாதியமும் அதற்கெதிரான கொடுமைகளும் தகர்க்கப்பட்டன. ஈழப்போராட்டம், வெறுமனே ஓர் இனவாதப் போராட்டம் அல்ல. மாறாக, ஒரு புரட்சிகரமான அரசியல், சமூக, பண்பாட்டு, கலை மறுமலர்ச்சிக்கான, வரலாற்று விடுதலைப் போராட்டம் ஆகும். தமிழினத்தின் புரட்சிகர சமூக விடுதலைப் போராட்டம், சுயநிர்ணய விடுதலைப் போராட்டம் எனப் பல்வேறு பரிணாமங்களைப் பெற்றது.

> **தமிழ்த் தேசியம் வாழ வேண்டுமானால் தமிழ்த்தேசியத்தின் மாபெரும் சக்தி தொடர்ச்சியாகத் தமிழினத்தின் தன்னடையாளத்தை தெளிவுபடுத்த வேண்டும்**

இந்தப் பின்புலத்தில் உருவெடுத்த விடுதலைப் போராட்டம், பல்வேறு கட்ட வளர்ச்சிகளைக் கண்டு, சர்வதேச மட்டத்தில் புகழ்படைத்தபோதும், விடுதலைப் போராட்ட வரலாற்றில் இடம்பெற்ற இயக்க உள்முரண்பாடுகள், அதிகாரப் போட்டிகள் சகோதரப் படுகொலைகளுக்கு வித்திட்டன. அத்துடன், விடுதலை போராட்ட வரலாற்றில், துரோக அரசியல் பதிவுகளையும் பதிவிட்டுள்ளது.

ஏதும் அறியாது, இனவிடுதலை ஒன்றே இலட்சிய வேள்வி என்ற தாயகக் கனவுடன், சாவைத் தழுவத் தயாரான அத்தனை உள்ளங்களும் அதிகார மமதை கொண்டவர்களால், தவறாக வழிநடத்தப்பட்டும், சகோதரப் படுகொலைகளுக்குள் சிக்கிச் சின்னாபின்னப்பட்டதுடன், தாயக விடுதலையை நேசித்த ஏதுமறியாத சக போராளிகள், 'துரோகி'கள் என்ற பட்டங்களாலும் அலங்கரிக்கப்பட்டனர்.

இதன் விளைவு, விடுதலைப் போராட்டம் ஒரு மைல்கல் பின் தங்கியது. திம்பு பேச்சுவார்த்தையின் பின் நிகழ்ந்த இயக்க மோதல்களும் அதன் பின் நடைபெற்ற 1987 இந்திய- இலங்கை ஒப்பந்தம், 1989இல் இந்திய இராணுவம் இலங்கையை விட்டு வெளியேறிய போது இடம்பெற்ற தமிழரின் சகோதரப் படுகொலைகள், 1990 இன் பின் இந்திய இராணுவ காலத்தில் இடம்பெற்ற கட்டாய ஆட்சேர்ப்பு முறையை யொத்த ஆட்சேர்ப்பு முறைகளும் போராட்ட அரசியலில் விடுதலை தொடர்பான தெளிவான அரசியல் இராணுவ மூலோபாயம் பற்றிய இளந்தலைமுறைக்கான அரசியற் கருத்தாடல்களும் இராணுவ வெற்றிகளும் மாற்று ஜனநாயக கட்சிகள் அற்ற நடைமுறைகளும் ஜனநாயகம் பற்றிய எண்ணக்கருவையும் சிந்தனைகளையும் இளம் தலைமுறையினரிடம் மழுங்கடித்துவிட்டிருந்தது.

மாற்றுக் கருத்துக்கான சிந்தனைகள் துளிர்விடுவதற்கானதும் சிந்திப்பதற்கானதுமான இடைவெளிகள் பகிர்வுகள் வெடிப்புகளுக்கான சந்தர்ப்பங்கள் வழங்குவதற்கு வாய்ப்புகள் இருக்கவில்லை. அல்லது வழங்கப்படவில்லை என்பது ஜனநாயக அரசியல் விமர்சகர்களின் கருத்தாகும்.

இந்தப் பின்புலத்தில் தமிழ்த் தேசிய விடுதலைப் போராட்டம் ஓரணியில் தீரத்துடன் வளர்ச்சி கண்ட போதும் 2002 இல் ரணில்- பிரபா ஒப்பந்தத்தின் பின் சர்வதேச தலையீடுகள் குத்து வெட்டுகள் போராட்ட சக்திகளின் உட்கட்டு முரண்பாடுகள், புரிந்துணர்வின்மை, பிரதேச முரண்பாடுகள் எனப் பல்வேறு காரணிகள் போராட்ட ஓய்வில் போராட்டத்தை பலவீனப்படுத்தியதுடன் போராட்டத்தை 2009 உடன் மௌனிக்கவும் வைத்தது. அந்த மௌனிப்பின் ஆயுதப்போராட்டம் சரணாகதியாக்கப்பட்டது.

இந்த பின்புலத்தில் ஆயிரக்கணக்கான தமிழினத்தின் உயிரிழப்புகள், காணாமல் போதல், கைதுகள் என யுத்தத்தின் கோர விளைவுகள் உலக யுத்த நியதிகளையும் மீறி நடந்தேறின. அவற்றுக்கான நியாயங்கள் கேட்டவர்கள் இன்றும் கேட்டு நிற்பவர்கள் சலித்துப்போனவர்கள், அதற்கு எதிராகப் போராடியவர்கள், போராடுபவர்கள், மறுப்பவர்கள், இரப்பவர்கள் என இலங்கைத் தீவிலும் சர்வதேசத்திலும் இத்தீவில் வாழும், புலம் பெயர்ந்தவர்களும் இலங்கை இனத்துவ அடையாளங்களை நிரூபிப்பதற்கு குரல் கொடுத்த வண்ணம் உள்ளனர். போராட்டம் மௌனித்து ஒரு தசாப்தம் நிறைவுற்ற வேளையில், போராட்டத்தை உச்ச பலத்துடன் வழிநடத்தியவர்கள் உருவாக்கிய தமிழினத்தின் அரசியல் சக்தியாக தமிழ்த் தேசிய கூட்டமைப்பு அச்சக்திகளின் இருப்பில் இரு தேர்தல்களில் ஒற்றுமையை வலியுறுத்தினார்.

> **கொள்கையுடனும் தியாகங்களுடனும் இருப்புகளுடனும் உரிமைகளுடனும் செயற்பட்டவர்கள் யார் என்பதை தமிழ் மக்கள் இனங்காண வேண்டும்**

அவர்களின் மௌனிப்பின் பின் நடந்த முதல் தேர்தலில் ஒரு கட்சி அரசியலுக்கான சுயநல அரசியல் ஆரம்பமாகியது. இன்று 2020 தேர்தலில் அந்த சுயநல இருப்பின் உச்சகட்டம் ஒரு கட்சிக்குள் விருப்பு வாக்கு மோசடியில் பல்வேறு குழி பறிப்புகள், பழிவாங்கல்கள் குத்து வெட்டுகள் நடந்து கொண்டு இருக்கின்றன.

தமிழ்த் தேசிய விடுதலைப் போராட்டத்தில் பங்குதாரர்களில் எஞ்சியவர்கள் பலர் மௌனித்து நடப்பவற்றை அவதானித்துக் கொண்டிருக்கின்றனர். போராடியவர் இங்கு நடக்கும் நாடகங்களை வலி சுமந்த நெஞ்சம் கனத்துப் பார்த்து பேசா மடந்தையாகி நிற்கின்றனர். போராடாத சக்திகள், தமிழ்த் தேசிய கூட்டமைப்பை ஆக்கிரமித்து போராட்ட வரலாற்றில் தங்களைத் தாங்களே தியாகிகளாகப் பிரகடனப்படுத்தி போராட்ட வரலாற்றை திரிபுபடுத்தி, கொச்சைப்படுத்தி தமிழ்த் தேசிய அரசியலையும் அது கடந்து வந்த பாதைகளையும் அவமானப்படுத்தி நிற்கின்றனர்.

இன்று கடந்த கால வரலாற்றின் பெயரால், வரலாற்றை அறியாத ஓய்வின் பின் உழைப்புக்குத் தொழில் தேடியவர்கள் ஒருபுறமும் தமிழ்த்தேசியத்தின் தியாகங்களில் தங்கள் பிழைப்பு நடத்துவதற்கு வருபவர்களும் இத்தேர்தல் இலாப நட்டங்களை கணக்குப் பார்த்துக் களமிறங்கியுள்ளனர்.

தமிழ் மக்கள் கொள்கையுடனும் தியாகங்களுடனும் இருப்புகளுடனும் உரிமைகளுடனும் உங்களுக்காக செயற்பட்டவர்கள் யார் என்பதை இனங்கண்டு தமிழ்த் தேசியத்தையும் அதன் செயற்பாட்டாளர்களையும் ஆதரிப்பதைக் கருத்தில் கொள்ள வேண்டும்.

ஏனெனில், உரிமை என்பது உணர்வு. தமிழரின் தியாகம், இழப்புகள் வீண் போகக்கூடாது. தமிழ்த் தேசியம் வாழ வேண்டுமானால் தமிழ்த்தேசியத்தின் மாபெரும் சக்தி தொடர்ச்சியாகத் தமிழினத்தின் தன்னடையாளத்தை தெளிவுபடுத்தும் சக்தி. அதன் பாதையும் கடமையும் தொடர பச்சோந்திகளை நிராகரித்து, உண்மையான செயற்பாட்டாளர்களை இதயசுத்தியுடன் தெரிவுசெய்து களமிறக்குவதே தமிழ் மக்களுக்குள்ள யதார்த்தமான பணியாகும்.



## வாழ்வியல் தரிசனம்

மாங்கல்யம் மாதர்களுக்கு உயிரிலும் மேலான பவித்திரமான சொத்தாகும். ஆத்மார்த்தமாகத் தன்னுடைய கணவன், தன்னுள்ளே சதாகாலமும் இணைந்த வண்ணமே இருக்கின்றார் என்பதை, வெளிப்படுத்தும் புனித அடையாளமாகவே அவள், உணர்கின்றாள்.

தனது கணவனை, இறைவன் அருளால் தாலிதான் என்றும் காப்பாற்றி வருவதாகவும் மாறாத அன்புடன் பிணைத்து வைத்திருக்கும் புனித சின்னம் என்றும் தனது, நெஞ்சில் தவளும்போது, பெருமிதமடைவதும் மாதர்களின் இயல்பு.

மாங்கல்யம் மீதான உணர்வு என்பது, உயிரோடு பிணைந்த காதல் பிணைப்பு ஆகும். இதன் ஈர்ப்பும் நம்பிக்கையும் பண்டு தொட்டு, பராயம் முழுமையாக, ஸ்திரமாகத் தொடர்கிறது.

எத்தகைய முரட்டுக் கணவரையும் தன் இதயச் சிறையில் அடைத்து வைப்பது, காதல் மட்டுமல்ல; ஆன்ம வலுவுமே காரணமாகின்றது.

புருசனை மகனாகவும் மனைவியை இளைய தாயாகவும் கருதி, உருக வைப்பதும் திருமணம் ஊடாகப் பிணைக்கப்பட்ட மாங்கல்யம் அல்லவா? மஞ்சள் கயிறு, இருவரின் வாழ்வையும் ஒன்றாக்குவது அதிசயம். இதுதானே பரம்பரையை உருவாக்குகின்றது.

–பருத்தியூர் பால. வயிரவநாதன்

## கடிதங்கள்

### இரத்தினபுரி களுகங்கையில் முதலைகளால் ஆபத்து

இரத்தினபுரி களுகங்கைப் பிரதேசத்தில், முதலைகளின் அச்சுறுத்தல் அதிகரித்து வருவதாகக் கவலை தெரிவிக்கப்படுகின்றது.

குறிப்பாக, களுகங்கையின் தொடம்பே, கொரகஸல, பரஹக, குளியல் பாறை ஆகிய இடங்களிலேயே இவ்வாறு முதலைகளின் நடமாட்டம் அதிகரித்துக் காணப்படுகிறது.

இப்பிரதேசங்களில் வாழும் மக்கள், மேற்குறிப்பிட்ட இடங்களிலேயே தமது நீர்த் தேவைகளைப் பூர்த்தி செய்துகொள்வதால், பிரதேச மக்கள் அச்சமடைந்து காணப்படுகின்றனர்.

இவர்கள், இந்த ஆற்றிலிருந்தே குடிநீருக்கான நீரைப் பெறுவதுடன் ஆடைகளைக் கழுவி, நீராடியும் வருகின்றார்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இப்பிரதேசத்தில் நான்கு முதலைகள் வரையில் நடமாடுவதால், சிறுபிள்ளைகளையும் வயோதிபர்களையும் ஆற்றங்கரைக்கு அழைத்துச் செல்வதற்கு மக்கள் அஞ்சுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இப்பிரதேசத்தில் வசித்துவரும் மக்களுக்கு களுகங்கையின் நீரைத்தவிர, வேறு எந்தக் குடிநீர்த் திட்டங்களோ, நீர்வசதிகளோ கிடையாது. எனவே, தமது அன்றாட நீர்த்தேவைகளை மிகுந்த அச்சத்துடன் மேற்கொள்ள வேண்டியுள்ளது எனவும் பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

பொதுமக்களின் உயிருக்கு ஆபத்தை விளைவிக்கும் முதலைகளை, இவ்விடத்திலிருந்து அகற்றுவதற்கு உரிய பகுதியினர் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்றும் கோரிக்கை முன்வைக்கப்படுகிறது.

–ஆதிநேசன் குமார்

## நெல்சன் மண்டேலா நினைவுரை:

# உண்மைகள் உறைக்குமா?



தெ. ஞாலசீர்த்தி
மீநிலங்கோ

சில கதைகளைக் கேட்கும் போது, நன்றாக இருக்கிறதே என்று தோன்றும். இன்னும் சில கதைகள் கடுப்பூட்டும்; சிரித்துவிட்டு அப்பால் நகரச் செய்யும்.

ஆனால், உலக அரசியல் அரங்கில், அதிகார மய்யங்களில் இருப்பவர்களின் கதைகளும் இதற்கு விலக்கல்ல. சில கதைகளைக் கேட்கும்போது, தெளிவாகி விட்டார்களோ என்று எண்ணத் தோன்றும்; பின்னர் அவர்கள் தம் நடத்தைகள், அவர்கள் திருந்துவதற்கான வாய்ப்பே இல்லை என்பதை இடித்துரைக்கும்.

இலங்கையர்கள் இதை நன்கறிவார்கள். அதிலும், குறிப்பாகத் தமிழர்கள், இதை நன்கு உணர்ந்திருக்கிறார்கள். ஆனாலும், இன்னமும் மேற்குலகின் மீதான நம்பிக்கை விதைப்புகள் குறையவில்லை.

ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் அந்தோனியோ குத்தேரஸ், தென்னாபிரிக்காவின் ஜோஹானஸ்பேர்க் நகரில், நெல்சன் மண்டேலா நினைவுரையை கடந்த வாரம் ஆற்றியிருந்தார். மிகுந்த சர்ச்சைக்குரியதாக மாறிவிட்ட, அந்த உரை சொல்லுகின்ற விடயங்கள் கவனிப்புக்குரியன. ஆனால், அவற்றைக் கணக்கில் எடுப்பதற்கு, அரசுகள் தயாரா என்பது ஒருபுறமிருக்க, குத்தேரஸ் தலைமையேற்றுள்ள ஐக்கிய நாடுகள் சபை கூடத் தயாரா என்பதே முக்கிய வினாவாயுள்ளது.

முதலில், அந்தோனியோ குத்தேரஸ், தனது உரையில் குறிப்பிட்ட விடயங்களைச் சுருக்கமாகப் பார்த்து விடலாம்:

*“நண்பர்களே! உலகில் நிகழுகின்ற அநீதிகள், அநியாயங்கள் மீது, இந்தக் கொவிட்-19 பெருந்தொற்று, தீர்க்கமான ஒளியைப் பாய்ச்சியுள்ளது. உலகம் மிகுந்த நெருக்கடியில் உள்ளது. பொருளாதாரங்கள் எந்தவிதக் கட்டுப்பாடுமின்றிச் சரிந்து விழுகின்றன. இப்பெருந்தொற்று, உலகை நெருக்கும் தன்மையை எம்மனைவருக்கும் உணர்த்தி உள்ளது.*

*“பல தசாப்த காலமாக, நாம் புறக்கணித்து வந்த சுகாதார அமைப்புகளின் செயன்முறைகளின் போதாமை, சமூகப் பாதுகாப்புக் குறைபாடுகள், கட்டமைப்புசார் சமத்துவமின்மை, சுற்றுச்சூழல் அழிவு, காலநிலை மாற்றத்தின் நெருக்கடிகள் போன்றவற்றை, கொவிட்-19 பெருந்தொற்று வெட்டவெளிச்சமாக்கி உள்ளது.*

*“வறுமை ஒழிப்புக்கு, பல ஆண்டுகளாகப் போராடி நாம் சாத்தியமாக்கியதைச் சில மாதங்களில், இந்தத் தொற்று இல்லாமலாக்கி விட்டது. இன்னும் 100 மில்லியன் மக்கள், வறுமைக்குள் தள்ளப்படும் சாத்தியத்தை, எதிர்நோக்கி நிற்கின்றோம்.*

*“இப்பெருந்தொற்றானது, நாம் உருவாக்கி வைத்திருக்கும் சமூகத்தின் பலமற்ற எலும்புகளில் காணப்படும் முறிவுகளை, ஓர் ‘எக்ஸ்ரே’ போல உள்ளூடுருவிக் காட்டியுள்ளது. இது, நாம் கட்டமைத்து உருவாக்கி வைத்திருக்கும் மாயங்களை, தவறான கற்பிதங்களை உடைத்துள்ளது.*

*“குறிப்பாக, அனைத்து மக்களுக்குமான சுகாதார வசதிகளை, இலவசச் சந்தைகள் வழங்கும் என்ற பொய்யையும் ஊதியம் வழங்கப்படாத நலன்சார் கவனிப்பு, ‘வேலை அல்ல’ என்ற புனைவையும் இனவெறியற்ற ஓர் உலகில் நாம் வாழ்கின்றோம் என்பது மாயை என்பதையும் நாம் அனைவரும் ஒரே பாதையில்தான் பயணிக்கின்றோம் என்பது கட்டுக்கதை என்பதையும் இந்தக் கொவிட்-19 நமக்குத் தெரியப்படுத்தியுள்ளது.*

*“உண்மை என்னவென்றால், கொரோனா வைரஸ் பெரும் தொற்றின் விளைவாலும், இவ்வருடம் உலகளவில் கிளர்ந்தெழுந்த பாரியளவிலான இனத்துவேசங்களுக்கு எதிரான ஆர்ப்பாட்டங்கள் காரணமாகவும் பூகோள அடிப்படையில் ஏற்பட்டுள்ள சமூக சமநிலைத் தளர்வால், உலகம் உடைவுறும் கட்டத்தில் உள்ளது. இந்த யதார்த்தத்தை நாம் ஏற்றாக வேண்டும்.*

*“தனிநபர்களின் செல்வவளத்தின் அடிப்படையிலான ஒப்பீடொன்றைச் செய்வோமாயின், உலகில் அதிகபட்ச சொத்துடைய முதல் 26 செல்வந்தர்கள், உலகளாவிய ஏனைய அனைத்துச் சனத்தொகையின் பாதிக்கும் மேற்பட்ட மக்களது மொத்தச் சொத்தை விட, அதிகளவு செல்வம் படைத்தவர்களாகத் திகழ்கின்றனர்.*

*“அதேவேளை, இனம், பால், வர்க்கம், பிறந்த இடம் போன்றவற்றால், சமத்துவமின்மை தீர்மானிக்கப்படுகிறது. புதிய தலைமுறையினருக்கு சமூகப் பாதுகாப்பு அவசியமாகின்றது. இதில், உலகளாவிய சுகாதார வழங்குதல், இலவசக் கல்வி மட்டுமன்றி, உலகளாவிய அடிப்படை வருமானம் போன்ற திட்டங்களும் அவசியமானவை. இவை குறித்து இனியாவது நாம் மனந்திறந்து பேச வேண்டும்”*

COVID-19 RESPONSE

### ஐ.நா: காலம் கடந்த கதை

செயலாளர் நாயகத்தின் உரை, மிக முக்கியமான பல செய்திகளைச் சொல்கிறது. அந்தோனியோ குத்தேரஸ், மிகுந்த துணிவுடன் தனது கருத்துகளை முன்வைத்துள்ளதோடு, திறந்த சந்தைப் பொருளாதாரத்தை மய்யமாகக் கொண்ட முதலாளித்துவம் மீது, கடுமையான விமர்சனத்தை முன்வைத்துள்ளார். இது, அதிகார மய்யங்களில் இருப்பவர்களுக்கு (அரசாங்கங்கள், பல்தேசியக் கம்பெனிகள், தனியார்துறை) உவப்பானதாக இராது.

இந்த உரை எழுப்புகின்ற பல கேள்விகளில் பிரதானமானது, உலகின் தலையாய அமைப்பான ஐக்கிய நாடுகள் சபை, இவ்வளவு காலமும் என்ன செய்தது என்பதேயாகும்.

உலகில் அமைதியை ஏற்படுத்துவதற்காக உருவாக்கப்பட்டு, துணை அமைப்புகளின் ஊடு, நீதியையும் சமத்துவத்தையும் ஏற்படுத்த கடந்த 70 ஆண்டுகளுக்கு மேலாகச் செயற்படும் ஓர் அமைப்பின் தலைவர், உலகளாவிய ரீதியில் சமத்துவமின்மையின் மோசமான முகத்தை வரைகின்றபோது, இதற்குப் பொறுப்பாளி யார்?

ஐக்கிய நாடுகள் சபை, முழுமையாகச் செயற்படவில்லை என்று சொல்லவியலாது. ஆனால், வினைத்திறனுடன் பயனுறுதி வாய்ந்த முறையில் செயற்பட்டதா என்பது கேள்விக்குரியது. இதன் பின்னால், பல நலன்கள் ஒளிந்திருக்கின்றன. இதை விளக்க, இலங்கை உதாரணமே போதுமானது.

இலங்கையில் போர் உச்சமடைந்திருந்த வேளை, ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் கொபி அனான் கவலை தெரிவித்தார். கவலை தெரிவித்திருக்க வேண்டிய காலங்களில் எல்லாம் கையைக் கட்டிக் கொண்டிருந்த பலர், காலம் கடந்து கவலை தெரிவித்தனர்.

கண்டனம் தெரிவிக்க வேண்டிய இடங்களிலெல்லாம் கவலை தெரிவிப்பதும் அரசாங்கத்தைக் குற்றம் கூறுவதைத் தவிர்க்கும் முகமாக, இரு தரப்பினரையும் குற்றம் கூறிப் பேச்சுவார்த்தைகளில் இறங்குமாறு வற்புறுத்தி அறிக்கை விடுவதும் பயனற்ற செய்கைகள் மட்டுமல்ல, அவை எல்லாமே வெறும் மாயமாலம்.

கொபி அனான் போல, வெட்கக் கேடான ஐ.நா பொதுச் செயலாளர் ஒருவர் இருந்திருக்க இயலாது. ஆனால், அவரையும் மிஞ்சுபவராக பான் கீ மூன் வந்து வாய்த்தார். இன்னொரு புறம் யோசித்துப் பார்த்தால், ஐ.நா சபை அண்மைக் காலத்தில், மிகவும் வெட்கக்கேடான ஒரு நிலைக்குத் தன்னைக் கீழிறக்கியுள்ளது என்கிற நிலையில், அந்தப் பதவிக்கு ஒருவர் வருவதாக இருந்தால், தனது நேர்மை, சுய மரியாதை, பெருமிதம் போன்ற விலைமதிப்பற்ற உடைமைகள் எல்லாவற்றையும் தியாகம் செய்ய ஆயத்தமாக இருக்க வேண்டும்.

அப்படி இல்லாத பட்சத்தில், அவர் மிகவும் அவமரியாதைப்படவும் பலவிதமான குற்றச்சாட்டுகளுக்கு உள்ளாகவும் பதவியை இழக்கவும் நேரலாம். கொபி அனான், ஈராக் போர் தொடர்பாக, அமெரிக்காவுக்கு அதிருப்தி ஏற்படுத்துகிற விதமாக எதையோ சாடைமாடையாகச் சொன்ன பின்பு, அவர் தொடர்பாக நிதி மோசடி பற்றிய விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டதை, நாம் நினைவு கூர்வது நல்லது.

கொபி அனானுக்கு முன்பு பதவியிலிருந்த பூட்ரஸ் பூட்ரஸ் காலி, தனது முதலாவது தவணை முடியும் முன்பே, அமெரிக்காவின் ஆணைக்குக் கீழ்ப் படியாத விதமாகச் சிறிது பேசியதால், அவருக்கு இரண்டாவது தவணை மறுக்கப்பட்டது.

கொபி அனான், சூடு கண்ட பூனையைப் பார்த்து, பாடங்கற்ற பூனை என்பதாலேயே, இரண்டாவது தவணையைப் பெற்றார். அதற்கு மேல் பதவி நீடிப்பு இல்லை என்ற தைரியத்தில், அவர் ஒரு வேளை வாய்திறந்திருக்கலாம். அதற்கே, நிதிமோசடிக் குற்றச்சாட்டுகள் மூலம், அவர் அவமதிக்கப்பட்டார். இந்தப் பாடங்கள் சொல்லும் செய்தி யாதெனில், ஒருவேளை அந்தோனியோ குத்தேரஸுக்கு இரண்டாவது தவணை கிடைக்காமல் போகலாம்.

### எதிர்காலம் குறித்து

தனது உரையில் அந்தோனியோ குத்தேரஸ் வலியுறுத்திய விடயங்கள் முக்கியமானவை. ஆனால், அவை குறித்துப் பேசுவதற்கு அரசுகள் தயாராக இல்லை. இன்று பெரும்பாலான அரசுகள், தீவிர வலதுசாரி முதலாளித்துவ நிலைப்பாட்டில் இருக்கின்றன; அதன்வழித்தடத்தில் இயங்குகின்றன.

முதலாளித்துவத்தின் அடியொற்றி, தனது அமைப்புகளையும் நிறுவனங்களையும் பெரும்பாலான அரசுகள் கட்டமைத்துள்ளன. இன்று முதலாளித்துவம் நெருக்கடிக்கு உள்ளாகியுள்ள நிலையில், அது குறித்துப் பேசாமல் திசைதிருப்பலை அரசுகள் செய்கின்றன. சிறிய முரண்பாடுகள், பெரும் முரண்பாடாகின்றன; தேசியவாதம் கிளறிவிடப்படுகின்றது. இதன்மூலம் தமது இருப்பைத் தக்கவைத்துக் கொள்ள, அரசுகள் முனைகின்றனவேயன்றி, பிரச்சினைகளைத் தீர்க்க அவை முயலவில்லை. இது, எம்முன்னுள்ள முக்கியச் சவால் ஆகும்.

எவ்வாறு, கொவிட்-19 சமூக அசமத்துவத்தின் அடிப்படைகளை இன்னொருமுறை வெளிக்காட்டியுள்ளதோ, அதேபோலவே அதிகார வர்க்கம் செயலாற்றாமல் தவிர்க்கின்ற இன்னோர் அம்சம், காலநிலை மாற்றம் உருவாக்கியுள்ள நெருக்கடி ஆகும். காலநிலை மாற்றமானது, வறுமையில் தவிக்கின்ற மக்களுக்கு அதிர்ச்சி அளிக்கத்தக்க கோரமான விளைவுகளை ஏற்படுத்த வல்லது. காலநிலை மாற்றத்தைக் கட்டுப்படுத்துவதற்கு முன்மொழியப்பட்டுள்ள சிறந்த செயல் முறையை நாம் எட்டினாலும் கூட, மில்லியன் கணக்கான மக்கள் உணவின்மையால் நோய்களால் பாதிக்கப்படுவார்கள்.

இது கட்டாய இடப்பெயர்வையும் உணவுக்கான போர்களையும் நீர் பற்றாக் குறையும் ஏற்படுத்த வல்லது. இதைச் சரியாகச் சொல்வதானால், காலநிலை மாற்றம் என்பது, கடந்த 50 ஆண்டுகளில் மனித குலம் முன்னேற்றம் கண்ட அபிவிருத்தி, உலகளாவிய சுகாதாரம், வறுமை ஒழிப்பு ஆகியவற்றை இன்னும் 50 ஆண்டுகள் பின்னோக்கிக் கொண்டு செல்லும் வல்லமை படைத்ததாக இருக்கிறது. இப்போது நாம், இரட்டைச் சவாலை எதிர்நோக்கி இருக்கிறோம். இப்பெருந்தொற்று ஏற்படும் முன்னரே, காலநிலை மாற்றத்தின் விளைவுகள் பயங்கரமாக இருந்தன. அந்தப் பயங்கரத்தை, கொவிட்-19 இருமடங்காக்கி உள்ளது.

இந்தப் பெருந்தொற்றையும் காலநிலை மாற்றம் உருவாக்கியுள்ள நெருக்கடியையும் எதிர் கொண்டு, அதற்கான தீர்வுகளை நோக்கி நகர்வதற்கு, உலகப் பொருளாதார செயல்முறை மீதான அடிப்படையான மாற்றம் அவசியமாகிறது. நிதி மூலதனத்தை மய்யப்படுத்திய உலகப் பொருளாதார கட்டமைப்பு மாற்றம் பெறாமல், நின்று நிலைக்கக் கூடிய நீண்டகால நோக்குடைய தீர்வொன்றைக் காண இயலாது.

அந்தோனியோ குத்தேரஸ் தனது உரையில், கொவிட்-19 பெருந்தொற்று உடைத்தெறிந்த கற்பிதங்களையும் மாயைகளையும் பற்றிக் குறிப்பிட்டார். அவை அனைத்தும், முதலாளித்துவம், திறந்த சந்தை, கட்டற்ற வர்த்தகம், உலகமயமாக்கல் ஆகியவை உருவாக்கிய மாயைகளே ஆகும். இந்த உண்மைகள், எட்டவேண்டிய காதுகள் உண்டு. அவற்றைக் கேட்க அக்காதுகள் தயாராக இருக்கின்றனவா என்பதே கேள்வி.

இந்த உண்மைகள், உறைக்குமா என்பதைப் பிறகு பார்த்துக் கொள்ளலாம். ஏனெனில், மக்களின் திரட்சியாக வெகுண்டெழுந்த போராட்டங்கள், அதிகாரத்தை அசைத்து உண்மையை உறைக்கச் செய்யும்.



ஐ.நாவின் செயலாளர் நாயகம் அந்தோனியோ குத்தேரஸ்

---

# சமூக நீதியைப் புறந்தள்ளும் தமிழ்த் தேசியம்




இப்போது எல்லோரும் தமிழ்த் தேசியம் குறித்துப் பேசுகிறார்கள். பழைய தமிழ்க் கட்சிகள் எல்லாமே, தமிழ்த் தேசியத்தைக் காப்பதற்காகவே, தேர்தலில் போட்டியிடுவதாகச் சொல்கின்றன. ஆனால், அவை ஒவ்வொன்றும் தமிழ்த் தேசியம் குறித்தான தமது கற்பிதங்களை வைத்திருக்கின்றன. ஆய்ந்து நோக்கில், இவர்கள் சொல்கின்றதும் வரையறுக்கின்றதுமான தமிழ்த் தேசியம் என்பது, மக்கள் நலன் சார்ந்ததல்ல என்பது விளங்கும்.

தமிழ்த் தேசியம், தமிழ் மக்களை எத்தகையதொரு முட்டுச் சந்திக்குக் கொண்டு வந்திருக்கின்றது என்பது பற்றி, ஆழமாகச் சிந்திப்பதற்கான வாய்ப்புகளை, வரலாறு தொடர்ச்சியாக வழங்கி வந்திருக்கிறது. ஆனால், நாம் அதற்குத் தயாராக இருந்ததில்லை. அதற்கான விலையை, நாம் தொடர்ந்து கொடுத்துக் கொண்டு வந்திருக்கிறோம். இந்த இடத்தில், குறிப்பாகப் போர் முடிந்து 11 ஆண்டுகள் நிறைவடைந்துள்ள நிலையில், நாடாளுமன்றத்துக்குத் தங்களை அனுப்பச் சொல்லி, தமிழ்த் தேசியம் பேசுவோருக்கு வாக்களிக்கக் கோருவோரிடம் கேட்க வேண்டிய கேள்விகள் உள்ளன.

எவரதும் மனமாற்றத்தை நியாயப்படுத்தக்கூடிய விதமாக, தமிழ்மக்களின் வாழ்வில் மேம்பாடு ஏற்பட்டுள்ளதா?

தமிழ் மக்களின் அடிப்படை உரிமைகள், வென்றெடுக்கப்பட்டு உள்ளனவா?

தமிழ்த் தேசிய இனத்தின் சுயநிர்ணய உரிமை ஏற்கப்பட்டுள்ளதா?

தமிழ் மக்களின் வாழ்விடங்கள் மீது, அவர்களது உரிமை மதிக்கப்பட்டிருக்கிறதா?

இன்று, தமிழ் மக்களின் தேசிய இனப்பிரச்சினை தேசிய இனமொன்றின் மீதான தேசிய இன ஒடுக்கலாகவும் அதற்கெதிரான போராட்டம், சுயநிர்ணய அடிப்படையிலான ஒரு தீர்வுக்கான போராட்டமாகவும் கருதப்படுவதற்கு மாறாக, ஒரு மனித உரிமைப் பிரச்சினையாகவே பேசப்படுகிற ஒரு சூழ்நிலை எவ்வாறு உருவானது, இதற்குப் பொறுப்புச் சொல்ல வேண்டியவர்கள் யார்?

தமிழ் மக்களின் உரிமைப் போராட்டக் காலத்திலிருந்தே, மீட்பர்களின் அரசியல்தான் இருந்து வருகிறது. அதற்கு முதல், மேட்டுக்குடி மேய்ப்பர்களின் அரசியல் இருந்து வந்தது. சட்டசபையிலும் நாடாளுமன்றத்திலும் ஆங்கிலத்தில் பேசி, வென்று தருகின்ற தலைவர்களை நம்பி இருந்த சமூகம், பிறகு சத்தியாக்கிரகம் செய்து சமஷ்டி பெற்றுத்தர முடியும் என்கிற அரசியல் தலைமையை நம்பியது.

தமிழ் பேசும் மக்கள் பற்றி நிறையவே பேசப்பட்டது. ஆனாலும், தமிழரைத் தமிழர், சாதியின் பேராலும் வம்சாவளியின் பேராலும் பிரதேசத்தின் பேராலும் ஏறி மிதிப்பதைப் பற்றிக் கண்டுங் காணாமலே தமிழ்த் தேசிய தலைமைகள் செயற்பட்டன; இன்றும் செயற்படுகின்றன.

முஸ்லிம்களின் தனித்துவம் பற்றியும் மலையக மக்களின் தனித்துவம் பற்றியும் எப்போதிருந்தோ சொல்லி வந்தவர்கள், தமிழ் மக்களைப் பிளவுபடுத்தப் பார்க்கிறார்கள் என்று நிந்திக்கப்பட்டனர்.

வடக்கு, கிழக்கு இணைந்த சமஷ்டியோ, அதே அடிப்படையில் அமைந்த தமிழீழமோ எந்த வகையில் முஸ்லிம்களதும் மலையகத் தமிழரதும் தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வு வழங்கும் என்பது பற்றி, எள்ளளவும் அக்கறையில்லாமலே சமஷ்டிக் கோரிக்கையும் தனிநாட்டுக் கோரிக்கையும் முன்வைக்கப்பட்டன. இவற்றை விமர்சித்தவர்கள், தமிழ்த் துரோகிகளாகக் காட்டப்பட்டனர். இது இன்று வெவ்வேறு வடிவங்களில் தொடர்கிறது.

தமிழ்ச் சமூகத்தில் உள்ள அகமுரண்பாடுகள் தொடர்ச்சியாகப் புறக்கணிக்கப்பட்டு வந்துள்ளன. உழைக்கும் மக்களின் பிரச்சினைகளும் சாதிரீதியான ஒடுக்குமுறையும் கணிப்பில் கொள்ளப்படாத நிலையிலேயே தமிழ்த் தேசியம் இன்றும் இயங்குகிறது.

சமூகநீதி என்பது, தமிழ்த் தேசிய மரபில் இல்லாதவொன்று. மூன்று தசாப்தகால ஆயுதமேந்திய விடுதலைப்போராட்டம், இந்த சமூக நீதிக்கோரிக்கையை உருமறைப்புச் செய்ததேயன்றி சமூக நீதியைத் தமிழ்ச் சமூகத்துக்கு வழங்கிவிடவில்லை.

போர் முடிந்து சில ஆண்டுகளிலேயே, சாதிய ரீதியான ஒடுக்குமுறையும் உயர்சாதிய அகங்காரமும் வெளிப்படையாகவே செயற்படுவதைக் கண்டிருக்கிறோம்.

தமிழ் மக்களுக்கான விடுதலை என்று அடிக்கடி சொல்கிற தமிழ்த் தேசியம் இன்றுவரை, இந்தச் சாதிய ஒடுக்குமுறைக்கு எதிராகக் குரல் கொடுக்கத் தயாராக இருந்ததில்லை.

பிற்போக்குத்தனத்தில் பிறந்து, பிற்போக்குத் தேசியமாகவே வளர்ந்த தமிழ்த் தேசியம், இன்றும் பிற்போக்குத்தனமாகவே இருக்கிறது. தேசிய அரசியலிலும் மிகப் பிற்போக்கான திசையிலேயே தமிழ்த் தேசியம் பயணித்துக் கொண்டிருக்கிறது. இதனை இப்போதைய தேர்தல் பிரசாரங்களிலும் காண்கின்றோம்.

சமூகநீதி என்ற சொல்லாடல், தமிழ்த் தேசியத்துக்கு உரியதல்ல என்பதைத் தமிழ்த் தேசியம் பேணும் வேட்பாளர்களும் அவர்தம் கட்சிகளும் தொடர்ச்சியாக நிரூபித்து வருகின்றன.

அண்மையில், யாழ்ப்பாணத்தில் சாதியம் என்பது இராணுவப் புலனாய்வின் திட்டமிட்ட சதி என்றும் சாதியப் பிரச்சினை, பாரிய பிரச்சினை அல்ல என்றும் தமிழ்த் தேசியத்தை உச்சரிக்கும் கட்சியின் வேட்பாளர் நேர்காணலில் சொல்லியிருந்தார்.

தமிழ்த் தேசியம், தமிழ்ச் சமூகத்தின் அகமுரண்பாடுகள் குறித்துப் பேசவோ, அக்கறை கொள்ளவோ தயாராக இல்லை என்பதை, கடந்த ஒரு நூற்றாண்டுகால வரலாறு காட்டி நிற்கின்றது.

இன்று ஒடுக்கப்பட்ட தமிழ் மக்கள், தமிழ்த் தேசிய கட்சிகளைப் புறக்கணித்து, தனியே புதிய பாதையில் பயணப்படத் தொடங்கிவிட்டார்கள். இது நல்லதொரு தொடக்கம்.

# ‘தேசிய இனத்துக்கான உரிமைகள் தமிழர்களுக்கும் வேண்டும்’



சொர்ணகுமார் சொரூபன்

தமிழ் மக்களாகிய நாம், ஒரு தேசிய இனம். எண்ணிக்கையின் அடிப்படையில்தான், சிறுபான்மையினர் என்று சொல்லப்படுகின்றோம். ஆனால், ஒரு தேசிய இனம் எப்படியான உரிமைகளுடன் வாழ வேண்டுமோ, எப்படியான அதிகாரங்களைக் கொண்டிருக்க வேண்டுமோ, அவற்றைப் பெற்றுக்கொள்ளக்கூடிய உரித்துடைய இனமாக இருக்கிறோம்” என, தமிழ்த் தேசிய கூட்டமைப்பில் யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்தில், வீட்டுச் சின்னத்தில் இலக்கம் 7இல் போட்டியிடும் பா. கஜதீபன் தெரிவித்தார்.

தமிழ்மிரருக்கு வழங்கிய செவ்வியிலேயே, அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் வழங்கிய செவ்வியின் முழு விவரம் வருமாறு:

**கே: வடமாகாண சபையின் உறுப்பினராக இருந்துள்ளீர்கள். அந்த வகையில், மாகாண சபையின் அதிகாரங்களைக் கொண்டு செய்யக்கூடியவற்றைச் செய்யவில்லை என்ற குற்றச்சாட்டு நிலவுகிறது. இது தொடர்பான உங்கள் நிலைப்பாடு என்ன?**

அரசமைப்பின் 13ஆவது சீர்திருத்தத்தினூடாக, தமிழ் மக்களுக்காகக் கிடைத்த ஒரு சிறிய அலகுதான் மாகாண சபையாகும். இந்நிலையில், வடக்கும் கிழக்கும் உடைக்கப்பட்டு, காணி, பொலிஸ் அதிகாரம்கூடப் பிடுங்கப்பட்டு, மிகக்குறைவான அதிகாரங்களுடன் மாகாண சபை இருக்கும் நிலையில், இதன் மூலம் நிறையச் சாதிக்க முடியும் என்று கூறினால், அது ஏற்புடையதல்ல. விக்னேஸ்வரன் ஐயா முதலமைச்சராக இருந்தார். அதனால்தான் வேலைசெய்ய முடியவில்லை என்ற குற்றச்சாட்டும் முன்வைக்கப்படுகிறது. உண்மையில், விக்னேஸ்வரன் மட்டுமல்ல, வேறு யார் முதலமைச்சராக இருந்திருந்தாலும், மக்களின் அபிலாசைகளைத் தீர்த்து வைத்திருக்க முடிந்திருக்காது என்றே நம்புகிறேன்.

இதேவேளை, செய்யக்கூடிய பல வேலைகளைச் செய்யவில்லை என்பதிலும் உண்மை இருக்கிறது. இதில், நாம் அனைவரும், கூட்டுப் பொறுப்பு ஏற்கவேண்டியுள்ளது. வெறுமனே முதலமைச்சரையோ, அமைச்சரவையையோ சுட்டிக்காட்டிவிட்டு தப்பிப்பதில் அர்த்தமில்லை.

அன்றைய காலகட்டத்தில், சபையில் செய்திருக்கக் கூடியவற்றைச் செய்திருக்கலாம் என்ற நிலை இருந்தது. இவ்விடயம் என் மனதிலும் உள்ளது. எனது இறுதி மாகாண சபை உரையில்கூட, நான் இதைத் தெரிவித்திருந்தேன். நாம், இன்னும் வினைத்திறனோடு செயற்பட்டிருக்கலாம் என்ற நிலைப்பாடும் உண்மையில் உண்டு.

**கே: மாகாண சபை ஊடாகச் செய்ய முற்பட்ட அபிவிருத்தி முயற்சிகளுக்கு ஏற்பட்ட தடைகள், இடையூறுகள் தொடர்பில் கூறுங்கள்.**

மாகாண சபையைப் பொறுத்தவரையில், பாரிய அரசியல் பேசும் இடமாக இருக்க முடியாது. மாகாண சபைக் கட்டமைப்பு என்பது, ஒரு சிறிய அலகு. வடமாகாண சபை என்பது, சுமார் 10 முதல் 11 இலட்சம் மக்களைக் கொண்ட சிறிய அலகாக இருந்தது. அந்த அலகிலிருந்து, பல நியதிச்சட்டங்கள் உருவாக்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால், அவை உருவாக்கப்படவில்லை. அவற்றை உருவாகுவதற்கு முயற்சிகள் எடுத்ததாகக் கூறப்படுகிறது. அதற்கான நடவடிக்கைகளை, அமைச்சரவை விரைந்து செயற்படுத்தியிருக்க வேண்டும் என்பதே என்னுடைய கருத்து.

அதில் பல தவறுகள் இருக்கின்றன. எம்முடைய கட்சித் தலைமைகள் இழைத்திருக்கக் கூடிய தவறுகளாகவும் இருந்திருக்க முடியும் என்பதையும் நாம் சொல்லலாம். நீதியரசர், நிறைந்த கல்விமான்; சட்டம் தெரிந்தவர்; நல்ல மனிதர். இன்றும் அவரை மதிக்கிறேன். ஆனால், இந்தத் தகுதிகளைக் கொண்டு, அவர் அரசியலைச் சரியாகச் செய்தார் என, நான் கருதவில்லை. அரசியல் என்பது வேறு துறை; அதில் விருப்பமிருக்க வேண்டும். மக்களோடு வாழ்ந்திருக்கக் கூடியவர்களாகவும் அவர்களை நேசிக்கக் கூடியவர்களாகவும் இருக்க வேண்டும். இது தொடர்பான பல கேள்விகள், அன்று விக்னேஸ்வரனை முதலமைச்சராகக் கொண்டுவரும் போதே இருந்தன. இவர், இந்த மண்ணுக்கு உரியவராக இல்லை. அவர் சார்ந்த குடும்பம், கொழும்பைத் தளமாகக் கொண்டது என்றெல்லாம் கூறப்பட்டது. அதுபோல், அவர் அமைத்திருந்த அமைச்சரவையும் அவ்வாறே அமைந்தது.

அவர் அமைச்சரவையைத் தெரிவுசெய்யும் போது, ஒரு வேடிக்கையான சம்பவம் நடந்தது. அதாவது, அமைச்சரவைக்குத் தெரிவு செய்யப்படுவதற்கு முன்னால், அனைவரும் தங்கள் சுயவிவரக் கோவையைத் தாருங்கள் என்று கேட்டார். இது, அரசியலில் ஆச்சரியப்படத்தக்க விடயமாக இருந்தது. இதன்படி, வைத்தியராக இருப்பவர் சுகாதார அமைச்சராகவும் கல்விப் புலத்தில் சாதித்தவராக இருந்தால் கல்வி அமைச்சர் என்றும் விவசாயம், சூழலியல் தெரிந்தால் அவர் விவசாய அமைச்சர் என்றும் தனது அமைச்சரவைத் தெரிவை மேற்கொண்டார். இவ்விடத்தில், அமைச்சரவையில் அங்கம் வகித்தவர்களின் ஆளுமையைத் தரக்குறைவாகப் பேசவில்லை. வடக்கு மாகாண சபையில் அங்கம் வகித்த உறுப்பினர்கள் அனைவரும், ஏதோ ஒரு வகையில், ஏதோ ஒரு துறையில் சிறந்தவர்களாகவே இருந்தார்கள். ஆனால், முதற்கோணல் முற்றும் கோணலாகவே இருந்தது.

நீண்டகால அரசியல் அனுபவமுள்ளவர்கள் சபையில் இருந்தார்கள். ஆனால் அவர்கள், அமைச்சரவைத் தெரிவின்போது கண்டுகொள்ளப்படவே இல்லை. ஆகவே, இவ்வாறான விடயங்கள் ஆரம்பத்திலிருந்தே எமக்கு அதிருப்தியடைய வைத்தன. இவற்றைத் தவிர, முதலமைச்சரின் பிரதம செயலாளராக இருந்தவரையே நிதி விடுவிப்புப் பணிப்பாளராகவும் நியமிக்க வேண்டும். அவ்வாறு அவர் நியமிக்கப்பட்டால் மட்டுமே நிதியைப் பெற்றுக்கொள்வேன் எனத் தெரிவித்தார். ஆனால், முதலமைச்சர் தெரிவுசெய்த நபர், இதில் முன்னனுபவசாலியாக இருந்தாலும், நிதிக் கையாளுகை விடயங்களில் தடை செய்யப்பட்ட நபராக இருப்பதால், அவரை நியமிக்க முடியாதென்று, அந்த நிதிக் கட்டமைப்பு தெரிவித்திருந்தது.

இவ்வாறான செயற்பாடுகளில் முதலமைச்சர் ஈடுபட்டமை, உலகறிந்த விடயம். அதற்கான ஆதாரங்கள், சபையின் ஒவ்வொருவரிடத்திலும் உள்ளன. இதனால், நம்மண்ணுக்கு வரவேண்டிய நிதியெல்லாம் வராமல் போயிருக்கின்றன. இதைத் தவிர, மத்திய அரசாங்கத்தோடு பேசி, செய்யவேண்டிய பல விடயங்களில் நாம் கோட்டை விட்டுள்ளோம்.

மத்திய அரசாங்கத்துடன் பேசி, நமது மக்களுக்கு நிதியைக் கொண்டு வருவதென்பது மக்களுடைய உரிமை. அது, சலுகை அரசியலல்ல. மத்திய அரசாங்கம் தரும் நிதியைக் கொண்டு, மாகாண சபையை நடத்துவதென்பது சாத்தியமற்ற விடயம். அதற்கு, மேலதிகமாக நியதிச் சட்டங்களை உருவாக்கி, நமக்குத் தேவையான நிதிகளைப் பெறுகின்ற செயற்பாடுகளில் நாம் ஈடுபட்டிருக்கவில்லை. இவ்விடயங்களில், நம் அமைச்சரவை அக்கறையுடன் வேலை செய்திருக்கவில்லை என்ற குற்றச்சாட்டு இருந்தது. நிதி மூலங்களைக் கண்டறிந்து, அதற்குரிய செயற்றிட்டங்களைச் செய்திருக்கவில்லை. இதைவிட, எமக்குள் ஏற்பட்ட சிறு சிறு முரண்பாடுகள் பெரியளவில் விரிசலடைந்ததால், வினைத்திறனான மக்கள் நலத்திட்டங்களை முன்னெடுக்க முடியாமல் போனமைக்குக் காரணமாக இருந்தன.

> நீண்டகால அரசியல் அனுபவமுள்ளவர்கள் சபையில் இருந்தார்கள். ஆனால் அவர்கள், அமைச்சரவைத் தெரிவின்போது கண்டுகொள்ளப்படவே இல்லை

> மத்திய அரசாங்கத்துடன் பேசி, நமது மக்களுக்கு நிதியைக் கொண்டு வருவதென்பது மக்களுடைய உரிமை. அது, சலுகை அரசியலல்ல

> வடக்கு மாகாண சபையில் அங்கம் வகித்த உறுப்பினர்கள் அனைவரும், ஏதோ ஒரு துறையில் சிறந்தவர்களாகவே இருந்தார்கள். ஆனால், முதற்கோணல் முற்றும் கோணலாகவே இருந்தது

> ஒரு தேசிய இனம் எப்படியான உரிமைகளுடன் வாழ வேண்டுமோ, அதிகாரங்களைக் கொண்டிருக்க வேண்டுமோ, அவற்றைப் பெற்றுக்கொள்ளக்கூடிய உரித்துடைய இனமாக உள்ளோம்

> வடக்கு மாகாண சபைக்கு, சொற்பமான நிதியே வழங்கப்பட்டது. அது போதுமானதாக இல்லை என்கிற போது, அது திரும்புவதற்கு வாய்ப்பு இல்லை

> கிழக்கில் தமிழ் மக்களுக்கு, முஸ்லிம் சகோதரர்களுடன் முரண்பாடாக உள்ளது. இந்த விடயத்தில், புரிந்துணர்வு ஒன்றை ஏற்படுத்த வேண்டிய பொறுப்புள்ளது



**கே: தமிழ்த் தேசிய கூட்டமைப்பு, இத்தனை காலம் செய்யமுடியாததை இனிவரும் காலங்களிலா செய்யப்போகிறது என்ற கருத்து நிலவுகிறது. இது தொடர்பில் உங்கள் நிலைப்பாடு என்ன?**

இவ்வாறான குற்றச்சாட்டைக் கூறுபவர்கள் யாரென்று பார்த்தால், மிக நீண்டகாலம் அரசியலில் இருப்பவர்களென்பது புரியும். இதில், வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் சி.வி. விக்கினேஸ்வரனை தவிர்த்துப் பார்க்கிறேன். காரணம், மிகச் சொற்பமான காலமே அவருடைய அரசியல் அனுபவம் இருந்தது. பழைய விடயங்களை, அவர் பத்திரிகையில் படித்துத் தெரிந்திருப்பார். ஆகையால், அவரைத் தவிர்த்துப் பார்த்தால், இலங்கை சுதந்திரமடைந்து 72 ஆண்டுகளுக்கும் மேலாக, இந்தப் பிரச்சினை இருந்து வருகின்றது.

இது, கூட்டமைப்பின் காலத்தில் உருவாகிய பிரச்சினை அல்ல. இதைத் தீர்ப்பதற்காக, தந்தை செல்வநாயகம், பண்டாரநாயக்கவுடன் ஒப்பந்தம் ஒன்றைச் செய்திருந்தார். அதைக் கிழிக்க வைப்பதற்காக, ஜே.ஆர்.ஜெயவர்தன, கண்டி யாத்திரை சென்றிருந்தார். ஆகவே, அந்தக் காலத்திலேயே, இப்பிரச்சினைகள் பேசப்பட்டுள்ளன. அன்று, ஐக்கிய தேசிய கட்சி முன்னின்று குழப்பியதற்காக, தந்தை செல்வநாயகம், ஐ.தே.கவுடன் ஒப்பந்தம் செய்யாமலில்லை. ஆகவே, இந்த விடயங்கள் இன்று நேற்றுத் தொடங்கியதைப் போலவும் குறிப்பாக, கடந்த ஐந்து வருடகாலப் பகுதியில் இடம்பெற்றவை போன்றும், இதை இவர்கள் தீர்த்திருக்கலாம் என்று பேசுபவர்கள், மனமுணர்ந்து பொய் சொல்கிறார்கள் என்பது புரியும்.

தந்தை செல்வாவைத் தொடர்ந்து, அமிர்தலிங்கம் முயற்சி செய்திருக்கிறார். இவர்களுடைய முயற்சிகள் சாதாரணமானவை அல்ல. அதன் பிறகு, இவற்றிலிருந்து அதிருப்தியடைந்த இளைஞர் சமுதாயம் மட்டுமல்ல, ஒட்டுமொத்தத் தமிழ்ச் சமுதாயமும் ஆயுதப் போராட்டத்துக்குப் பின் ஒன்றுசேர்ந்தது. இதில், பல இயக்கங்கள் உருவாகின. தமிழீழ விடுதலைப் புலிகள், இதனை இறுதிவரை முன்னெடுத்துச் சென்றனர். இதற்குப் பின்னர், கடந்த பத்து வருடங்களில், குறிப்பாகக் கடந்த ஐந்து வருடங்களில்தான், கூட்டமைப்பினர் அப்பாத்திரத்தை வலுவாக ஏற்றிருந்தனர். ஆகவே, கூட்டமைப்பு சரியாகச் செயற்படத் தவறிவிட்டது என்று கூறுவது, வெறும் விமர்சனத்துக்காக, மக்கள் மத்தியில் தவறான கண்ணோட்டத்தை ஏற்படுத்துவதற்காகச் சொல்லப்படுகின்ற விடயங்களாகும்.

**கே: மத்திய அமைச்சின் நிதி ஒதுக்கீடுகள், சரியான முறையில் பயன்படுத்தப்படாமல் திரும்பியுள்ளன என்ற குற்றச்சாட்டு உள்ளதே?**

வடக்கு மாகாண சபைக்கு, சொற்பமான நிதியே வழங்கப்பட்டது. அது போதுமானதாக இல்லை என்கிற போது, அது திரும்புவதற்கு வாய்ப்பு இல்லை. நிதி வருகை என்பது, நேர்த்தியானதொன்றல்ல. ஒதுக்கப்பட்ட நிதிகளும் முழுமையாக வந்துசேர்வதுமில்லை. ஆனால், விசேடமாக, வந்த நிதிகளைச் சரியான முறையில் கையாளவில்லை என்பது உண்மை.

**கே: தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு எவ்வாறானதாக இருக்க வேண்டும் என எண்ணுகின்றீர்?**

தமிழ் மக்களுடைய அரசியல் தீர்வானது, நீடித்த நிரந்தரமான அரசியல் தீர்வாக இருக்க வேண்டும். அது, குறிப்பாக இன்றைக்கு இருக்கக்கூடிய அரசியல் சூழ்நிலைகளில், இந்த நாட்டுக்குள்தான் ஓர் அரசியல் தீர்வு அமையும். இன்று, தனி நாடு என்பது சாத்தியமற்ற ஒன்றாகும். ஆனால், தமிழ் மக்களுடைய அபிலாசைகளைப் பூர்த்தி செய்யக்கூடியதாக, மக்கள் காலங்காலமாக எதைக் கோரி வந்தார்களோ, அந்தக் கோரிக்கைகளை நிறைவேற்றக் கூடியதான ஓர் அரசியல் தீர்வைத்தான் கூட்டமைப்பு எதிர்பார்க்கின்றது.

தமிழ் மக்களாகிய நாம், ஒரு தேசிய இனம். எண்ணிக்கையின் அடிப்படையில்தான், சிறுபான்மையினர் என்று சொல்லப்படுகின்றோம். ஆனால், ஒரு தேசிய இனம் எப்படியான உரிமைகளுடன் வாழ வேண்டுமோ, எப்படியான அதிகாரங்களைக் கொண்டிருக்க வேண்டுமோ, அவற்றைப் பெற்றுக்கொள்ளக்கூடிய உரித்துடைய இனமாக இருக்கிறோம். சிங்கள மக்கள், எண்ணிக்கையில் அதிகமாக இருக்கின்றனரே தவிர, இதனால் அவர்கள் உயர்ந்தவர்களென்று அர்த்தமல்ல. எண்ணிக்கையில் குறைவாக இருப்பதால், நாம் தாழ்ந்தவர்கள் என்று அர்த்தமல்ல. தமிழ் மக்கள், வடக்கும் கிழக்கும் இணைக்கப்பட்ட பூரண சுயாட்சி ஒன்றை, சமஷ்டி என்ற கட்டமைப்பில் எதிர்பார்க்கின்றனர். இதுதான், ஒட்டுமொத்தத் தமிழ் சமூகத்தின் நிலைப்பாடும் ஆகும்.

**கே: வடக்கு மாகாணத்தின் அபிவிருத்தி தொடர்பான உங்கள் திட்டம் என்ன?**

வடக்கு மக்கள், பொருளாதார ரீதியாக விவசாயம், மீன்பிடி, கைத்தொழில்களில் வளர்ச்சி அடைந்தவர்களாக இருந்து வந்துள்ளார்கள். இந்தப் பொருளாதாரக் கட்டமைப்புகள், கடந்த 30 வருடகால யுத்தத்தால் பல நெருக்கடிகளைச் சந்தித்து, பாதிப்படைந்துள்ளன. அதைக் கட்டமைத்து முன்னெடுக்கும் பாரிய பொறுப்புள்ளது. கடந்த 2 வருடங்களில், குறிப்பாக யாழ். மாவட்டத்தில், மிகப் பெரிய தொகைகள் ஒதுக்கப்பட்டு வேலைத்திட்டங்கள் செய்யப்பட்டுள்ளன. குறிப்பாக, 7,000 மில்லியன் ரூபாய் வரைக்கும் யாழ். மாவட்டத்துக்கான அபிவிருத்தி வேலைகள் செய்யப்பட்டுள்ளன. இதில், பாரிய வேலைத்திட்டங்களாக மயிலிட்டித் துறைமுகம், பருத்தித்துறை மீன்பிடித் துறைமுகம், பலாலி விமான நிலையம் ஆகிய அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் உள்ளடங்குகின்றன. இவற்றை விட, பல வீதி அபிவிருத்தித் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன. இதுவும், மக்களின் உரிமைகள்தான். இது போதுமானதென சொல்லமாட்டேன்; செய்யவேண்டியது நிறைய உள்ளன. எமது மாகாணத்தின் அபிவிருத்தியையும் முன்நகர்த்திச் செல்லவேண்டிய பாரிய தேவை உள்ளது. இதனைவிட, கல்வி, சுகாதாரங்களில் எமது மாகாணம் வீழ்ச்சியடையவில்லை. மாறாக, மற்றையவர்கள் முன்நோக்கிச் சென்றுள்ளனர். அவர்களை எட்டிப்பிடிக்க வேண்டிய நிலையில் தான் நாங்கள் உள்ளோம்.

**கே: தமிழர் பிரதேசங்களில், மக்கள் இருப்பு, அடையாளங்கள், மரபுரிமைகள் தொடர்ந்து அழிக்கப்படுவதற்கான முயற்சிகள் இடம்பெறுகின்றன. இது தொடர்பில் உங்கள் நிலைப்பாடு என்ன?**

திருகோணமலை, அம்பாறை ஆகிய பிரதேசங்களில், பாரிய பிரச்சினையாக உள்ளது. இந்தப் பிரச்சினை, கிழக்கில் தமிழ் மக்களுக்கு, முஸ்லிம் சகோதரர்களுடன் முரண்பாடாக உள்ளது. இந்த விடயத்தில், புரிந்துணர்வு ஒன்றை ஏற்படுத்த வேண்டிய பொறுப்புள்ளது.

வடக்கில், இந்நிலைமை கொஞ்சம் குறைவாக இருக்கின்றமைக்குக் காரணம், இங்குள்ள காணிகளில் பெரும்பாலானவை, சொந்தக் காணிகளாக உள்ளமையாகும். இது, கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் போன்ற மாவட்டங்களில் இன்னும் அதிகமாக உள்ளன. காரணம், இங்குள்ள அரச காணிகளைக் கையகப்படுத்தி, வரலாறுகளைத் திரிபுபடுத்திச் செயற்படுகிறார்கள் என்ற அச்சம் நிலவுகிறது. இது தொடர்பில் ஒரு போராட்ட அரசியல் களம்தான், எதிர்வரும் ஐந்து வருடங்களுக்கு நிலவும் எனக் கூறமுடியும்.

ஏனெனில், தென்னிலங்கையில் எதிர்க்கட்சி என்ற ஒன்று இல்லை. ரணில் விக்கிரமசிங்க, சஜித் பிரேமதாஸ ஆகியோரின் வெற்றி வாய்ப்புகள் எவ்வாறு அமையும் என்பது கேள்வியாகவுள்ளன. அந்த வகையில், பல அச்சுறுத்தல்கள் தமிழ் மக்கள் மீது திரும்பத்தான் உள்ளன. நல்லாட்சி அரசாங்கத்திலும், இது இல்லை என்று சொல்ல முடியாது. அந்தக் காலப்பகுதியில், சிறிது சிறிதாக இடம்பெற்றவை அனைத்தும், இனிவரும் காலத்தில் மிகப் பாரியளவில் முன்னெடுக்கப்படவுள்ளன.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் வியாழக்கிழமை, 23 ஜூலை 2020, இல. 8, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு 02 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

JULY 23, 2020
THURSDAY
VOL: 006/054
RS. 10.00
PROVINCIAL

தேர்தல் சிறப்பிதழ் Rs.10

Find us on facebook/tamilmirror  Follow us on tamilmirror  epaper/tamilmirror.lk

www.tamilmirror.lk

# தமிழ் Mirror







வடக்கு, கிழக்குக்கு

# ‘வாய்ப்பு’



**கொரோனா வழிசமைத்துள்ளது என்கிறார் ரணில்**

**விவசாயம், மீன்பிடித்துறையில் வளர்ச்சி காண்பதற்கான வாய்ப்பு கிட்டியுள்ளது**

**சிக்கல்களைப் போக்க, அரசாங்கத்திடம், முறையான திட்டமிடல் இல்லை**

உலகம் முழுவதும் தற்போது கொரோனா வைரஸ் பாதிப்பால் முடங்கிக் கிடக்கின்ற இந்தத் தறுவாயில், இலங்கையின் வடக்கு, கிழக்கு வாழ் மக்கள், இக்காலத்தைச் சரியாகப் பயன்படுத்திக் கொண்டால், பொருளாதார ரீதியில் முன்னேறுவதற்கான வாய்ப்பு உள்ளதென்று, ஐக்கிய தேசிய கட்சியின் தலைவரும் முன்னாள் பிரதமருமான ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

தொடர்ச்சி P2



## ‘ஓகஸ்ட் 1 முதல் பாலர் பாடசாலை’

கொரோனா வைரஸ் அச்சம் காரணமாக, மார்ச் மாதம் முதல் தொடர்ச்சியாக மூடப்பட்டிருக்கும், நாடளாவிய ரீதியிலுள்ள பாலர் பாடசாலைகளை ஓகஸ்ட் 1ஆம் திகதி முதல் மீண்டும் திறப்பதற்கு அரசாங்கம் அவதானம் செலுத்தியுள்ளதெனத் தெரிவித்த சுகாதார அமைச்சர் பவித்திரா

தொடர்ச்சி P2



குருநாகல் புவனேகபாஹு கட்டடம்

## விரைந்து பாதுகாக்குமாறு மஹிந்தவிடம் பரிந்துரை

குருநாகல் புவனேகபாஹு ஹோட்டல் நடத்தப்பட்டுவந்த கட்டடம் சேதமாக்கப்பட்டமை தொடர்பான இடைக்கால அறிக்கை,நேற்று (22) முற்பகல், அலரி மாளிகையில் வைத்து, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவிடம் கையளிக்கப்பட்டது.

தொடர்ச்சி P2

## ‘தமிழர் அரசியலில் ஒன்றுமை இல்லை’

**மன்னார் மறைமாவட்ட ஆயர் தெரிவிப்பு**



தமிழர்களான எம்மிடத்தில், இன்றிருக்கும் வாக்குச் சீட்டுத்தான் ஒரேயோர் ஆயுதம். அதனை நாம் முறையாகப் பயன்படுத்தி, தகுதியான பிரதிநிதிகளை நாடாளுமன்றத்துக்கு அனுப்ப வேண்டுமெனக் கேட்டுக்கொண்ட

தொடர்ச்சி P2



**சந்திப்பு..**

தேர்தல் பிரசாரத்துக்காக, கிழக்கு மாகாணத்துக்குச் சென்றுள்ள தமிழ் மக்கள் தேசிய கூட்டணியின் தலைவரான நீதியரசர் விக்னேஸ்வரன், திருகோணமலை மாவட்ட பேராயர் நோயல் இம்மானுவேல் அவர்களை மரியாதையின் நிமித்தம், நேற்று (22) சந்தித்து உரையாடினார்.



## ‘மனைவி முஸ்லிம் என்பதாலா புவனேகபாஹு’க்கு இந்தப் பேரிடி’

**மனோ கேள்வி: மஹிந்தவின் கருத்து விகடமானது என்கிறார்**

*றம்ஸி குத்தூஸ்*

முஸ்லிம் பெண்ணைத் திருமணம் செய்ததால் புவனேகபாஹு மன்னனின் தராதரம் குறைந்து போய்விடுமா? என பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவிடம் கேள்வியெழுப்பிய ஐக்கிய மக்கள் சக்தியின் கொழும்பு மாவட்ட வேட்பாளர் மனோ கணேசன்,

தொடர்ச்சி P2

## அங்கஜனின் ‘என் கனவு யாழ்’ வெளியானது



ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்துக்கான தேர்தல் விஞ்ஞாபனம், “என் கனவு யாழ்” செயற்றிட்ட வரைவு, வெளியிடப்பட்டது.

தொடர்ச்சி P2

## கந்தகாடு கைகலப்பில் ஐந்து பேருக்கு காயம்

**தும்புத்தடி, விளக்குமாறுடன் சண்டை**



கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளானவர்களுக்கு விசேடமாக சிகிச்சையளிக்கப்படும், வெலிகந்த- கந்தகாடு விசேட மத்திய நிலையத்தில், இரண்டு குழுக்களைச் சேர்ந்தவர்களுக்கிடையில் ஏற்பட்ட கைகலப்பில், ஐவர் காயமடைந்துள்ளனர் என வெலிகந்த பொலிஸார் தெரிவித்தனர்.

தொடர்ச்சி P2

அரந்தலாவ படுகொலைக்கு எதிரான மனு:

## நவம்பர் 12இல் ஆராய்வு



அம்பாறை - அரந்தலாவ பகுதியில், பௌத்த பிக்குகள் 31 பேர், 1987 ஜூன் 2ஆம் திகதியன்று படுகொலை செய்யப்பட்டமைக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட மனுவுக்கு மட்டுப்படுத்தப்பட்ட எதிர்ப்புகளை தாக்கல் செய்யுமாறு, சட்டமா அதிபர் திணைக்களத்துக்கு உயர்நீதிமன்றம், நேற்று (22) உத்தரவிட்டுள்ளது.

தொடர்ச்சி P2

## 3 வேட்பாளர்கள் கைது

தேர்தல் சட்டத்திட்டங்களை மீறி, பிரசாரங்களில் ஈடுபட்டனர் என்ற குற்றச்சாட்டின் கீழ், வேட்பாளர்கள் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களில் இருவர் ஐக்கிய மக்கள் சக்தியின் வேட்பாளர்கள் ஆவர். மற்றையவர் ஐக்கிய தேசிய கட்சியின் வேட்பாளர் ஆவார் என, பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதி பொலிஸ் மா அதிபர் ஜாலிய சேனாரத்ன தெரிவித்தார்.

தொடர்ச்சி P2




## ‘தேர்தலுக்கு முன் என்னை சிறையிலடைக்க முயற்சி’

**20 வருடகால அரசியல் அனுபவம் எனக்கு இருக்கிறது**



பயங்கரவாதச் செயற்பாடுகள் எவற்றுடனும் எந்தத் தொடர்பும் இல்லாத என்னை, சஹ்ரானின் மிலேச்சத்தனமான தாக்குதலுடன் கோர்த்து, தேர்தலுக்கு முன்னர் என்னை சிறையிலடைக்க முயல்கின்றனர் எனத் தெரிவித்த மக்கள் காங்கிரஸ் தலைவர் ரிஷாட் பதியுதீன், உங்கள் மீது கைகளை வைக்கும் போது, பொம்மைகளாக இருக்கச் சொல்கின்றனரா என வினவினார்.

தொடர்ச்சி P2

டிஜிட்டல் பிறப்புச் சான்றிதழில்

## ‘இனம், மதத் தகவல்கள் இனி உள்ளடக்கப்படாது’

டிஜிட்டல் முறைமையில் பிறப்புச் சான்றிதழை வழங்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளனவெனத் தெரிவித்துள்ள ஆட்பதிவுத் திணைக்கள பதிவாளர் நாயகம் என்.சீ. விதானகே, இனம், மதம் ஆகிய தகவல்கள் இனிமேல் உள்ளடக்கப்படமாட்டாது. “இலங்கையர்” என மட்டுமே குறிப்பிடப்படும் என்றார்.

தொடர்ச்சி P2



# 'ஒகஸ்ட் 1 முதல் பாலர் பாடசாலை'

வன்னியராச்சி, இதுதொடர்பில், அமைச்சரவைக் கூட்டத்தில் வெகுவாக ஆராயப்பட்டதென்றார்.

அவ்வாறு ஆராயப்பட்டதில், ஒகஸ்ட் 1ஆம் திகதி முதல், பாலர் பாடசாலைகளை ஆரம்பிப்பதற்கு அமைச்சரவையில் அங்கிகாரம் கிடைத்துள்ளதெனத் தெரிவித்த அவர், உத்தியோகபூர்வ அறிவிப்பொன்று, கல்வியமைச்சின் ஊடாக விரைவில் வெளியிடப்படும் என்றார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில், இன்று (நேற்று) நடத்தப்பட்ட வாராந்த அமைச்சரவைக் கூட்டத்தில், மேற்படி விவகாரம் தொடர்பில் விரிவாக கலந்துரையாடப்பட்டதெனத் தெரிவித்த அவர், கல்வியமைச்சரும், சுகாதார அமைச்சர் என்றவகையில் நானும், பாலர் பாடசாலைகளை ஒகஸ்ட் 1ஆம் திகதியன்று ஆரம்பிப்பதற்கு இணங்கினோம் என்றார்.

# 'தமிழர் அரசியலில்...



மன்னார் மறைமாவட்ட ஆயர் இம்மானுவேல் பெர்ணான்டோ ஆண்டகை, இந்த விடயத்தில் நாம் அலட்சியமாக இருக்கக்கூடாது என்பதுடன், தமிழ் அரசியல் நிலைமை இன்னும் குழப்பமானதாக உள்ளது. ஓரளவுக்கேனும் முன்பிருந்த ஒற்றுமை இன்று இல்லாது போய்விட்டது எனத் தெரிவித்துள்ளார்.

ஓர் இக்கட்டான சூழ்நிலையில் நாம் மீண்டுமொரு பொதுத் தேர்தலைச் சந்திக்கின்றோம் எனத் தெரிவித்துள்ள அவர், தமிழ்த் தேசியத்தின் அடிப்படைகள், தீர்க்கப்படாத தொடரும் பிரச்சினைகள், ஜனநாயக உரிமைகளைப் பயன்படுத்துவதன் அவசியம் குறித்தும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

ஊடகங்களுக்கு நேற்று (22) விடுத்திருந்த ஊடக அறிக்கையில் மேற்கண்டவாறு கோரியுள்ள அவர், அரசியலுக்கு அப்பாற்பட்டவர்களாக, அரசியலிலிருந்து ஒதுங்கிக் கொண்டவர்களாக, கிறிஸ்தவர்கள் இருக்க முடியாது. மாறாது பொறுப்புள்ள குடிமக்கள் என்ற வகையில் தமது அரசியல் கடமைகளை தவறாது நிறைவாக ஆற்றவேண்டுமெனக் கேட்டுக்கொண்டார்.

"அரசியல் புனிதமானது. ஆனால், தவறானவர்கள் அதற்குள் நுழைவதனால் அது சிலவேளை சாக்கடையாகின்றது. இந்தப் புனிதமான அரசியலில் எல்லா மக்களைப்போல கிறிஸ்தவர்களும் ஈடுபடவேண்டும் எனத் திருச்சபை விரும்புகின்றது, ஊக்குவிக்கின்றது. அதேவேளை மிக முக்கியமான, மிக அவசியமான சூழ்நிலையில் அன்றி பொதுவாகத் திருச்சபை, கட்சி அரசியலில் ஈடுபடுவதில்லை" என, அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ் அரசியல் நிலைமை இன்னும் குழப்பமானதாக உள்ளது. முன்பு ஓரளவுக்கேனும் இருந்த ஒற்றுமை நிலைமை இன்று இல்லாது போய்விட்டது. குழப்பவாதிகளையும், சந்தர்ப்பவாதிகளையும் நிராகரிப்போம். சமாதான விரும்பிகளையும், சமூக அக்கறை கொண்டவர்களையும் ஆதரிப்போம் என்றும் அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கந்தகாடு கைகலப்பில் ஐந்து பேருக்கு காயம்

சிகிச்சையளிப்பதற்காக, அந்த மத்திய நிலையத்தில் அனுமதிக்கப்பட்டவர்களே இவ்வாறு, நேற்று காலை (22) கைகலப்பில் ஈடுபட்டுள்ளனர் எனத் தெரியவருகின்றது.

காயமடைந்தவர்களின் நிலைமை அவ்வளவு மோசமானதாக இல்லையெனத் தெரிவித்த பொலன்னறுவை பெரியாஸ்பத்திரியின் பணிப்பாளர். விசேட வைத்தியர் சம்பத் இந்திக குமார, பொலிஸ் பாதுகாப்புடன் அவர்களுக்கு சிகிச்சையளிக்கப்பட்டு வருகின்றது என்றார்.

கந்தகாடு மற்றும் சேனபுர ஆகிய இடங்களிலுள்ள, போதைப்பொருள்களுக்கு அடிமையானவர்களுக்கு புனர்வாழ்வளிக்கும் மத்திய நிலையங்களில், கொரோனா வைரஸ் தொற்றுக்குள் உள்ளானவர்கள் இனங்காணப்பட்டனர். அவர்கள், வெலிக்கந்த- கந்தகாடு தனிமைப்படுத்தல் மத்திய நிலையத்துக்கு நேற்று காலை அழைத்துவரப்பட்டனர்.

இதேவேளை, கந்தகாட்டில் அமைந்துள்ள புனர்வாழ்வளிப்பு நிலையத்தில் சிகிச்சைபெறும், கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளானவர்களின் எண்ணிக்கை 279ஆகும். வெலிக்கந்த- சேனபுர




புனர்வாழ்வளிப்பு நிலையத்தில் கொரோனா தொற்றுக்கு உள்ளானவர்களின் எண்ணிக்கை 84ஆகும். அவர்கள், இரண்டு குழுக்களாகப் பிரிந்தே இவ்வாறு கைகலப்பில் ஈடுபட்டுள்ளனர் என ஆரம்பக்கட்ட விசாரணைகளிலிருந்து கண்டறியப்பட்டுள்ளது.

கைகளால் தாக்கி, கால்களால் எத்திக்கொண்டது மட்டுமன்றி, விசேட மத்திய நிலையத்தின் சுகாதார பாதுகாப்புக்காக பயன்படுத்தப்படும் தும்புத்தடி, விளக்குமாறு ஆகியவற்றையும் கொண்டு, தாக்கிக்கொண்டனர் என, விசாரணைகளின் ஊடாகக் கண்டறிப்பட்டுள்ளதெனத் தெரிவித்த வெலிக்கந்த பொலிஸார், அங்கு பாதுகாப்புக் கடமைகளில் ஈடுபட்டிருந்த இராணுவத்தினரே, நிலைமையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தனர் என்றனர்.

# 'வாய்ப்பு'



வடக்கு, கிழக்கு வாழ் மக்கள், விவசாயம், மீன்பிடித்துறையில் வளர்ச்சி காண்பதற்கான வாய்ப்புக் கிட்டியுள்ளது. அதனால், இச்சந்தர்ப்பத்தை அவர்கள் சரியாகப் பயன்படுத்திக் கொண்டால், பொருளாதார ரீதியான அபிவிருத்தியை நோக்கிப் பயணிக்க முடியுமென, தமிழ்மிரருக்குத் தெரிவித்தார்.

கொரோனாவால், முழு உலகமும் பொருளாதார ரீதியில் சிக்குண்டுள்ள நிலையில், இதிலிருந்து மீள்வதற்கு எவ்வளவு காலமெடுக்கும் என்று கூற முடியாதெனத் தெரிவித்த விக்கிரமசிங்க, கொரோனா பிரச்சினையால் ஏற்பட்டுள்ள தொழில் இழப்பு, வாழ்வாதாரச் சிக்கல்களைப் போக்க, தற்போதைய அரசாங்கத்திடம், முறையான திட்டமிடல் இல்லையென்றும் சாடினார்.

இதனால், வடக்கு, கிழக்கு மாகாணங்களில் பிரசித்திபெற்ற விவசாயம், மீன்பிடி போன்ற துறைகளை விருத்தி செய்துகொள்வது, அப்பிரதேசங்களைச் சேர்ந்த மக்களின் தற்போதைய வாழ்வாதாரச் சிக்கல்களுக்கு, ஓரளவு தீர்வு கொடுக்குமெனத் தான் நம்புவதாக, அவர் மேலும் கூறினார்.

# நவம்பர் 12இல் ஆராய்வு



மட்டுப்படுத்தப்பட்ட எதிர்ப்புகளை செப்டெம்பர் 30ஆம் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ தாக்கல் செய்யுமாறு உத்தரவிட்டுள்ள உயர்நீதிமன்றம், அது தொடர்பில், பதிலெதிர்ப்புகள் இருப்பின், அவற்றை ஒக்டோபர் 9ஆம் திகதிக்கு முன்னர் தாக்கல் செய்யுமாறு, மனுதாரருக்கு உயர்நீதிமன்றம் கட்டளையிட்டது.

இந்த மனு அழைக்கப்பட்டபோது, சட்டமா அதிபர் சார்பில், நீதிமன்றத்தில் ஆஜராகியிருந்த பிரதி சொலிஸிட்டர் ஜெனரல் அவந்தி பெரேரா, "மனு தொடர்பில், தனக்கு நேற்றே (நேற்றுமுன்தினம்) அறிவுறுத்தப்பட்டது. ஆகையால், மேலதிக ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்வதற்கு தனக்கு காலம் தேவை" என நீதிமன்றத்தின் கவனத்துக்கு கொண்டுவந்தார்.

இந்த மனு, பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரிய, நீதியரசர்களான எஸ். துரைராஜா, மூர்து பெர்ணான்டோ ஆகியோர் முன்னிலையில், நேற்று (22) அழைக்கப்பட்டது. இதன்போதே, மட்டுப்படுத்தப்பட்ட எதிர்ப்புகளை மட்டுமே சமர்ப்பிக்குமாறு கட்டளையிட்ட உயர்நீதிமன்றம் மனுவை நவம்பர் 12ஆம் திகதியன்று ஆராய்வதற்கு தீர்மானித்தது.

இன்றைக்கு 33 வருடங்களுக்கு முன்னர், இடம்பெற்ற படுகொலைக்கு எதிராக, ஜூன் 30ஆம் திகதியன்று, அந்தப் படுகொலையிலிருந்து உயிர்த்தப்பி, வலதுகுறைந்துள்ள ஆதாஉல்பன புத்தசார தேரரின் சார்பில் மனுத்தாக்கல் செய்யப்பட்டது.

தற்போது உயிருடன் இருக்கும் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பைச் சேர்ந்தவர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யுமாறு, பதில் பொலிஸ் மா அதிபருக்குக் கட்டையிடுமாறே, அம்மனுவில் கோரப்பட்டுள்ளது. அதேபோல, பாதிக்கப்பட்ட தரப்பினருக்கு 20 மில்லியன் நட்டஈடாக வழங்குவதற்கு வழிசமைக்குமாறும், கோரப்பட்டுள்ளது.

சட்டத்தரணி மோதின்ன ஏக்கநாயக்க ஊடாகத் தாக்கல் செய்யப்பட்டுள்ள அம்மனுவில், பதில் பொலிஸ் மா அதிபர், அரச புலனாய்வுத்துறைப் பணிப்பாளர் சுரேஷ் சாலே மற்றும் சட்ட மா அதிபர் ஆகியோரின் பெயர்கள், பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# 'மனைவி முஸ்லிம் என்பதாலா புவனேகபாஹு'க்கு இந்தப் பேரிடி'

அவருடைய மனைவி, முஸ்லிம் என்பதாலா, புவனேகபாஹு மன்னனின் சட்டசபை மண்டபம், இடித்தழிப்பு செய்யப்பட்டதெனக் கேட்டார்.

"13ஆம் நூற்றாண்டில், குருநாகல் இராசதானிக்கு சொந்தமான, புவனேகபாஹு ஹோட்டல் என்றழைக்கப்படும், இரண்டாம் புவனேகபாஹு மன்னனின் சட்டசபை மண்டபம், இடித்தழிப்பு செய்யப்பட்டமை தொடர்பில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் கருத்து விகடமானது, கேவலமானது" என மனோ கணேசன் கண்டித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் காரியாலயத்தில் நேற்று (22) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துரைத்த அவர், புவனேகபாஹு மன்னனின் தராதரம் குறைந்தது என்பதாலேயே அம்மண்டபம் தரைமட்டமாக்கப்பட்டது எனவும் கேட்டார்.

முஸ்லிம் பெண்ணைத் திருமணம் செய்ததால் புவனேகபாஹு மன்னனின் தராதரம் குறைந்தா போய்விடும். கண்டி இராச்சியத்தின் கடைசி மன்னன் ஓர் இந்திய தமிழர். பிரித்தானியாவுடன் ஒப்பந்தம் செய்யும் போது அவர் தமிழில்தான் கையொப்பம் இட்டுள்ளார் எனத் தெரிவித்த மனோ கணேசன், இலங்கையில் தமிழ் மன்னர்கள் இருந்துள்ளனர். இதுதான் வரலாறாகும் என்றார்.

"இன,மத பேதமின்றி சிங்களவர், தமிழர், முஸ்லிம் என்று வேறுபாடில்லாமல் அன்று வாழ்ந்துள்ளனர். இவ்வாறான நிலையில், புவனேகபாஹு மன்னனின் சட்டசபை மண்டபம் உடைக்கப்பட்டதென்பது மிகவும் பிழையான விடயமாகும்" என்றார்.

தற்போது கிழக்கு மாகாணத்தில் புராதன சின்னங்களைப் பாதுகாப்பதென்ற போர்வையில் ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டுள்ள செயலணியில் எந்தவொரு தமிழரோ, முஸ்லிமோ கிடையாது என்றார்.

# அங்கஜனின் 'என் கனவு யாழ்' வெளியானது

அடுத்த 10 ஆண்டுகளில், நாட்டின் 5 முன்னணி மாவட்டங்களில் ஒன்றாக யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி ஆகியவற்றை மாற்றும் நோக்குடன், "என் கனவு யாழ்" என்னும் தொனிப் பொருளில், குறித்த தேர்தல் விஞ்ஞாபனம் நேற்று (22) வெளியிடப்பட்டுள்ளது.

முன்னாள் விவசாயப் பிரதி அமைச்சரும் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் யாழ். மாவட்ட முதன்மை வேட்பாளருமான அங்கஜன் இராமநாதன் தலைமையில், யாழ்ப்பாணத்தில் உள்ள தனியார் விருந்தினர் விடுதி ஒன்றில் இடம்பெற்றது.

இந்நிகழ்வின்போது, சுதந்திரக் கட்சியின் யாழ். மாவட்ட வேட்பாளர்களை, முதன்மை வேட்பாளர் அங்கஜன் இராமநாதன் அறிமுகம் செய்துவைத்தார்.

குறித்த செயற்றிட்ட வரைவில், அரசியல் தீர்வுக்கான ஆணித்தரமான அழுத்தம், மீண்டும் கல்வியில் முதலிடம், துரித பொருளாதார வளர்ச்சி, விவசாயம், மீன்பிடி, கால்நடைத் துறைகளில் துரித மீளெழுச்சி, மொழி, கலை, கலாசார, பண்பாட்டு, இலக்கியப் புத்தாக்கம், அனைத்துத் தமிழ் உறவுகளையும் ஒரே புள்ளியில் இணைத்தல், உடல், உள நலன்மிக்க ஆரோக்கியமான சமூகத்தை உருவாக்கல், தொழில்நுட்பத்தை மய்யப்படுத்திய சமூகமொன்றைக் கட்டியெழுப்புதல், அறிவுபூர்வமான, சக்திமிக்க மகளிர், இளைஞர்களின் எதிர்காலம், இயற்கை, பௌதீக, ஆளணி வளங்களை மேம்படுத்தல் என, ஆகிய 10 அம்சங்கள், இந்தத் தேர்தல் விஞ்ஞாபனத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# 'தேர்தலுக்கு முன் என்னைச் சிறையிலடைக்க முயற்சி'

ஐக்கிய மக்கள் சக்தியில், குருநாகல் மாவட்டத்தில் போட்டியிடும், மக்கள் காங்கிரஸ் வேட்பாளர் முஹம்மட் நஸீரை ஆதரித்து, குருநாகல், பொத்துஹெரவில், நேற்று (22) நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே, மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"குருநாகலுக்கு இன்று வருவேனா என்பது, எனக்குச் சந்தேகமாகவே இருந்தது. வரமுடியுமா அல்லது வரவிடுவார்களா? என எதுவுமே தெரியாத நிலையில் இருந்தேன். கட்சியின் தவிசாளர் அமீர் அலியுடன் தொடர்புகொண்டு, ஏற்பாடு செய்யப்பட்டுள்ள கூட்டங்களில், என் சார்பில் கலந்துகொள்ள ஆயத்தமாகுமாறும் வேண்டினேன்" என்றார்.



"17 வருடங்கள் அமைச்சராகப் பதவி வகித்துள்ளேன். சுமார் 20 வருடகால அரசியல் அனுபவம் எனக்கிருக்கிறது. அன்றிலிருந்து இன்றுவரையிலும் என்னைப் பற்றிப் போலியான கதைகளை பரப்பினார்களேயொழிய, எந்தக் குற்றச்சாட்டும் பொலிஸில் இதுவரை பதிவு செய்யப்படவில்லையெனத் தெரிவித்த அவர், மக்களுக்கு காணி வழங்கியதற்காக, வழக்குத்தாக்கல் செய்தனர், சமூகத்துக்காக பேசியதனால் மதவாதிகள் நீதிமன்றத்தை நாடினர்.



# விரைந்து பாதுகாக்குமாறு மஹிந்தவிடம் பரிந்துரை

மேற்படி கட்டடத்தின் முன்பக்கக் கூரையின் ஒரு பகுதிக்கும் ஜன்னல்களுக்கும் சேதம் விளைவிக்கப்பட்டுள்ளது என்பதால், அப்பகுதிகளைத் தொல்பொருள் ரீதியில் ஆராய்ச்சிக்கு உட்படுத்த வாய்ப்புள்ளது என்றும் முழுமையாகச் சேதமாக்கப்பட்டுள்ள பின்பக்கத்திலுள்ள மரத்தாலான விட்டங்கள் மற்றும் செங்கல்கள் உள்ளிட்ட கட்டடப் பொருள்கள் பாதுகாப்பாக உள்ளன என்றும், அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த விடயங்கள் தொடர்பில், இதற்கு முன்னர் தொல்பொருள் திணைக்களத்தினால் விரிவாக அறிக்கையிடப்பட்டுள்ள அதேவேளை, பாதுகாப்புத் திட்டங்கள் தயார்படுத்தப்பட்டு உள்ளதால், அந்தப் பழைமைவாய்ந்த பகுதியை மீட்டெடுப்பதற்கான வாய்ப்புள்ளது என்றும் அதனால், பழைமைவாய்ந்த கட்டடம் விரைந்து பாதுகாக்கப்பட வேண்டும் என்றும், அறிக்கையில் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

அத்துடன், இக்கட்டடத்தைத் தொல்பொருள் திணைக்களத்துக்குக் கையகப்படுத்துமாறும் வலியுறுத்தப்பட்டுள்ள அதேவேளை, குறித்த இடத்தை விரிவாக்கும் திட்டத்தைத் திருத்துமாறு, வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு ஆலோசனை வழங்குமாறும் கோரப்பட்டுள்ளது.

இந்தச் சேதமாக்கலுக்குப் பொறுப்புக்கூற வேண்டிய நிறுவனம் அல்லது நபர்களின் பாதுகாப்புக்கு அவசியமான ஏற்பாடுகளைச் செய்யுமாறும், இடைக்கால அறிக்கையினூடாகக் கோரப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

பிரதமரின் ஆலோசனைகளுக்கமைய, புத்தசாசன மற்றும் கலாசார விவகாரங்களுக்கான செயலாளரால், இந்தக் குழு நியமிக்கப்பட்டதுடன், தொல்பொருள் திணைக்களப் பணிப்பாளர் நாயகம் பேராசிரியர் செனரத் திசாநாயக்க இதற்குத் தலைமை வகிக்கின்றார்.

# 3 வேட்பாளர்கள் கைது


சட்டவிரோதமான முறையில் நுழைந்து, அச்சுறுத்தியமை, சட்டத்திட்டங்களை மீறியமை, சட்டவிரோதமான பிரசாரங்களை முன்னெடுத்தமை, சட்டவிரோதமான முறையில் சுவரொட்டிகளை ஒட்டியமை ஆகியனவற்றுக்கு எதிராகவே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் எனத் தெரிவித்த அவர், அவர்களுக்கு எதிராக சட்டரீதியில் நடவடிக்கைகள் எடுக்கப்படவுள்ளன என்றார்.

# 'இனம், மத தகவல்கள் இனி உள்ளடக்கப்படாது'

இதேவேளை, தாய் - தந்தையின் திருமண விவரங்களையும் பிறப்புச் சான்றிதழில் உள்ளடக்காமல் இருப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளதென தெரிவித்துள்ள அவர், தாய் - தந்தையரின் திருமண விவரங்களால் சிறுவர்கள் சமூகத்தில் எதிர்நோக்கும் பிரச்சினைகளை கருத்திற் கொண்டு இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டது என்றார்.

நாட்டின் அனைத்துப் பிரஜைகளினதும் புதிய பிறப்புச் சான்றிதழில் இலங்கையர் என குறிப்பிடப்படும் எனத் தெரிவித்த அவர், பெற்றோர், திருமணமானவர்களா அல்லது திருமணமாகாதவர்களா என்ற விடயம் பிறப்புச் சான்றிதழ்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையால், பாடசாலைகளில் பிள்ளைகளைச் சேர்க்கும் போது, அவர்கள் பெரிதும் மன உளைச்சலுக்கு ஆளாகிய சந்தர்ப்பங்கள் உள்ளன என்றார்.

டிஜிட்டல் முறைமையிலான புதிய பிறப்புச் சான்றிதழ்களை பொதுத் தேர்தலின் பின்னர் விநியோகிப்பதற்குத் திட்டமிட்டுள்ளதாகத் தெரிவித்த பதிவாளர் நாயகம் என்.சீ. விதானகே, பிறப்பின் போது ஆள் அடையாளத்தை உறுத்திப்படுத்தும் வகையில் 12 இலக்கங்கள் வழங்கப்படும். அந்த இலக்கங்களே பிற்காலத்தில் தேசிய அடையாள அட்டை உள்ளிட்ட ஆவணங்களை வழங்குவதற்கும் பயன்படுத்தப்படும் என்றார்.



# ‘பெண்களிடம் மாற்றம் உருவாக வேண்டும்’

■ சொர்ணகுமார் சொரூபன்

“தேர்தலில் போட்டியிடும் பெண்கள் அனைவருமே, நாடாளுமன்றம் செல்லத் தகுதியானவர்கள். அவர்கள் அனைவரையும் நாடாளுமன்றம் அனுப்பிவையுங்கள்” என ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் யாழ். தேர்தல் மாவட்ட வேட்பாளர் பவதாரணி ராஜசிங்கம், வாக்காளர்களிடம் வேண்டுகோள் விடுத்தார்.

“பெண்களே, பெண்களைத் தெரிவுசெய்வதில்லை. எனவே, மாற்றம் பெண்களிடமிருந்தே வரவேண்டும். எந்தக் கட்சிக்கு வாக்களித்தாலும் அதிலுள்ள ஒரு பெண் வேட்பாளருக்கு நிச்சயம் வாக்களியுங்கள்” எனவும் கேட்டுக்கொண்டார்.

விழுது ஆற்றல் மேம்பாட்டு மய்யத்தின் ஏற்பாட்டில், வீரசிங்கம் மண்டபத்தில் யாழ். தேர்தல் மாவட்ட பெண் வேட்பாளர்களுக்கான ஒன்றுகூடல் நேற்று (22) நடைபெற்றது.

இதில் கலந்துகொண்ட அவரிடம், மேற்படி மய்யத்தால் எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதில் அளிக்கும்போதே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கருத்துரைக்கையில், “இவ்வாறான ஒருங்கிணைப்பொன்றை ஆண்களிடம் ஏற்படுத்த முடியாது. ஆனால், இன்று நாம் பெண்கள் அனைவரும் வேற்றுமையில் ஒற்றுமையைக் கண்டு, அதற்காக இங்கே இணைந்திருக்கிறோம். இந்த மாற்றம் எங்களால் முடியுமானதொன்று. நாங்கள் கட்சியால் வேறுபட்டாலும் மக்கள் தேவைகள் தொடர்பில ஒன்றுபட்டு இருப்போம்.

“பெண்களது வாழ்வாதாரம் தொடர்பிலான திட்டங்களை, நான் ஏற்கெனவே வகுத்துள்ளேன். இவற்றில் உணவு, உடை, உறையுள் என்ற அடிப்படை வசதிகளே முதலில் தீர்க்கப்பட வேண்டும்” என்றார்.



த.தே.கூவின்

# ‘கரங்களைப் பொதுமக்கள் பலப்படுத்த வேண்டும்’

■ ஏ.எச்.ஏ. ஹுஸைன்

“தமிழ் மக்களின் இருப்பு, தொடர்ந்தும் பாதுகாக்கப்பட வேண்டுமாயின் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் கரங்களைத் தமிழ் மக்கள் மேலும் பலப்படுத்த வேண்டும்” என, அக்கட்சி சார்பில், மட்டக்களப்பில் போட்டியிடும் வேட்பாளர் மாணிக்கம் உதயகுமார் தெரிவித்தார்.

மட்டக்களப்பு புற நகர்ப் பகுதியில் நேற்று (22) நடைபெற்ற தேர்தல் பரப்புரை மக்கள் சந்திப்புகளில் கலந்துகொண்டு, அவர் இந்தக் கருத்தைத் தெரிவித்தார்.

வடக்கு, கிழக்கில் வாழும் தமிழ் மக்களுக்கு, தமது பூர்வீகத்தைப் பாதுகாக்கும் வரலாற்றுக் கடமை உள்ளதாகவும் அவர் வலியுறுத்தினார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

“தமிழ் மக்களின் உரிமைகளுக்காகத் தொடர்ந்தும் குரல்கொடுத்து, அம்மக்களின் இருப்பைப் பாதுகாத்து வருகின்ற ஒரேயொரு கட்சி, தமிழ்த் தேசிய கூட்டமைப்பு மாத்திரமே. நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில், வடக்கு, கிழக்கில் பல தமிழ்க் கட்சிகள் போட்டியிட்டாலும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பைத் தவிர்ந்த ஏனைய கட்சிகள் அனைத்துமே, பேரினவாதக் கட்சிகளின் பங்காளிகள் அல்லது, ஆதரவுக் கட்சிகளாகவேதான் களமிறங்கியுள்ளன” என்று தெரிவித்த உதயகுமார்,

“இது தமிழ் மக்களின் ஒற்றுமையைச் சிதறடிப்பதற்கான பேரினவாத நிகழ்ச்சி நிரலின் ஒரு பகுதி என்பதையும் தமிழ் மக்கள் புரிந்துகொள்ள வேண்டும்” என்று தெரிவித்தார்.



பொருண்மிய மேம்பாட்டின் ஊடாகவே

# ‘தமிழ்த் தேசியத்தை, தக்கவைக்க முடியும்’

■ மு.தமிழ்ச்செல்வன்

எமது இனத்தின் இருப்பையும் தனித்துவத்தையும் பாதுகாப்பதற்கு பொருளாதார அடிப்படை பலப்படுத்தப்பட வேண்டியது அவசியம்.

“பொருண்மிய மேம்பாட்டின் ஊடாகத் தமிழ்த் தேசியத்தையும் அதன் நிலைபேற்றுக்கு அடிப்படையான இருப்பையும் தக்க வைக்க வேண்டிய கட்டமைப்புகளை உருவாக்க முடியும்” என கேடயச் சின்னத்தில், சுயேச்சைக் குழுவில் போட்டியிடுகின்ற மு. சந்திரகுமார் தெரிவித்தார்.

மலையாளபுரம் கிராமத்தில் நேற்று முன்தினம் (20) நடைபெற்ற பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றும் போதே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் உரையாற்றுகையில்,

“அனைவருக்குமான தொழில்வாய்ப்புகளைப் பெறுவதற்கேற்ற வகையில், மாவட்டங்களின் பொருளாதார, உற்பத்திக் கட்டமைப்புகளை விரிவாக்குதல் வேண்டும்.

“அத்தோடு, கிளிநொச்சி அறிவியல் நகரில் உருவாக்கப்பட்ட ஆடைத்தொழிற்சாலைகள், பழத்தொழிற்சாலை, முழங்காவிலில் உருவாக்கப்பட்ட நண்டு பதனிடும் தொழிற்சாலைகளைப் போல இன்னும் பல தொழிற்சாலைகளை உருவாக்கி, ஆயிரக்கணக்கான நேரடியானதும் மறைமுகமானதுமான வேலைவாய்ப்புகளை ஏற்படுத்த வேண்டும்.

“தமிழர் பிரதேசங்களில் புலம்பெயர் சமூகத்தினர் முதலீடு செய்து உற்பத்திகளை ஆரம்பிப்பதற்கும் வேலை வாய்ப்புகளை வழங்குவதற்கும் ஏற்ற நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.



காணாமற்போனோர்,

# ‘அரசியல் கைதிகள் விடயங்களுக்கு முற்றுப்புள்ளி வைப்பேன்’

■ க.அகரன்

“காணாமற்போனோர், அரசியல்கைதிகள் போன்ற விடயங்களில் அரசாங்கத்துடன் கலந்துரையாடி, உறுதியான நிலைப்பாட்டை எடுத்து, அதற்கு முற்றுப்புள்ளிவைப்பேன்” என்று, பொதுஜன பெரமுன கட்சியின் வன்னி மாவட்டத் தேர்தல் தொகுதி வேட்பாளர் மு.கனகரட்ணம் தெரிவித்தார்.

வவுனியா தமிழ் ஊடகவியலாளர் சங்க அலுவலகத்தில் நேற்று முன்தினம் (21) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்து கருத்துரைத்த அவர், “வன்னியின் அபிவிருத்தி பற்றி நன்கு அறிந்தவன் நான். வன்னி மக்கள் போரால் கடுமையாகப் பாதிக்கப்பட்டவர்கள். அபிவிருத்தி, வேலைவாய்ப்பு போன்ற விடயங்கள் எமது மக்களுக்குக் கிடைப்பது மிகவும் குறைவு. அவற்றைத் தீர்த்துவைக்கவேண்டிய தேவை இருக்கின்றது. தற்போதைய அரசாங்கத்தின் பிரதமர், ஜனாதிபதி ஆகியோர் என்னுடன் மிகுந்த நெருக்கமான உறவை வைத்துள்ளனர். இந்த அரசாங்கத்துடன் இணைந்தாலே இங்குள்ள பிரச்சினைகளைத் தீர்த்து, இந்தப் பகுதியைக் கட்டியெழுப்ப முடியும்” என்றார்.



கட்சியின் பிளவுகளைத் தீர்க்க முடியாதவர்கள்

# ‘சமூகத்தின் பிரச்சினைகளை எவ்வாறு தீர்ப்பார்கள்?’

■ ஹஸ்பர் ஏ ஹலீம்

‘எதிர்த்தரப்பில் உள்ளவர்களது கட்சிக்குள் பல பிளவுகள் காணப்படுகின்றன. அவற்றைத் தீர்க்க முடியாதவர்கள், எப்படி சமூகத்தின் பிரச்சினைகளைத் தீர்க்க முடியும்?” என ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் திருகோணமலை மாவட்ட வேட்பாளர் எஸ்.எம்.சுபியான் கேள்வியெழுப்பினார்.

தம்பலகாமம், சிராஜ் நகர் பகுதியில் நேற்று முன்தினம் நடைபெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்தும் உரையாற்றுகையில், “இங்கு அரசியலில் போட்டியிடுபவர்கள், தங்களது சுய அரசியலுக்காகவே செயற்படுகிறார்கள். தாங்கள் போட்டியிடும் கட்சி சார்பில் எத்தனை ஆசனங்கள் பெறுவோம் என்ற எண்ணமே தவிர, சமூக அக்கறை கொண்டவர்களாக இல்லை.

“கொரோனா வைரஸ் காலங்களில் அதை ஒழிக்கவேண்டும் என்ற முயற்சியில், சிறந்த நிர்வாகத்தை வழி நடத்தியவராக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ திகழ்கிறார். சமூக நலனுக்காகவும் முஸ்லிம்களின் விடயத்திலும் திறம்படச் செயற்பட்டார். எல்லோரும் ஒரே நீதி என்றவாறு பாகுபாடின்றிச் செயற்பட்டார்” என்றார்.









# ‘தேசிய இனத்துக்கான உரிமைகள் தமிழர்களுக்கும் வேண்டும்’



சொர்ணகுமார் சொரூபன்

தமிழ் மக்களாகிய நாம், ஒரு தேசிய இனம். எண்ணிக்கையின் அடிப்படையில்தான், சிறுபான்மையினர் என்று சொல்லப்படுகின்றோம். ஆனால், ஒரு தேசிய இனம் எப்படியான உரிமைகளுடன் வாழ வேண்டுமோ, எப்படியான அதிகாரங்களைக் கொண்டிருக்க வேண்டுமோ, அவற்றைப் பெற்றுக்கொள்ளக்கூடிய உரித்துடைய இனமாக இருக்கிறோம்” என, தமிழ்த் தேசிய கூட்டமைப்பில் யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்தில், வீட்டுச் சின்னத்தில் இலக்கம் 7இல் போட்டியிடும் பா. கஜதீபன் தெரிவித்தார்.

தமிழ்மிரருக்கு வழங்கிய செவ்வியிலேயே, அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் வழங்கிய செவ்வியின் முழு விவரம் வருமாறு:

**கே: வடமாகாண சபையின் உறுப்பினராக இருந்துள்ளீர்கள். அந்த வகையில், மாகாண சபையின் அதிகாரங்களைக் கொண்டு செய்யக்கூடியவற்றைச் செய்யவில்லை என்ற குற்றச்சாட்டு நிலவுகிறது. இது தொடர்பான உங்கள் நிலைப்பாடு என்ன?**

அரசமைப்பின் 13ஆவது சீர்திருத்தத்தினூடாக, தமிழ் மக்களுக்காகக் கிடைத்த ஒரு சிறிய அலகுதான் மாகாண சபையாகும். இந்நிலையில், வடக்கும் கிழக்கும் உடைக்கப்பட்டு, காணி, பொலிஸ் அதிகாரம்கூடப் பிடுங்கப்பட்டு, மிகக்குறைவான அதிகாரங்களுடன் மாகாண சபை இருக்கும் நிலையில், இதன் மூலம் நிறையச் சாதிக்க முடியும் என்று கூறினால், அது ஏற்புடையதல்ல. விக்னேஸ்வரன் ஐயா முதலமைச்சராக இருந்தார். அதனால்தான் வேலைசெய்ய முடியவில்லை என்ற குற்றச்சாட்டும் முன்வைக்கப்படுகிறது. உண்மையில், விக்னேஸ்வரன் மட்டுமல்ல, வேறு யார் முதலமைச்சராக இருந்திருந்தாலும், மக்களின் அபிலாசைகளைத் தீர்த்து வைத்திருக்க முடிந்திருக்காது என்றே நம்புகிறேன்.

இதேவேளை, செய்யக்கூடிய பல வேலைகளைச் செய்யவில்லை என்பதிலும் உண்மை இருக்கிறது. இதில், நாம் அனைவரும், கூட்டுப் பொறுப்பு ஏற்கவேண்டியுள்ளது. வெறுமனே முதலமைச்சரையோ, அமைச்சரவையையோ சுட்டிக்காட்டிவிட்டு தப்பிப்பதில் அர்த்தமில்லை.

அன்றைய காலகட்டத்தில், சபையில் செய்திருக்கக் கூடியவற்றைச் செய்திருக்கலாம் என்ற நிலை இருந்தது. இவ்விடயம் என் மனதிலும் உள்ளது. எனது இறுதி மாகாண சபை உரையில்கூட, நான் இதைத் தெரிவித்திருந்தேன். நாம், இன்னும் வினைத்திறனோடு செயற்பட்டிருக்கலாம் என்ற நிலைப்பாடும் உண்மையில் உண்டு.

**கே: மாகாண சபை ஊடாகச் செய்ய முற்பட்ட அபிவிருத்தி முயற்சிகளுக்கு ஏற்பட்ட தடைகள், இடையூறுகள் தொடர்பில் கூறுங்கள்.**

மாகாண சபையைப் பொறுத்தவரையில், பாரிய அரசியல் பேசும் இடமாக இருக்க முடியாது. மாகாண சபைக் கட்டமைப்பு என்பது, ஒரு சிறிய அலகு. வடமாகாண சபை என்பது, சுமார் 10 முதல் 11 இலட்சம் மக்களைக் கொண்ட சிறிய அலகாக இருந்தது. அந்த அலகிலிருந்து, பல நியதிச்சட்டங்கள் உருவாக்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால், அவை உருவாக்கப்படவில்லை. அவற்றை உருவாகுவதற்கு முயற்சிகள் எடுத்ததாகக் கூறப்படுகிறது. அதற்கான நடவடிக்கைகளை, அமைச்சரவை விரைந்து செயற்படுத்தியிருக்க வேண்டும் என்பதே என்னுடைய கருத்து.

அதில் பல தவறுகள் இருக்கின்றன. எம்முடைய கட்சித் தலைமைகள் இழைத்திருக்கக் கூடிய தவறுகளாகவும் இருந்திருக்க முடியும் என்பதையும் நாம் சொல்லலாம். நீதியரசர், நிறைந்த கல்விமான்; சட்டம் தெரிந்தவர்; நல்ல மனிதர். இன்றும் அவரை மதிக்கிறேன். ஆனால், இந்தத் தகுதிகளைக் கொண்டு, அவர் அரசியலைச் சரியாகச் செய்தார் என, நான் கருதவில்லை. அரசியல் என்பது வேறு துறை; அதில் விருப்பமிருக்க வேண்டும். மக்களோடு வாழ்ந்திருக்கக் கூடியவர்களாகவும் அவர்களை நேசிக்கக் கூடியவர்களாகவும் இருக்க வேண்டும். இது தொடர்பான பல கேள்விகள், அன்று விக்னேஸ்வரனை முதலமைச்சராகக் கொண்டுவரும் போதே இருந்தன. இவர், இந்த மண்ணுக்கு உரியவராக இல்லை. அவர் சார்ந்த குடும்பம், கொழும்பைத் தளமாகக் கொண்டது என்றெல்லாம் கூறப்பட்டது. அதுபோல், அவர் அமைத்திருந்த அமைச்சரவையும் அவ்வாறே அமைந்தது.

அவர் அமைச்சரவையைத் தெரிவுசெய்யும் போது, ஒரு வேடிக்கையான சம்பவம் நடந்தது. அதாவது, அமைச்சரவைக்குத் தெரிவு செய்யப்படுவதற்கு முன்னால், அனைவரும் தங்கள் சுயவிவரக் கோவையைத் தாருங்கள் என்று கேட்டார். இது, அரசியலில் ஆச்சரியப்படத்தக்க விடயமாக இருந்தது. இதன்படி, வைத்தியராக இருப்பவர் சுகாதார அமைச்சராகவும் கல்விப் புலத்தில் சாதித்தவராக இருந்தால் கல்வி அமைச்சர் என்றும் விவசாயம், சூழலியல் தெரிந்தால் அவர் விவசாய அமைச்சர் என்றும் தனது அமைச்சரவைத் தெரிவை மேற்கொண்டார். இவ்விடத்தில், அமைச்சரவையில் அங்கம் வகித்தவர்களின் ஆளுமையைத் தரக்குறைவாகப் பேசவில்லை. வடக்கு மாகாண சபையில் அங்கம் வகித்த உறுப்பினர்கள் அனைவரும், ஏதோ ஒரு வகையில், ஏதோ ஒரு துறையில் சிறந்தவர்களாகவே இருந்தார்கள். ஆனால், முதற்கோணல் முற்றும் கோணலாகவே இருந்தது.

நீண்டகால அரசியல் அனுபவமுள்ளவர்கள் சபையில் இருந்தார்கள். ஆனால் அவர்கள், அமைச்சரவைத் தெரிவின்போது கண்டுகொள்ளப்படவே இல்லை. ஆகவே, இவ்வாறான விடயங்கள் ஆரம்பத்திலிருந்தே எமக்கு அதிருப்தியடைய வைத்தன. இவற்றைத் தவிர, முதலமைச்சரின் பிரதம செயலாளராக இருந்தவரையே நிதி விடுவிப்புப் பணிப்பாளராகவும் நியமிக்க வேண்டும். அவ்வாறு அவர் நியமிக்கப்பட்டால் மட்டுமே நிதியைப் பெற்றுக்கொள்வேன் எனத் தெரிவித்தார். ஆனால், முதலமைச்சர் தெரிவுசெய்த நபர், இதில் முன்னனுபவசாலியாக இருந்தாலும், நிதிக் கையாளுகை விடயங்களில் தடை செய்யப்பட்ட நபராக இருப்பதால், அவரை நியமிக்க முடியாதென்று, அந்த நிதிக் கட்டமைப்பு தெரிவித்திருந்தது.

இவ்வாறான செயற்பாடுகளில் முதலமைச்சர் ஈடுபட்டமை, உலகறிந்த விடயம். அதற்கான ஆதாரங்கள், சபையின் ஒவ்வொருவரிடத்திலும் உள்ளன. இதனால், நம்மண்ணுக்கு வரவேண்டிய நிதியெல்லாம் வராமல் போயிருக்கின்றன. இதைத் தவிர, மத்திய அரசாங்கத்தோடு பேசி, செய்யவேண்டிய பல விடயங்களில் நாம் கோட்டை விட்டுள்ளோம்.

மத்திய அரசாங்கத்துடன் பேசி, நமது மக்களுக்கு நிதியைக் கொண்டு வருவதென்பது மக்களுடைய உரிமை. அது, சலுகை அரசியலல்ல. மத்திய அரசாங்கம் தரும் நிதியைக் கொண்டு, மாகாண சபையை நடத்துவதென்பது சாத்தியமற்ற விடயம். அதற்கு, மேலதிகமாக நியதிச் சட்டங்களை உருவாக்கி, நமக்குத் தேவையான நிதிகளைப் பெறுகின்ற செயற்பாடுகளில் நாம் ஈடுபட்டிருக்கவில்லை. இவ்விடயங்களில், நம் அமைச்சரவை அக்கறையுடன் வேலை செய்திருக்கவில்லை என்ற குற்றச்சாட்டு இருந்தது. நிதி மூலங்களைக் கண்டறிந்து, அதற்குரிய செயற்றிட்டங்களைச் செய்திருக்கவில்லை. இதைவிட, எமக்குள் ஏற்பட்ட சிறு சிறு முரண்பாடுகள் பெரியளவில் விரிசலடைந்ததால், வினைத்திறனான மக்கள் நலத்திட்டங்களை முன்னெடுக்க முடியாமல் போனமைக்குக் காரணமாக இருந்தன.

> நீண்டகால அரசியல் அனுபவமுள்ளவர்கள் சபையில் இருந்தார்கள். ஆனால் அவர்கள், அமைச்சரவைத் தெரிவின்போது கண்டுகொள்ளப்படவே இல்லை

> மத்திய அரசாங்கத்துடன் பேசி, நமது மக்களுக்கு நிதியைக் கொண்டு வருவதென்பது மக்களுடைய உரிமை. அது, சலுகை அரசியலல்ல

> வடக்கு மாகாண சபையில் அங்கம் வகித்த உறுப்பினர்கள் அனைவரும், ஏதோ ஒரு துறையில் சிறந்தவர்களாகவே இருந்தார்கள். ஆனால், முதற்கோணல் முற்றும் கோணலாகவே இருந்தது

> ஒரு தேசிய இனம் எப்படியான உரிமைகளுடன் வாழ வேண்டுமோ, அதிகாரங்களைக் கொண்டிருக்க வேண்டுமோ, அவற்றைப் பெற்றுக்கொள்ளக்கூடிய உரித்துடைய இனமாக உள்ளோம்

> வடக்கு மாகாண சபைக்கு, சொற்பமான நிதியே வழங்கப்பட்டது. அது போதுமானதாக இல்லை என்கிற போது, அது திரும்புவதற்கு வாய்ப்பு இல்லை

> கிழக்கில் தமிழ் மக்களுக்கு, முஸ்லிம் சகோதரர்களுடன் முரண்பாடாக உள்ளது. இந்த விடயத்தில், புரிந்துணர்வு ஒன்றை ஏற்படுத்த வேண்டிய பொறுப்புள்ளது



**கே: தமிழ்த் தேசிய கூட்டமைப்பு, இத்தனை காலம் செய்யமுடியாததை இனிவரும் காலங்களிலா செய்யப்போகிறது என்ற கருத்து நிலவுகிறது. இது தொடர்பில் உங்கள் நிலைப்பாடு என்ன?**

இவ்வாறான குற்றச்சாட்டைக் கூறுபவர்கள் யாரென்று பார்த்தால், மிக நீண்டகாலம் அரசியலில் இருப்பவர்களென்பது புரியும். இதில், வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் சி.வி. விக்கினேஸ்வரனை தவிர்த்துப் பார்க்கிறேன். காரணம், மிகச் சொற்பமான காலமே அவருடைய அரசியல் அனுபவம் இருந்தது. பழைய விடயங்களை, அவர் பத்திரிகையில் படித்துத் தெரிந்திருப்பார். ஆகையால், அவரைத் தவிர்த்துப் பார்த்தால், இலங்கை சுதந்திரமடைந்து 72 ஆண்டுகளுக்கும் மேலாக, இந்தப் பிரச்சினை இருந்து வருகின்றது.

இது, கூட்டமைப்பின் காலத்தில் உருவாகிய பிரச்சினை அல்ல. இதைத் தீர்ப்பதற்காக, தந்தை செல்வநாயகம், பண்டாரநாயக்கவுடன் ஒப்பந்தம் ஒன்றைச் செய்திருந்தார். அதைக் கிழிக்க வைப்பதற்காக, ஜே.ஆர்.ஜெயவர்தன, கண்டி யாத்திரை சென்றிருந்தார். ஆகவே, அந்தக் காலத்திலேயே, இப்பிரச்சினைகள் பேசப்பட்டுள்ளன. அன்று, ஐக்கிய தேசிய கட்சி முன்னின்று குழப்பியதற்காக, தந்தை செல்வநாயகம், ஐ.தே.கவுடன் ஒப்பந்தம் செய்யாமலில்லை. ஆகவே, இந்த விடயங்கள் இன்று நேற்றுத் தொடங்கியதைப் போலவும் குறிப்பாக, கடந்த ஐந்து வருடகாலப் பகுதியில் இடம்பெற்றவை போன்றும், இதை இவர்கள் தீர்த்திருக்கலாம் என்று பேசுபவர்கள், மனமுணர்ந்து பொய் சொல்கிறார்கள் என்பது புரியும்.

தந்தை செல்வாவைத் தொடர்ந்து, அமிர்தலிங்கம் முயற்சி செய்திருக்கிறார். இவர்களுடைய முயற்சிகள் சாதாரணமானவை அல்ல. அதன் பிறகு, இவற்றிலிருந்து அதிருப்தியடைந்த இளைஞர் சமுதாயம் மட்டுமல்ல, ஒட்டுமொத்தத் தமிழ்ச் சமுதாயமும் ஆயுதப் போராட்டத்துக்குப் பின் ஒன்றுசேர்ந்தது. இதில், பல இயக்கங்கள் உருவாகின. தமிழீழ விடுதலைப் புலிகள், இதனை இறுதிவரை முன்னெடுத்துச் சென்றனர். இதற்குப் பின்னர், கடந்த பத்து வருடங்களில், குறிப்பாகக் கடந்த ஐந்து வருடங்களில்தான், கூட்டமைப்பினர் அப்பாத்திரத்தை வலுவாக ஏற்றிருந்தனர். ஆகவே, கூட்டமைப்பு சரியாகச் செயற்படத் தவறிவிட்டது என்று கூறுவது, வெறும் விமர்சனத்துக்காக, மக்கள் மத்தியில் தவறான கண்ணோட்டத்தை ஏற்படுத்துவதற்காகச் சொல்லப்படுகின்ற விடயங்களாகும்.

**கே: மத்திய அமைச்சின் நிதி ஒதுக்கீடுகள், சரியான முறையில் பயன்படுத்தப்படாமல் திரும்பியுள்ளன என்ற குற்றச்சாட்டு உள்ளதே?**

வடக்கு மாகாண சபைக்கு, சொற்பமான நிதியே வழங்கப்பட்டது. அது போதுமானதாக இல்லை என்கிற போது, அது திரும்புவதற்கு வாய்ப்பு இல்லை. நிதி வருகை என்பது, நேர்த்தியானதொன்றல்ல. ஒதுக்கப்பட்ட நிதிகளும் முழுமையாக வந்துசேர்வதுமில்லை. ஆனால், விசேடமாக, வந்த நிதிகளைச் சரியான முறையில் கையாளவில்லை என்பது உண்மை.

**கே: தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு எவ்வாறானதாக இருக்க வேண்டும் என எண்ணுகின்றீர்?**

தமிழ் மக்களுடைய அரசியல் தீர்வானது, நீடித்த நிரந்தரமான அரசியல் தீர்வாக இருக்க வேண்டும். அது, குறிப்பாக இன்றைக்கு இருக்கக்கூடிய அரசியல் சூழ்நிலைகளில், இந்த நாட்டுக்குள்தான் ஓர் அரசியல் தீர்வு அமையும். இன்று, தனி நாடு என்பது சாத்தியமற்ற ஒன்றாகும். ஆனால், தமிழ் மக்களுடைய அபிலாசைகளைப் பூர்த்தி செய்யக்கூடியதாக, மக்கள் காலங்காலமாக எதைக் கோரி வந்தார்களோ, அந்தக் கோரிக்கைகளை நிறைவேற்றக் கூடியதான ஓர் அரசியல் தீர்வைத்தான் கூட்டமைப்பு எதிர்பார்க்கின்றது.

தமிழ் மக்களாகிய நாம், ஒரு தேசிய இனம். எண்ணிக்கையின் அடிப்படையில்தான், சிறுபான்மையினர் என்று சொல்லப்படுகின்றோம். ஆனால், ஒரு தேசிய இனம் எப்படியான உரிமைகளுடன் வாழ வேண்டுமோ, எப்படியான அதிகாரங்களைக் கொண்டிருக்க வேண்டுமோ, அவற்றைப் பெற்றுக்கொள்ளக்கூடிய உரித்துடைய இனமாக இருக்கிறோம். சிங்கள மக்கள், எண்ணிக்கையில் அதிகமாக இருக்கின்றனரே தவிர, இதனால் அவர்கள் உயர்ந்தவர்களென்று அர்த்தமல்ல. எண்ணிக்கையில் குறைவாக இருப்பதால், நாம் தாழ்ந்தவர்கள் என்று அர்த்தமல்ல. தமிழ் மக்கள், வடக்கும் கிழக்கும் இணைக்கப்பட்ட பூரண சுயாட்சி ஒன்றை, சமஷ்டி என்ற கட்டமைப்பில் எதிர்பார்க்கின்றனர். இதுதான், ஒட்டுமொத்தத் தமிழ் சமூகத்தின் நிலைப்பாடும் ஆகும்.

**கே: வடக்கு மாகாணத்தின் அபிவிருத்தி தொடர்பான உங்கள் திட்டம் என்ன?**

வடக்கு மக்கள், பொருளாதார ரீதியாக விவசாயம், மீன்பிடி, கைத்தொழில்களில் வளர்ச்சி அடைந்தவர்களாக இருந்து வந்துள்ளார்கள். இந்தப் பொருளாதாரக் கட்டமைப்புகள், கடந்த 30 வருடகால யுத்தத்தால் பல நெருக்கடிகளைச் சந்தித்து, பாதிப்படைந்துள்ளன. அதைக் கட்டமைத்து முன்னெடுக்கும் பாரிய பொறுப்புள்ளது. கடந்த 2 வருடங்களில், குறிப்பாக யாழ். மாவட்டத்தில், மிகப் பெரிய தொகைகள் ஒதுக்கப்பட்டு வேலைத்திட்டங்கள் செய்யப்பட்டுள்ளன. குறிப்பாக, 7,000 மில்லியன் ரூபாய் வரைக்கும் யாழ். மாவட்டத்துக்கான அபிவிருத்தி வேலைகள் செய்யப்பட்டுள்ளன. இதில், பாரிய வேலைத்திட்டங்களாக மயிலிட்டித் துறைமுகம், பருத்தித்துறை மீன்பிடித் துறைமுகம், பலாலி விமான நிலையம் ஆகிய அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் உள்ளடங்குகின்றன. இவற்றை விட, பல வீதி அபிவிருத்தித் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன. இதுவும், மக்களின் உரிமைகள்தான். இது போதுமானதென சொல்லமாட்டேன்; செய்யவேண்டியது நிறைய உள்ளன. எமது மாகாணத்தின் அபிவிருத்தியையும் முன்நகர்த்திச் செல்லவேண்டிய பாரிய தேவை உள்ளது. இதனைவிட, கல்வி, சுகாதாரங்களில் எமது மாகாணம் வீழ்ச்சியடையவில்லை. மாறாக, மற்றையவர்கள் முன்நோக்கிச் சென்றுள்ளனர். அவர்களை எட்டிப்பிடிக்க வேண்டிய நிலையில் தான் நாங்கள் உள்ளோம்.

**கே: தமிழர் பிரதேசங்களில், மக்கள் இருப்பு, அடையாளங்கள், மரபுரிமைகள் தொடர்ந்து அழிக்கப்படுவதற்கான முயற்சிகள் இடம்பெறுகின்றன. இது தொடர்பில் உங்கள் நிலைப்பாடு என்ன?**

திருகோணமலை, அம்பாறை ஆகிய பிரதேசங்களில், பாரிய பிரச்சினையாக உள்ளது. இந்தப் பிரச்சினை, கிழக்கில் தமிழ் மக்களுக்கு, முஸ்லிம் சகோதரர்களுடன் முரண்பாடாக உள்ளது. இந்த விடயத்தில், புரிந்துணர்வு ஒன்றை ஏற்படுத்த வேண்டிய பொறுப்புள்ளது.

வடக்கில், இந்நிலைமை கொஞ்சம் குறைவாக இருக்கின்றமைக்குக் காரணம், இங்குள்ள காணிகளில் பெரும்பாலானவை, சொந்தக் காணிகளாக உள்ளமையாகும். இது, கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் போன்ற மாவட்டங்களில் இன்னும் அதிகமாக உள்ளன. காரணம், இங்குள்ள அரச காணிகளைக் கையகப்படுத்தி, வரலாறுகளைத் திரிபுபடுத்திச் செயற்படுகிறார்கள் என்ற அச்சம் நிலவுகிறது. இது தொடர்பில் ஒரு போராட்ட அரசியல் களம்தான், எதிர்வரும் ஐந்து வருடங்களுக்கு நிலவும் எனக் கூறமுடியும்.

ஏனெனில், தென்னிலங்கையில் எதிர்க்கட்சி என்ற ஒன்று இல்லை. ரணில் விக்கிரமசிங்க, சஜித் பிரேமதாஸ ஆகியோரின் வெற்றி வாய்ப்புகள் எவ்வாறு அமையும் என்பது கேள்வியாகவுள்ளன. அந்த வகையில், பல அச்சுறுத்தல்கள் தமிழ் மக்கள் மீது திரும்பத்தான் உள்ளன. நல்லாட்சி அரசாங்கத்திலும், இது இல்லை என்று சொல்ல முடியாது. அந்தக் காலப்பகுதியில், சிறிது சிறிதாக இடம்பெற்றவை அனைத்தும், இனிவரும் காலத்தில் மிகப் பாரியளவில் முன்னெடுக்கப்படவுள்ளன.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் வியாழக்கிழமை, 23 ஜூலை 2020, இல. 8, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு 02 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

தேர்தல் சிறப்பிதழ் Rs.10

Find us on facebook/tamilmirror Follow us on tamilmirror epaper/tamilmirror.lk
www.tamilmirror.lk

# தமிழ் Mirror









# 'இ.தொ.கா பிற்போக்கானது

- ஆயிரம் ரூபாயை ஜனாதிபதியால் பெற்றுத்தர முடியாது
- 13, 19இக்கும் ஆபத்து

■ பா.நிரோஸ்

இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் என்பது பிற்போக்குத்தனமான அரசியற் கட்சியென விமர்சித்துள்ள இலங்கை கம்யூனிஸ்ட் ஐக்கிய கேந்திரத்தின் பொதுச்செயலாளர் சட்டத்தரணி இ.தம்பையா, நாடு இராணுவ ஆட்சியை நோக்கி நகர்வதாகவும் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## மைத்திரி, ரணில் சண்டையால்
# 'நானும் பிரதமரானேன்'

■ மொஹொமட் ஆஸிக்



மைத்திரி, ரணில் சண்டையால், எனக்கும் சில நாள் பிரதமராக இருக்கும் வாய்ப்புக் கிடைத்தது என, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

கண்டியில், நேற்று முன்தினம் (21) மாலை நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

# 'ஒகஸ்ட் 1 முதல் பாலர் பாடசாலை'

கொரோனா வைரஸ் அச்சம் காரணமாக, மார்ச் முதல் தொடர்ச்சியாக மூடப்பட்டிருக்கும் பாலர் பாடசாலைகளை ஒகஸ்ட் 1ஆம் திகதி முதல் மீண்டும் திறப்பதற்கு அரசாங்கம் அவதானம் செலுத்தியுள்ளதெனத் தெரிவித்த சுகாதார அமைச்சர் பவித்திரா வன்னியாராச்சி, இதுதொடர்பில், அமைச்சரவைக் கூட்டத்தில் வெகுவாக ஆராயப்பட்டதென்றார்.

அவ்வாறு ஆராயப்பட்டதில், ஒகஸ்ட் 1ஆம் திகதி முதல், பாலர் பாடசாலைகளை ஆரம்பிப்பதற்கு அமைச்சரவையில் அங்கிகாரம் கிடைத்துள்ளதெனத் தெரிவித்த அவர், உத்தியோகபூர்வ அறிவிப்பொன்று,

தொடர்ச்சி P2

# 'மனைவி முஸ்லிம் என்பதாலா புவனேகபாஹுக்கு இந்த பேரிடி'

### மனோ கேள்வி: மஹிந்தவின் கருத்து விகடமானது என்கிறார்

■ றம்ஸி குத்தூஸ்



முஸ்லிம் பெண்ணைத் திருமணம் செய்ததால் புவனேகபாஹு மன்னனின் தராதரம் குறைந்து போய்விடுமா? என பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவிடம் கேள்வியெழுப்பிய ஐக்கிய மக்கள் சக்தியின் கொழும்பு மாவட்ட வேட்பாளர் மனோ கணேசன்,

தொடர்ச்சி P2



## குருநாகல் புவனேகபாஹு கட்டடம்
# விரைந்து பாதுகாக்குமாறு மஹிந்தவிடம் பரிந்துரை

### இடைக்கால அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது

குருநாகல் புவனேகபாஹு ஹோட்டல் நடத்தப்பட்டுவந்த கட்டடம் சேதமாக்கப்பட்டமை தொடர்பான இடைக்கால அறிக்கை,நேற்று (22) முற்பகல், அலரி மாளிகையில் வைத்து,

தொடர்ச்சி P2



# ஒருவிரல் புரட்சி

மொத்த வாக்குகளில் 5% என்ற வெட்டுப்புள்ளிக்குக் குறைவான வாக்குகளைப் பெற்ற கட்சியின் வாக்குகள் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படாது.

இதனடிப்படையில் (360,000x 0.05 = 18,000) பதினெண்ணாயிரத்துக்குக் குறைவான வாக்குகளைப் பெற்ற கட்சிகள் F,G,H ஆகியன பெற்றுக்கொண்ட மொத்தமான 40,000 வாக்குகள் கணக்கெடுக்கப்படாது. இன்னும் விளக்கமாகச் சொல்லப்போனால் இவை கூட ஒருவகையில் செல்லுபடியற்ற வாக்குகளாகவே கருதப்படுகின்றன. இது உண்மையாக வாக்காளர் அளித்த 20,000 செல்லுபடியற்ற வாக்குகளைவிட எண்ணிக்கையில் மிக அதிகம் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இப்போது போனஸ் ஆசனம் தவிர்த்து மீதம் உள்ள 6 ஆசனங்கள், மீதி ஐந்து கட்சிகளும் பெற்ற வாக்குகள் அடிப்படையில் பிரிக்கப்படும். தொடர்ந்து போட்டியில் இருக்கும் கட்சிகளான A, B, C, D, E ஆகியன பெற்ற மொத்த வாக்குகள் (175,000+ 50,000+ 36,000+ 20,000+ 19,000 = 300,000) மூன்று இலட்சம் ஆகும்.

எனவே, ஓர் ஆசனத்தைப் பெறத் தேவையான வாக்குகள் (300,000/6 = 50,000) ஐம்பதினாயிரம் ஆகும். இதன்படி ஆசனப் பங்கீட்டின் முதல் சுற்றில் 50,000 வாக்குகளுக்கு ஓர் ஆசனம் வீதம் வழங்கப்பட்டு, மீதியுள்ள வாக்குகள் இரண்டாம் சுற்று ஆசனப் பங்கீட்டுக்குச் செல்லும்.

இதன்படி ஆசனப் பங்கீட்டின் முதல் சுற்றில் 50,000 வாக்குகளுக்கு ஓர் ஆசனம் வீதம் வழங்கப்பட்டு, மீதியுள்ள வாக்குகள் இரண்டாம் சுற்று ஆசனப் பங்கீட்டுக்குச் செல்லும்.

(தொடரும்)

## ஐ.ம.சவின் வேட்பாளர்கள்
# 'தேர்தல் விதிமுறைகளை மீறுகின்றனர்'

■ சுதத் எச்.எம்.ஹேவா



ஐக்கிய மக்கள் சக்தி சார்பாக நுவரெலியா மாவட்டத்தில் போட்டியிடும் வேட்பாளர்கள் மூவர், தேர்தல் சட்டதிட்டங்களை மீறி செயற்படுகிறார்கள் என்று தெரிவித்துள்ள ஐக்கிய தேசிய கட்சியின் நுவரெலியா மாவட்ட வேட்பாளர் எஸ். கேசவமூர்த்தி,

தொடர்ச்சி P2

# சாரதிக்கு மயக்கமருந்து;

### பணம், நகை கொள்ளை

■ செ.தி.பெருமாள்



மஸ்கெலியாவில், ஓட்டோ சாரதிக்கு மயக்கமருந்து கொடுத்து, அவரிடமிருந்த பணம், அவர் அணிந்திருந்த ஆபரணங்களைக் களவாடிய மூவரை தேடி, பொலிஸார் வலைவிரித்துள்ளனர்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் (21) இடம்பெற்றுள்ளது.

தொடர்ச்சி P2

## குடிநீர் இன்மையால்
# 300 குடும்பங்கள் திண்டாட்டம்

■ 3 கி.மீ தூரம் நடந்து சென்று, நீரைப் பெற்று வரவேண்டிய நிலை உள்ளது

பலாங்கொடை, விகிலிய அல்தொரவத்த பிரதேசத்தில் வாழ்கின்ற மக்கள், குடிநீர் பிரச்சினையால் பெரும் பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்து வருவதாக, அப் பிரதேச மக்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

இப்பகுதியில், சுமார் 300 குடும்பங்கள் இப்பிரச்சினைக்கு முகங்கொடுத்து வருவதாகவும் இவர்கள், ஆங்கிலேயர் ஆட்சி காலத்தில், தோட்டப் பகுதியில் நிர்மாணிக்கப்பட்ட கிணற்றிலேயே இத்தனை காலமும் நீர் பெற்று வந்ததாகவும் எனினும், குடும்பங்கள் அதிகரித்துள்ளமையால், கிணற்று நீர் போதாதுள்ளது என்றும் மக்கள் தெரிவித்தனர்.

தொடர்ச்சி P2



## 15 நாள்களின் பின்னர்
# சிசுவின் சடலம் தோண்டியெடுப்பு

■ எஸ்.சதீஸ்

ஹட்டன் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஹட்டன் - டிக்கோயா தோட்டப் பகுதியிலுள்ள தோட்டமொன்றில் இருந்து, 15 நாள்களுக்குப் பின்னர்,

தொடர்ச்சி P2



PAGE 1 தொடர்ச்சிகள்

## 'நானும் பிரதமரானேன்'

அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில், தோட்டத் தொழிலாளர்களுக்கு நிரந்தர வீடுகள் வழங்குவதற்கு, முன்னாள் அமைச்சர் அமரர் ஆறுமுகன் தொண்டமான் கண்ட கனவை, எதிர்கால அரசாங்கம் நிறைவேற்றும் என்று அவர் கூறினார்.

ஐக்கிய தேசிய கட்சி அரசாங்கம், ஹம்பாந்தோட்டையில் வீட்டைக் கட்டினால், யாழ்ப்பாணத்தில் போஸ்டர்களை ஒட்டினர் என்றும் ஆனால், தாங்கள், எந்தவொரு போஸ்டரும் இல்லாமல், 14,000க்கும் மேற்பட்ட வீடுகளைக் கட்டிக்கொடுத்துள்ளதாகவும் அவர் கூறினார்.

தங்கள் ஆட்சியின்போதே, கிராமப் புறங்களுக்கு கார்பட் பாதை இடப்பட்டது என்றும் கிராம், நகரம் என்ற எந்தவொரு வித்தியாசமும் இன்றி, அபிவிருத்திகள் முன்னெடுக்கப்பட்டன என்றும் அவர் தெரிவித்தார்.

ஜனாதிபதியும் அரசாங்கமும் ஒரே கட்சியில் இருந்தால்தான் நாட்டை முன்னேற்ற முடியும் என்றும் இல்லாவிட்டால் அது முடியாது என்பதற்கு, எமது கடந்தகால



**தோட்டத் தொழிலாளர்களுக்கு நிரந்தர வீடுகள் வழங்குவதற்கு, முன்னாள் அமைச்சர் அமரர் ஆறுமுகன் தொண்டமான் கண்ட கனவை, எதிர்கால அரசாங்கம் நிறைவேற்றும்**

அனுபவங்களே சான்று என்றும் தெரிவித்தார்.

"மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதியாக இருந்தார், ரணில் பிரதமராக இருந்தார். இருவரும் இரு கட்சிகளில் இருந்தனர். சில காலம் ஒற்றுமையாக இருந்தனர். பின்னர் கோபித்துக்கொண்டனர். மைத்திரி சொல்வதை ரணில் செய்வதில்லை; ரணில் சொல்வதை மைத்திரி செய்வதில்லை" என்று அவர் கூறினார்.

இவர்களின் சண்டையால், எனக்கும் சில நாள்கள் பிரதமராக வாய்ப்பு கிடைத்து என்றும் இந்தப் பிரதமர் பதவி, சிறிய காலத்துக்குத் தான் என்பதை தான் அறிந்து வைத்திருந்ததாகவும் அவர் கூறினார்.

அதிலிருந்து, தான் எதிர்க்கட்சித் தலைவரானதாகவும் எதிர்க்கட்சித் தலைவராவதே தனது தேவையாக இருந்தது என்றும் தெரிவித்த அவர், எதிர்க்கட்சித் தலைவர் பதவியில் இருந்து, அடுத்த கட்டத்தை எவ்வாறு முன்னெடுக்க வேண்டும் என்பதை, தான் நன்கு அறிந்து வைத்திருந்ததாகவும் கூறினார்.

## 'இ.தொ.கா பிற்போக்கானது'

கொழும்பு பிரைட்டன் ரெஸ்ட் ஹோட்டலில், நேற்று (22) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே, அவர் இதனைத் தெரிவித்தார்.

இதன்போது தொடர்ந்து உரையாற்றிய அவர், எதிர்வரும் பொதுத்தேர்தலில் ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன மூன்றிலிரண்டு பெரும்பான்மையை மக்களிடம் கோரியிருக்கிறது என்றும் மூன்றிலிரண்டு பெரும்பான்மை கிடைக்கும் பட்சத்தில், அரசமைப்பின் 13ஆவது, 19ஆவது திருத்தச்சட்டங்களையும் நாட்டிலுள்ள சுயாதீனக் குழுக்களையும் இல்லாதொழிக்கப்போவதாகப் பிரசாரம் செய்து வருகிறது என்றார்.

19ஆவது திருத்தச் சட்டம், ஜனாதிபதியின் அதிகாரங்களைக் குறைத்திருக்கின்றபோதிலும், நாட்டில் தற்போது நாடாளுமன்றம் இல்லை என்பதால் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தன்னிச்சையாகவும் சர்வாதிகாரமாகவும் நடந்துக்கொள்கிறார் எனவும் தெரிவித்தார்.

வடக்கு, கிழக்கு புராதானச் சின்னங்கள் தொடர்பில் ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டிருக்கும் செயலணி என்பது முற்றுமுழுதாக இனவாத நோக்கில் மேற்கொள்ளப்படும் செயற்பாடெனவும், வடக்கு கிழக்கு மாத்திரமன்றி முழுநாடும் இராணுவ ஆட்சியை நோக்கி நகர்வதாகவும் குற்றஞ்சுமத்தினார்.

"நாட்டில் முற்றுமுழுதாக அழிந்து வரும் ஜனாநாயகத்தை விட்டுக்கொடுக்க முடியாது. இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் முற்போக்கான கொள்கைகளைக் கொண்டிருக்கிறதா என கேள்வி எழுப்பிய அவர், கடந்த ஜனாதிபதித் தேர்தலின்போது, ஆயிரம் ரூபாய் சம்பள உயர்வைப் பெற்றுத்தருவதாக ஜனாதிபதி வாக்குறுதி வழங்கினார். ஆனால் ஜனாதிபதியால் ஆயிரம் ரூபாய் சம்பளத்தைப் பெற்றுத்தர முடியாதெனவும் தெரிவித்தார்.

எதிர்வரும் பொதுத்தேர்தலில் ஜனநாயக விரோதச் சக்திகளின் வெற்றியைத் தடுப்பதற்கு, ஒப்பீட்டளவில் ஜனநாயகத்தின் பக்கம் நிற்கும் கட்சிகளுக்கும் அமைப்புகளுக்கும் மக்கள் இம்முறை வாக்களிக்க வேண்டுமெனவும் அவர் இதன்போது கேட்டுக்கொண்டார்.

## விரைந்து பாதுகாக்குமாறு மஹிந்தவிடம் பரிந்துரை

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவிடம் கையளிக்கப்பட்டது.

மேற்படி கட்டடத்தின் முன்பக்கக் கூரையின் ஒரு பகுதிக்கும் ஜன்னல்களுக்கும் சேதம் விளைவிக்கப்பட்டுள்ளது என்பதால், அப்பகுதிகளைத் தொல்பொருள் ரீதியில் ஆராய்ச்சிக்கு உட்படுத்த வாய்ப்புள்ளது என்றும் முழுமையாகச் சேதமாக்கப்பட்டுள்ள பின்பக்கத்திலுள்ள மரத்தாலான விட்டங்கள் மற்றும் செங்கல்கள் உள்ளிட்ட கட்டடப் பொருள்கள் பாதுகாப்பாக உள்ளன என்றும், அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**பாதுகாப்புத் திட்டங்கள் தயார்ப்படுத்தப்பட்டு உள்ளதால், அந்தப் பழைமைவாய்ந்த பகுதியை மீட்டெடுப்பதற்கான வாய்ப்புள்ளது**

இவ்விடயங்கள் தொடர்பில், இதற்கு முன்னர் தொல்பொருள் திணைக்களத்தால் விரிவாக அறிக்கையிடப்பட்டுள்ள அதேவேளை, பாதுகாப்புத் திட்டங்கள் தயார்ப்படுத்தப்பட்டு உள்ளதால், அந்தப் பழைமைவாய்ந்த பகுதியை மீட்டெடுப்பதற்கான வாய்ப்புள்ளது என்றும் அதனால், பழைமைவாய்ந்த கட்டடம் விரைந்து பாதுகாக்கப்பட வேண்டும் என்றும், அறிக்கையில் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

அத்துடன், இக்கட்டடத்தைத் தொல்பொருள் திணைக்களத்துக்குக் கையகப்படுத்துமாறும் வலியுறுத்தப்பட்டுள்ள அதேவேளை, குறித்த இடத்தை விரிவாக்கும் திட்டத்தைத் திருத்துமாறு, வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு ஆலோசனை வழங்குமாறும் கோரப்பட்டுள்ளது.

இந்தச் சேதமாக்கலுக்குப் பொறுப்புகூற வேண்டிய நிறுவனம் அல்லது நபர்களின் பாதுகாப்புக்கு அவசியமான ஏற்பாடுகளைச் செய்யுமாறும், இடைக்கால அறிக்கையினூடாகக் கோரப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

பிரதமரின் ஆலோசனைகளுக்கமைய, புத்தசாசன மற்றும் கலாசார விவகாரங்களுக்கான செயலாளரால், இந்தக் குழு நியமிக்கப்பட்டதுடன், தொல்பொருள் திணைக்களப் பணிப்பாளர் நாயகம் பேராசிரியர் செனரத் திசாநாயக்க இதற்குத் தலைமை வகிக்கின்றார்.

## மனைவி முஸ்லிம் என்பதாலா

அவருடைய மனைவி, முஸ்லிம் என்பதாலா, புவனேகபாஹு மன்னனின் சட்டசபை மண்டபம், இடித்தழிப்பு செய்யப்பட்டதென கேட்டார்.

13ஆம் நூற்றாண்டில், குருநாகல் இராசதானிக்கு சொந்தமான, புவனேகபாஹு ஹோட்டல் என்றழைக்கப்படும், இரண்டாம் புவனேகபாஹு மன்னனின் சட்டசபை மண்டபம், இடித்தழிப்பு செய்யப்பட்டமை தொடர்பில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் கருத்து விகடமானது, கேவலமானது என்றார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் காரியாலயத்தில், நேற்று (22) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைத்த அவர், புவனேகபாஹு மன்னனின் தராதரம் குறைந்தது என்பதாலேயா அம்மண்டபம் தரைமட்டமாக்கப்பட்டது எனவும்

**முஸ்லிம் பெண்ணைத் திருமணம் செய்ததால் புவனேகபாஹு மன்னனின் தராதரம் குறைந்தா போய்விடும். கண்டி ராஜ்ஜியத்தின் கடைசி மன்னன் ஓர் இந்திய தமிழர். பிரித்தானியாவுடன் ஒப்பந்தம் செய்யும் போது அவர் தமிழில்தான் கையொப்பம் இட்டுள்ளார்**

கேட்டார்.

முஸ்லிம் பெண்ணைத் திருமணம் செய்ததால் புவனேகபாஹு மன்னனின் தராதரம் குறைந்தா போய்விடும். கண்டி ராஜ்ஜியத்தின் கடைசி மன்னன் ஓர் இந்திய தமிழர். பிரித்தானியாவுடன் ஒப்பந்தம் செய்யும் போது அவர் தமிழில்தான் கையொப்பம் இட்டுள்ளார் எனத் தெரிவித்த மனோ கணேசன், இலங்கையில் தமிழ் மன்னர்கள் இருந்துள்ளனர். இதுதான் வரலாறாகும் என்றார்.

"இன, மத பேதமின்றி சிங்களவர், தமிழர், முஸ்லிம் என்று வேறுபாடில்லாமல் அன்று வாழ்ந்துள்ளனர். இவ்வாறான நிலையில், புவனேகபாஹு மன்னனின் சட்டசபை மண்டபம் உடைக்கப்பட்டதென்பது மிகவும் பிழையான விடயமாகும்" என்றார்.

தற்போது கிழக்கு மாகாணத்தில் புராதன சின்னங்களைப் பாதுகாப்பதென்ற போர்வையில் ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டுள்ள 'செயலணியில் எந்தவொரு தமிழரோ, முஸ்லிமோ கிடையாது என்றார்.



## 'ஒகஸ்ட் 1 முதல் பாலர் பாடசாலை'

கல்வியமைச்சின் ஊடாக விரைவில் வெளியிடப்படும் என்றார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில், இன்று (நேற்று) நடத்தப்பட்ட வாராந்த அமைச்சரவைக் கூட்டத்தில், மேற்படி விவகாரம் தொடர்பில் விரிவாகக் கலந்துரையாடப்பட்டதெனத் தெரிவித்த அவர், கல்வியமைச்சரும், சுகாதார அமைச்சர் என்றவகையில் நானும், பாலர் பாடசாலைகளை ஒகஸ்ட் 1ஆம் திகதியன்று ஆரம்பிப்பதற்கு இணங்கினோம் என்றார்.

## 'தேர்தல் விதிமுறைகளை மீறுகின்றனர்'

இது தொடர்பில் அதிகாரிகள் உரிய கவனம் செலுத்த வேண்டும் என்றும் தெரிவித்துள்ளார்.

ஹட்டனிலுள்ள தனது அலுவலகத்தில், நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும் கருத்துரைத்த அவர், தேர்தல் சட்டதிட்டங்களுக்கு அமைய வேட்பாளரின் விருப்பிலக்கங்களை வேட்பாளரின் வாகனத்தில் மாத்திரமே காட்சிப்படுத்த முடியும் என்றும் ஆனால், நுவரெலியா மாவட்டத்தில் போட்டியிடும் குறித்த வேட்பாளர்களின் ஆதரவாளர்களின் வாகனங்களிலும், விருப்பிலக்கங்கள், பதாகைகள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது என்றும் தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தியில் போட்டியிடும் குறித்த 3 வேட்பாளர்கள் மாத்திரமே, நுவரெலியா மாவட்டத்தில் தேர்தல் சட்டதிட்டங்களை மீறும் வகையில் செயற்படுவதாகவும் எனவே, இந்த வேட்பாளர்களுக்கு எதிராக சட்டநடவடிக்கை எடுக்க, உரிய அதிகாரிகள் முன்வர வேண்டும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## சாரதிக்கு மயக்கமருந்து

இச்சம்பவம் தொடர்பில் தெரிய வருவதாவது, மஸ்கெலியா நகரில் 2ஆவது ஓட்டோ நிறுத்தும் இடத்திலிருந்து நோட்டனிலுள்ள லக்ஷபானவுக்குச் செல்லவேண்டும் எனக் கூறி, 3 இளைஞர்கள் ஓட்டோவொன்றில் வாடகைக்கு அமர்ந்துள்ளனர்.

பாதி தூரம் செல்லும்போது, குளிர்பானம் அருந்தியுள்ள இளைஞர்கள், ஓட்டோ சாரதிக்கும் குளிர்பானம் அருந்தக் கொடுத்துள்ளனர்.

**மஸ்கெலியா நகரில் 2ஆவது ஓட்டோ நிறுத்தும் இடத்திலிருந்து நோட்டனிலுள்ள லக்ஷபானவுக்குச் செல்லவேண்டும் எனக் கூறி, 3 இளைஞர்கள் ஓட்டோவொன்றில் வாடகைக்கு அமர்ந்துள்ளனர்**

இந்நிலையில், ஓட்டோ நோட்டன் பகுதியை அண்மித்தபோது, சாரதி மயக்கமடைந்தமையால், ஓட்டோ வடிகான் ஒன்றின் மீது மோதி நின்றுள்ளது. இதன்போது, சாரதியிடம் இருந்த பணம், நகைகளை அபகரித்துள்ள இளைஞர்கள், அங்கிருந்து தப்பியோடியுள்ளனர்.

ஓட்டோ சரிந்து கிடப்பதைக் கண்ட அயலவர்கள், மயக்கநிலையில் இருந்த சாரதியை, மஸ்கெலியா வைத்தியசாலையில் அனுமதித்துள்ளனர்.

மயக்கம் தெளிந்தப் பிறகு, சாரதி இது தொடர்பில் முறைப்பாடு செய்துள்ளார்.

## 300 குடும்பங்கள் திண்டாட்டம்

இதனால், சுமார் 3 கிலோமீற்றர் தூரம் நடந்து சென்று, நீரைப் பெற்று வரவேண்டிய நிலை உள்ளது என்றும் தற்போது இருக்கும் கிணற்றில் ஒரு மூன்று குடம் நீரைப் பெற்றவுடன், அந்நீர் அப்படியே வற்றிவிடுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. ஏற்கெனவே கூலி வேலை செய்து களைத்துப் போய் இருக்கும் தாங்கள், 3 கிலோமீற்றர் நடந்து செல்வதால், உடல் வலிக்கும் உள்ளாவதாகவும் எனவே, இது குறித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனம் செலுத்தவேண்டும் என, மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். இது தொடர்பாக, பலாங்கொடை பிரதேச சபைத் தலைவர் சுனில் பேமசிரியிடம் வினவிய போது, பலாங்கொடை பிரதேச சபை எல்லைப் பகுதியில் குடிநீர் பிரச்சினை உள்ள கிராமப் பகுதிகளை எதிர்வரும் காலங்களில் இனங்கண்டு, அவற்றை நிவர்த்தி செய்து கொடுக்க நடவடிக்கை எடுக்கவுள்ளதாக அவர் மேலும் கூறினார்.

## சிசுவின் சடலம் தோண்டியெடுப்பு

ஆண் சிசுவொன்றின் சடலம், நேற்று (22) தோண்டியெடுக்கப்பட்டுள்ளது என, ஹட்டன் பொலிஸார் தெரிவித்தனர்.

119 எனும் பொலிஸ் அவசர இலக்கத்துக்கு வந்த அழைப்பையடுத்தே, ஹட்டன் நீதிமன்ற பதில் நீதவான் எஸ். ராமமூர்த்தி தலைமையில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு, சிசு தோண்டியெடுக்கப்பட்டுள்ளது.

சம்பவ இடத்துக்குச் சென்றுள்ள பொலிஸார், தோட்டப் பகுதியை சுற்றிவலைத்து தேடுதலில் ஈடுபட்டனர் என்றும் இதன்போதே, சிசுவின் தாயார் அடையாளம் காணப்பட்டு, பின்னர் அவரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் பின்னரே, சிசு புதைக்கப்பட்ட இடம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

மேற்படி பெண் ஏற்கெனவே திருமணம் ஆண இரண்டு பிள்ளைகளின் தாயார் என்றும்

**சிசுவின் தாயாரை கைது செய்துள்ள பொலிஸார், அவரை ஹட்டன் நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுத்து வருகின்றனர்**

இவருடைய கணவர், சில வருடங்களுக்கு முன்னர் உயிரிழந்துவிட்டார் என்றும் விசாரணைகளின் மூலம் தெரியவந்துள்ளது.

இந்த சிசு, கடந்த 7ஆம் திகதி புதைக்கப்பட்டுள்ளதாகவும் டிக்கோயா - கிளங்கள் வைத்தியசாலையின் சட்ட வைத்திய அதிகாரி ஹேஷானால், பிரேத பரிசோதனைகள் நடத்தப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

சிசுவின் தாயாரை கைது செய்துள்ள பொலிஸார், அவரை ஹட்டன் நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

கந்தகாடுவில்

## தும்புத்தடி, விளக்கமாறுடன் சண்டை

கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளானவர்களுக்கு விசேடமாக சிகிச்சையளிக்கப்படும், வெலிகந்த- கந்தகாடு விசேட மத்திய நிலையத்தில், இரண்டு குழுக்களைச் சேர்ந்தவர்களுக்கிடையில் ஏற்பட்ட கைகலப்பில், ஐவர் காயமடைந்துள்ளனர் என வெலிகந்த பொலிஸார் தெரிவித்தனர்.

சிகிச்சையளிப்பதற்காக, அந்த மத்திய நிலையத்துக்கு நேற்றுக்காலை (22) அனுமதிக்கப்பட்டவர்களே இவ்வாறு கைகலப்பில் ஈடுபட்டுள்ளனர் எனத் தெரியவருகின்றது.

காயமடைந்தவர்களின் நிலைமை அவ்வளவு மோசமானதாக இல்லையெனத் தெரிவித்த பொலன்னறுவை பெரியாஸ்பத்திரியின் பணிப்பாளர். விசேட வைத்திய சம்பத் இந்திக குமார, பொலிஸ் பாதுகாப்புடன் சிகிச்சையளிக்கப்பட்டு வருகின்றது என்றார்.

கந்தகாடு மற்றும் சேனபுர ஆகிய இடங்களிலுள்ள, போதைப்பொருள்களுக்கு அடிமையானவர்களுக்கு புனர்வாழ்வளிக்கும் மத்திய நிலையங்களில், கொரோனா வைரஸ் தொற்றுக்குள் உள்ளானவர்கள் இனங்காணப்பட்டனர்.

## 'ஒகஸ்ட் 1 முதல் பாலர் பாடசாலை'

கொரோனா வைரஸ் அச்சம் காரணமாக, மார்ச் முதல் தொடர்ச்சியாக மூடப்பட்டிருக்கும் பாலர் பாடசாலைகளை ஒகஸ்ட் 1ஆம் திகதி முதல் மீண்டும் திறப்பதற்கு அரசாங்கம் அவதானம் செலுத்தியுள்ளதெனத் தெரிவித்த சுகாதார அமைச்சர் பவித்திரா வன்னியராச்சி, இதுதொடர்பில், அமைச்சரவைக் கூட்டத்தில் வெகுவாக ஆராயப்பட்டதென்றார்.

அவ்வாறு ஆராயப்பட்டதில், ஒகஸ்ட் 1ஆம் திகதி முதல், பாலர் பாடசாலைகளை ஆரம்பிப்பதற்கு அமைச்சரவையில் அங்கிகாரம் கிடைத்துள்ளதெனத் தெரிவித்த அவர், உத்தியோகபூர்வ அறிவிப்பொன்று, கல்வியமைச்சின் ஊடாக விரைவில் வெளியிடப்படும் என்றார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில், இன்று (நேற்று) நடத்தப்பட்ட வாராந்த அமைச்சரவைக் கூட்டத்தில், மேற்படி விவகாரம் தொடர்பில் விரிவாக கலந்துரையாடப்பட்டதெனத் தெரிவித்த அவர், கல்வியமைச்சரும், சுகாதார



# விமர்சனங்கள் அதிகரித்தால் பலமும் அதிகரிக்கும்

■ எஸ். சதீஸ்

ஐக்கிய தேசிய கட்சிக்கு விமர்சனங்கள் அதிகரிக்க, அதிகரிக்க, கட்சியின் பலமும் அதிகரிக்கும் என, கொழும்பு மாவட்ட ஐக்கிய தேசிய கட்சியின் வேட்பாளர் ரவி கருணாநாயக்க தெரிவித்தார்.

ஹட்டனில், நேற்று (22) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில், செய்ய முடிந்தவற்றைப் பற்றி மாத்திரமே பேசவேண்டும் எனத் தெரிவித்த அவர், இருக்கும்போது செய்ய முடியாததை, சென்ற பின்னர் பேசி எந்தப் பயனும் இல்லை எனத் தெரிவித்தார்.

அடுத்தவர்களைப் பற்றி பேச வேண்டிய அவசியம் இல்லை எனத் தெரிவித்த அவர், எங்களைப் பற்றி மாத்திரமே பேச வேண்டும் என்றும் தங்களுக்கென்று உள்ள சிறப்பான தலைவர், சமத்துவத்தோடு செயற்பட்டுக்கொண்டு இருக்கிறார் என்றும் அவர் தெரிவித்தார்.

# நிறுத்தப்பட்ட அபிவிருத்திகள் புத்துயிர்பெறும்

■ செ.தி.பெருமாள்

நல்லாட்சி அரசாங்கத்தால் நிறுத்தப்பட்ட அனைத்து அபிவிருத்திகளும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்‌ஷவால் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என, ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் நுவரெலியா மாவட்ட வேட்பாளர் மருதபாண்டி ராமேஷ்வரன் தெரிவித்தார்.

கொட்டகலையில் நேற்று முன்தினம் (21) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில், இந்த அரசாங்கம் ஆட்சிக்கு வந்த பின்னர், தங்களால் முன்னெடுக்கப்பட்ட அபிவிருத்தித் திட்டங்களை நிறுத்திவிட்டது என, எதிர்க்கட்சிகள் குற்றஞ்சாட்டி வருவதாகவும் ஆனால், தற்போதைய பிரதமரும் அப்போதைய ஜனாதிபதியுமான மஹிந்த ராஜபக்‌ஷவால் முன்னெடுக்கப்பட்ட வேலைத்திட்டங்களை, கடந்த 4 1/2 வருடகாலத்தில் அந்த அரசாங்கம் நிறுத்திவைத்திருந்தது என்றும் அவர் குற்றஞ்சாட்டினர்.

அவருடைய ஆட்சியின் போதே, சகல தோட்டங்களுக்கும் கொங்கிரீட் வீதிகள் இடும் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வந்தன என்றும் இந்நிலையில், தங்களுடைய ஆட்சி வந்த பின்னர், நிறுத்தி வைக்கப்பட்ட அனைத்து வேலைத்திட்டங்களும் தொடங்கப்படும் என்று அவர் தெரிவித்தார்.



இதேவேளை, தேர்தலின் பின்னர் ஆட்சி அமைத்தவுடன், பலரும் தங்களுடன் இணைவர் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

# ‘அடிப்படைவாதிகளுக்கு அடிபணியாத நாடாளுமன்றம்’

■ நதீக தயாபண்டார

30 வருடங்களாகக் காணப்பட்ட நாடாளுமன்ற சம்பிரதாயங்களை மாற்றி, வரலாற்றில் முதல் தடவையாக அடிப்படைவாதிகளுக்கு அடிபணியாத நாடாளுமன்றத்தை உருவாக்கவுள்ளதாக, ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் கண்டி மாவட்ட வேட்பாளர் கெஹெலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

குண்டசாலை- பலகொல்ல பிரதேசத்தில் நேற்று முன்தினம் (21) நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில், அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தால் இறுகியுள்ள இடங்களை விடுதலை செய்வதைப் போலவே, சுயாதீனம் எனக் கூறப்படும் அரசமைப்புடன், 19ஆவது திருத்தத்தை மாற்றுவதற்கு, மக்களின் ஆணை அவசியம் எனக் கூறினார்.

இன்று நாட்டில் சம்பிரதாயபூர்வ தேர்தல் கலாசாரத்துக்குள் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன என்று தெரிவித்த அவர், வெட்டினாலும் நீலம், பச்சை, சிவப்பு என்று கூறித்திரியும் வாக்காளர்கள், இன்று நாட்டை முன்னேற்றக்கூடிய, அபிவிருத்தி செய்யக்கூடிய கட்சி தொடர்பில் அவதானம் செலுத்துவதைப் பார்க்கக் கூடியதாக உள்ளது என்றும் தெரிவித்தார்.



# லூல்கந்துறையைச் சுற்றுலா பிரதேசமாக மாற்றுவேன்

■ மொஹொமட் ஆஸிக்



இலங்கையில் முதலாவதாக தேயிலை பயிரிடப்பட்ட லூல்கந்துறை பெருந்தோட்டப் பகுதியை, சுற்றுலாப் பிரதேசமாக மாற்றுவதற்கு, எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கவுள்ளதாக, கண்டி மாவட்ட ஐக்கிய தேசிய கட்சியின் தலைமை வேட்பாளர் சாந்தினி கோன்கஹகே தெரிவித்தார்.

கண்டி, பல்லேகலையில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில், இலங்கையில் முதலாவதாக தேயிலை பயிரிடப்பட்ட லூல்கந்துறைப் பெருந்தோட்டத்தின் அபிவிருத்தி, குன்றிய நிலையில் உள்ளது என்றும் இந்நிலையில், இப்பகுதியை சுற்றுலாப் பிரதேசமாக மாற்றுவதன் மூலம் நல்ல வருமானத்தைப் பெற்றுக்கொள்ள முடியும் என்றும் அவர் தெரிவித்தார்.

இது தொடர்பாக, இரண்டு தசாப்த காலமாக மாகாண சபையில் தான் பேசியதாகவும் எனினும் எந்தவொரு பயனும் கிடைக்கவில்லை என்றும் தெரிவித்தார்.

எனவே, எதிர்காலத்தில் நாடாளுமன்றத்தில் இது தொடர்பாகத் தான் குரல் கொடுக்கவுள்ளதாகவும் அதற்காக தனக்குக் கிடைக்கும் வரமாக, மக்கள் தன்னைத் தெரிவு செய்யவேண்டும் என்று அவர் கூறினார்.

இந்தப் பகுதிக்கு, ஆயிரக்கணக்கான மக்கள் வருகை தருவதாகவும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் வருவதாகவும் எனினும், உள்நாட்டு பயணிகளுக்கு எந்தவொரு அடிப்படை வசதிகளும் செய்து கொடுக்கப்படவில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

மேலும் கருத்துத் தெரிவித்த அவர், “பல ஜனாதிபதிகள் வந்தனர். தேசிய ரீதியில் சிந்தித்து நாட்டை அபிவிருத்தி செய்வதை நிறுத்திவிட்டு, தமது சொந்த ஊரையும் மாவட்டத்தையுமே அபிவிருத்தி செய்தனர். இது பற்றி, மாகாண சபையில் பேசுவதில் எந்தவோர் நல்ல விடயமும் நடக்காது. நாடாளுமன்றத்தில் தான் குரல் கொடுக்கவேண்டும்” என்று அவர் மேலும் தெரிவித்தார்.

# அடிமை வரலாற்றிலிருந்து மலையகம் மீள வேண்டும்



150 ஆண்டு கால அடிமை வரலாற்றில் இருந்து மலையகம் மீண்டெழுந்து வரவேண்டும் என, பதுளை மாவட்டத்தில் சுயேச்சையாகப் போட்டியிடும் சட்டத்தரணி மா.சிறில்ராஜ் தெரிவித்தார்.

ஹல்தமுல்லை- நீடுட் பிரதேசத்தில் நடைபெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில், 150 ஆண்டுகளுக்கு அதிகமாக, தாங்கள் அனைவரும் அடிமை சமூகமாகவே வாழ்ந்து வருவதாகவும் இந்த நிலையிலிருந்து மாறவேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

காலங்காலமாக கூலித் தொழிலாளியாக காணி, வீடு உரிமை இன்றி வாழ்ந்து வருவதாகத் தெரிவித்த அவர், ஏனைய சமூகத்தவர்கள் அனுபவிக்கும் சகல உரிமைகளும் எமது மலையக சமூகத்துக்கும் கிடைக்க வேண்டும் என்றும் தெரிவித்தார்.

மேலும், இளைஞர், யுவதிகளுக்கு அரச தொழில் வாய்ப்புகளை விகிதாசார அடிப்படையில் வழங்க வேண்டும் என்றும் ஆசிரியர் தொழிலைத் தவிர ஏனைய துறைகளிலும் அரச தொழில் கிடைப்பது பாரிய சவாலாகவே உள்ளது என்றும் தெரிவித்தார்.

எனவே, சிக்கல்களில் இருந்து வெளியில் வரவும் எமது மக்களின் பிரச்சினைகளைப் பேசு பொருளாக்கி, நாடாளுமன்றத்தில் சட்ட திருத்தங்களைச் செய்வதற்கும் குரல் கொடுப்பேன் என்றும் அவர் உறுதியளித்தார்.







# எதிர்காலச் சந்ததியினர் ‘கூடை சுமக்கக் கூடாது’



கணேசன் உதயகுமார்
சுயேச்சை வேட்பாளர்
மாம்பழச்சின்னம்
இலக்கம் - 05
நுவரெலியா மாவட்டம்



க.ஆ.கோகிலவாணி

“எமது தாய்மார் தலையில் சுமந்த கூடைகளை, அவர்களால் இனியும் இறக்க முடியாது. ஏனெனில், தங்களது பிள்ளைகள் பட்டினியில் வாடுவதைப் பொறுத்துக்கொள்ள முடியாததாலும் பிள்ளைகளின் எதிர்கால நலனுக்காகவுமே அவர்கள் கூடைகளைத் தலையில் சுமந்தனர்; சுமக்கின்றனர். அவர்கள் சத்துக்காக உண்ணவில்லை. பசிக்காவே உண்ணுகின்றனர். எனவே, அதே கூடையை இனிவரும் சமூகமும் சுமக்கக் கூடாது என்பதற்காகவே, நாம் போராடிக் கொண்டிருக்கிறோம்” என்று, நுவரெலியா மாவட்ட சுயேச்சை வேட்பாளர் கணேசன் உதயகுமார் தெரிவித்தார்.

தமிழ்மிரருக்கு வழங்கிய விசேட செவ்வியிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். அவரது செவ்வியின் முழு விவரம் பின்வருமாறு;

**கே; உங்களைப் பற்றியும் நீங்கள் தலைமைத்துவம் வகித்துவரும் மலையக தன்னெழுச்சி இளைஞர்கள் அமைப்பு, அந்த அமைப்பினூடாக இதுவரை மேற்கொண்ட சமூகப் பணிகள் தொடர்பிலும் கூறுங்கள்?**

தலவாக்கலை தோட்டத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட நான் ஆரம்பத்தில், ‘சுடரொளி’ பத்திரிகை, ‘தாளம்’ எப்.எம் ஆகியவற்றில் ஊடகவியலாளராகப் பணியாற்றினேன். தற்போது ஓர் ஆசிரியராகக் கடமையாற்றி வருகின்றேன். 2006ஆம் ஆண்டு முதல் பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சம்பள உயர்வு, மலையக மக்களின் மறுமலர்ச்சிக்கான போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றோம். 2018ஆம் ஆண்டு தோட்டத் தொழிலாளர்களின் சம்பள உயர்வு தொடர்பாக, கொழும்பு-காலி முகத்திடலில், தன்னெழுச்சிப் போராட்டத்தை ஆரம்பித்தேன். நாடாளுமன்ற வளாகத்தில் தனி நபராகப் போராடினேன். மிக முக்கியமாக, தொழிலாளர்களுக்கு நியாயமான சம்பள உயர்வை வலியுறுத்தி, உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்தேன். அதே ஆண்டு கொழும்பு, ஹட்டன் போன்ற பகுதிகளில் சத்தியாக்கிரகப் போராட்டங்களில் ஈடுபட்டோம். 11 நாள்கள் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

அதற்கடுத்ததாக, பெருந்தோட்டத் தொழிலாளர்களின் கையெழுத்து அடங்கிய மகஜரொன்றை, இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகராலயத்தில் கையளித்தோம். அதேபோன்று, பிரித்தானிய உயர்ஸ்தானிகராலயத்திலும் கையெழுத்துகள் அடங்கிய மகஜரைக் கையளித்தோம்.

> ❝ மலையகத்தில் போதைப் பொருள் பாவனை அதிகரித்துள்ளமைக்கு, தற்போதைய அரசியல் தலைமைகளே காரணம். இவ்விடயத்தில் ஒருவரைக் காட்டி இன்னொருவர் தப்பிக்க முடியாது

நுவரெலியா மாவட்டத்திலுள்ள தமிழ்மொழிப் பாடசாலைகளுக்கு, தமிழில் கடிதங்கள் அனுப்பப்படுவதில்லை. நான் ஓர் ஆசிரியர் என்றவகையில், நுவரெலியா கல்விக் காரியாலயத்தால், தமிழ்மொழி தொடர்ச்சியாகப் புறக்கணிக்கப்பட்டு வருவதை உணர்ந்து, அதற்கெதிராக, நுவரெலியா கல்விக் காரியாலயத்துக்கு முன்பாக, தனிநபர் போராட்டத்தை முன்னெடுத்தேன். இவ்விடயம் தொடர்பில், மத்திய மாகாண முன்னாள் ஆளுநர் மைத்திரி குணரத்னவுக்கு மனுவையும் கையளித்தேன். இதற்குத் தீர்வைப் பெற்றுத்தருவதாக, அவர் உறுதியளித்தார்.

கொரோனா வைரஸ் நிவாரண நிதி, பெருந்தோட்ட மக்களுக்கு உரியவகையில் வழங்கப்படுவதில்லை என்று தெரிவித்து, ஹட்டன் டிக்கோயா தோட்டத்தில் ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்துள்ளோம். கொரோனா வைரஸ் நெருக்கடிக் காலத்தில், மலையக இளைஞர்கள், யுவதிகள், கொழும்பு போன்ற வெளிமாவட்டங்களிலிருந்து சொந்த ஊர்களுக்குத் திரும்பமுடியாதிருந்த சூழலில், அவ்வாறானவர்களுக்கு நிவாரணம் வழங்கப்பட வேண்டும், அவர்கள் பாதுகாப்பாக அழைத்துவரப்பட வேண்டும் எனவும் வலியுறுத்தியிருந்தோம்.

மலையக தன்னெழுச்சி இளைஞர்கள் அமைப்பு, 2010ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டாலும் காலி முகத்திடலில் முன்னெடுக்கப்பட்ட போராட்டத்தின் பின்னரே, அந்த அமைப்புப் பற்றி அனைவரும் அறிந்துகொண்டனர். அதற்கு முன்பாக ஓர் அழுக்கக் குழுவாகவே நாங்கள் இயங்கிக்கொண்டிருந்தோம். எமது அமைப்பில் சுமார் 20,000க்கும் மேற்பட்ட இளைஞர்,யுவதிகள் உள்ளனர்.

மூன்று தோட்டங்களுக்கு ஒரு தேயிலைத் தொழிற்சாலை என்றவகையில், பெருந்தோட்டப் பகுதிகளில் தேயிலைத் தொழிற்சாலைகள் அதிகம் காணப்படுகின்றன. எனினும் பெரும்பாலான தொழிற்சாலைகள் மூடப்பட்டே காணப்படுகின்றன.

இந்தத் தொழிற்சாலைகளைப் புனரமைத்து ஆடைத் தொழிற்சாலையோ, பொம்மைகளைத் தயாரிக்கும் தொழிற்சாலைகளாகவோ அமைத்துக் கொடுத்தால் வேலைவாய்ப்பற்றிருக்கும் எமது இளைஞர், யுவதிகள் நன்மையடைவர்.

சில தனியார் நிறுவனங்கள், கடந்தகாலங்களில் இவ்வாறான தொழிற்சாலைகளை, பெருந்தோட்டப் பகுதிகளில் அமைப்பதற்கான ஆரம்பக்கட்டப் பணிகளை முன்னெடுத்திருந்தாலும்கூட அப்போதிருந்த மலையகத் தலைமைகள், அந்தக் கம்பனிகளிடம் தமக்கான இலாபத்தைக் கோரியதால், அந்தக் கம்பனிகள் பின்வாங்கியதாக எமக்குத் தகவல்கள் கிடைத்தன. எமக்குக் கிடைக்கவிருந்த வரப்பிரசாதங்களை, இதுவரை இருந்த மலையகத் தலைமைகள் தட்டிப்பறித்துவிட்டனர்.

எமது தாய்மார் தலையில் சுமந்த கூடைகளை, அவர்களால் இனியும் இறக்க முடியாது. ஏனெனில் அவர்கள் வறுமை காரணமாகவும் பிள்ளைகளின் எதிர்கால நலனுக்காகவுமே கூடைகளைச் சுமந்தனர். அதே கூடையை, இனிவரும் தலைமுறையினரும் சுமக்கக் கூடாது என்பதற்காகவே, நாமும் போராடிக் கொண்டிருக்கிறோம்.

**கே; அரசியலுக்குள் வரவேண்டும் என்ற எண்ணம் எப்போது ஏற்பட்டது?**

மலையக தன்னெழுச்சி இளைஞர் அமைப்பு, சமூக சேவையை மட்டுமே இலக்காகக் கொண்டது. அரசியலை உள்வாங்கக்கூடாது என்ற எண்ணப்பாட்டிலேயே இருந்தோம். எனினும் மலையக அரசியல் தலைமைகளின் செயற்பாடு எம்மை அரசியலுக்குள் தள்ளிவிட்டது. ஏனெனில், மலையகச் சமூகம் இதுவரை ஏமாற்றப்பட்டே வருகிறது. மலையகப் பிரதிநிதிகள் இதுவரை எமது தாய், தந்தையரை ஏமாற்றியது போதாதென்று, மக்களின் நலனுக்காகப் போராடி வரும் இளைஞர்களை இழிவுபடுத்தி வருகின்றனர். எம்மை முட்டாள்களாகக் கருதிவிட்டனர். மலையக இளைஞர் சமூகம் அறிவுசார்ந்த சமூகம் என்பதை நிரூபிப்பதற்காக, இத்தகைய பெருந்தலைவர்களிடமிருந்து எமது சமூகத்தை மீட்டெடுக்க வேண்டும் என்ற ஒரே நோக்கில், நாங்கள் அரசியலில் இறங்கியுள்ளோம்.

**கே; மலையக தன்னெழுச்சி இளைஞர்கள் அமைப்பு எதற்காக உருவாக்கப்பட்டது. அதன் எதிர்காலச் செயற்றிட்டங்கள் எவை?**

எதிர்காலத்தில் கல்வியால் உருவாகக்கூடிய சமூகத்தை உருவாக்க வேண்டும் என்பதே எமது அமைப்பின் இலக்கு. அதற்கான ஊக்குவிப்பை எமது அமைப்பு வழங்கும். எந்த அரசியல் கட்சிகளுடனும் நாம் சோரம்போக மாட்டோம். எந்தக் கட்சிகளுடனும் கூட்டணி சேரமாட்டோம். தனித்துவமாகவே செயற்படுவோம். எமது இளைஞர்களுக்கும் சரி எதிர்கால சந்ததியினருக்கும் சரி நல்லதொரு வழிகாட்டியாக இருக்க வேண்டும் என்பதே, எமது கொள்கை.

## எமது மக்களுக்குக் கிடைக்கவிருந்த வரப்பிரசாதங்களை தலைமைகள் தட்டிக்கழித்துவிட்டனர்

## எமது போராட்டங்களை இழிவுபடுத்தினர்

## ஒருவரை ஒருவர் காரணம் காட்டி தப்பிக்க முடியாது

## வேவண்டன் எனும் கோட்டையில் லயன் குடியிருப்புகளும் காணப்படுகின்றன

தோட்டத் தொழிலாளர்களாகவன்றி பாட்டாளி வர்க்கமாக நாம் மாற வேண்டும். தோட்டத் தொழிலாளர்கள் என்ற பதத்திலிருந்து நாம் விடுபட வேண்டும். பாட்டாளி வர்க்க மக்களை அடிமைத்தனத்திலிருந்து நாம் மாற்ற வேண்டும். தோட்டத் தொழிலாளர்கள் இதுவரை ஒருமையிலே விழிக்கப்படுகின்றனர். அவர்கள் அடிமைகளல்லர். இந்நாட்டின் முதுகெலும்பு. ஆனால் முதுகிலேயே குத்தப்படுகிறோம். இந்நிலையை மாற்றுவதற்காகப் பாடுபடுவோம்.

வறுமை நிலையைப் போக்குவதற்காக, கல்வி கற்ற மலையக இளைஞர், யுவதிகளுக்கு தொழில்வாய்ப்புகளை பெருந்தோட்டப் பகுதிகளிலேயே பெற்றுக்கொடுப்பதற்கு நாங்கள் முன்னின்று பாடுபடுவோம்.

தோட்டங்களிலுள்ள ஒவ்வொரு கோவில்களிலும் கட்டாயமாக அறநெறிப் பாடசாலைகள் இயங்க வேண்டும். அதற்கான நடவடிக்கைகளில் ஈடுபடுவோம்.

மலையகத்தில் குளவிக் கொட்டுச் சம்பவங்கள் அதிகரித்துள்ளன. இவ்வருடத்தில் இதுவரை ஐந்து தாய்மார்கள் குளவிக் கொட்டுக்கு இலக்காகி உயிரிழந்துள்ளனர். எனவே குளவிக் கொட்டிலிருந்து மக்களைப் பாதுகாப்பதற்கான உபாயங்களைத் தேடியறிந்து அதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வோம்.

பெருந்தோட்டத் தொழிலாளர்களிடமிருந்து சந்தா பெற்றுக்கொள்ளாமல் சேவை செய்வதற்கு நாம் திட்டமிட்டுள்ளோம். வெளிமாவட்டங்களில் பணிபுரியும் எமது இளைஞர், யுவதிகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கான நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவுள்ளோம். க.பொ.த சாதாரணதரம், உயர்தரம் பயின்ற அநேகமான இளைஞர்கள், ஓட்டோ ஓட்டுநர்களாகப் பணியாற்றி வருகின்றனர். தொழில்வாய்ப்பின்றியே அவர்கள் ஓட்டோ ஓட்டுநர்களாகினர். ஓட்டோ ஓட்டுநர் என்பது கௌரவமிக்க தொழில். ஆனால், ‘ஓட்டோக்காரன்’ என்றே அவர்களை அழைக்கின்றனர். இதனை மாற்றி ஓட்டோ ஓட்டுநர்களுக்கான சலுகைகளைப் பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கவுள்ளோம்.

பெருந்தோட்டப் பகுதிகளில் பாடசாலைக் கல்வியை இடைநடுவிலேயே கைவிட்ட மாணவர்கள், சிறுவர் தொழிலாளர்களாக கொழும்பு உள்ளிட்ட நகர்ப்புறங்களில் பணியாற்றி வருகின்றனர். எனவே, அவ்வாறானவர்களை இனங்கண்டு அவர்களுக்கு மனவள ஆலோசனைகளை வழங்கி, சிறுவர் தொழிலாளர்களாகச் சென்றமைக்கான காரணத்தைக் கண்டறிந்து, அவற்றை நிவர்த்தி செய்யவுள்ளதுடன், அவர்களை மீண்டும் பாடசாலைகளில் இணைத்துவிடுவதற்கான நடவடிக்கையை மேற்கொள்ளவுள்ளோம். அத்துடன் அம்மாணவர்களுக்கு, கல்வி ரீதியில் உதவுவதற்கும் நாங்கள் தீர்மானித்துள்ளோம்.

மாணவர்களின் இடைவிலகல்களுக்கு பாரபட்சம் காட்டப்படுதலும் ஒரு காரணியாக உள்ளது. எனவே, இவ்விடயங்களில் சம்பந்தப்பட்டவர்கள் சிந்தித்துச் செயலாற்ற வேண்டியது அவசியம். என்னை ஓர் ஆசிரியர் தட்டிக்கொடுத்து, உதவிகளைச் செய்ததாலேயே, நான் இன்று இந்த நிலைமைக்கு வளர்ந்து நிற்கின்றேன். எனவே, மாணவர்களின் இடைவிலகல்களுக்கு வறுமை ஒரு காரணமாக இருந்தாலும் அந்த மாணவனைச் சுற்றியுள்ள சமூகம் வழங்கும் ஒத்துழைப்புகளால், அந்த மாணவனால் கல்வியில் கரைகண்டு உயர்ந்த நிலைக்கு வரமுடியும் என்பதை இவ்விடத்தில் வலிந்து கூற விரும்புகிறேன்.

இதைவிட மாணவர்களின் இடைவிலகளுக்கு, பாடசாலைகள் மைல் கணக்கிலான தொலைவில் அமைந்துள்ளதும் ஒரு காரணம். பெருந்தோட்டப் பகுதிகளில் அதிகளவான மாணவர்கள், தொலைதூரம் நடந்து சென்றே கல்வியைத் தொடருகின்றனர்.

மலையகத்திலுள்ள காலநிலை மற்றும் போதிய போஷாக்கின்மை காரணமாக, மாணவர்கள் அதிகாலையில் எழும்பி பாடசாலைக்குச் செல்வதை பாரிய சுமையாகக் கருதுகின்றனர். இதில் மாணவர்களின் பாதுகாப்புப் பிரச்சினையும் உள்ளடங்கியுள்ளது. எனவே மாணவர்களுக்குப் போக்குவரத்து வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்கும் திட்டமுள்ளது.

ஆரம்ப காலங்களில் கங்காணி என்ற ஒருவர், மாணவர்களை பாடசாலைக்கு அழைத்துச் செல்லும் பணியை மேற்கொள்வார். எனவே அந்த முறையை மீண்டும் கொண்டு வருவதற்கு நடவடிக்கை எடுக்கவுள்ளோம்.

இன அழிப்பை மேற்கொள்ள வேண்டும் என்பதற்காக மலையகத்தில் திட்டமிட்டுக் கருக்கலைப்பு மேற்கொள்ளப்படுகிறது. எனவே, இவ்விடயங்கள் தொடர்பில் விழிப்புணர்வு நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளோம்.

தேயிலைத் தோட்டங்களில் பணிபுரியும் பெண்களில் குறிப்பாக கர்ப்பம் தரித்த பெண்கள் கருச்சிதைவுக்கு உள்ளாவது அதிகரித்துள்ளது. இதற்குப் பல காரணங்கள் உள்ளன. கூடையை தலையில் சுமந்துசெல்லும்போது, கூடை இடுப்பில் அழுத்துவதால், அது கருவுற்ற பெண்ணைப் பாதிக்கிறது. அதேபோன்று இடுப்பைச் சுற்றி படங்குகளைக் கட்டுவதால், அதனால் அதிகரிக்கும் உடல் வெப்பநிலை, கருச்சிதைவுக்கு வழிவகுக்கிறது. இதனால் அந்தப் பெண் உள ரீதியில் பாதிக்கப்படுவதுடன் உடல் பலவீனமடைகிறார். எனவே இவ்வாறான விடயங்களைத் தவிர்த்துக்கொள்வதற்காக, கருவுற்ற தாய்மார்களுக்கு முதல் மூன்று மாதங்களுக்கு சம்பளத்துடன் கூடிய விடுமுறையை வழங்குவது தொடர்பில் பெருந்தோட்ட நிறுவனங்களுக்கு அறிவுறுத்தவுள்ளோம்.

**கே; பெருந்தோட்டப் பகுதிகளில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்திவரும் போதைப் பொருள் பாவனையைத் தடுப்பதற்கு ஏதேனும் திட்டங்கள் உள்ளனவா?**

மலையகத்தில் போதைப் பொருள் பாவனை அதிகரித்துள்ளமைக்கு, தற்போதைய அரசியல் தலைமைகளே காரணம். இவ்விடயத்தில் ஒருவரைக் காட்டி இன்னொருவர் தப்பிக்க முடியாது.

**கே; நீங்கள் தனிப்பட்ட முறையில் மக்களுக்காகச் செய்வதற்கு எதிர்பார்த்துள்ள பணிகள் குறித்துக் கூறமுடியமா?**

நான் மக்களுக்காக செய்ய நினைக்கும் விடயங்களை, எனது குழுவினூடாகவே செய்வதற்குத் திட்டமிட்டுள்ளேன். தனிப்பட்ட ரீதியில் செய்வதற்கு நினைக்கவில்லை. ஏனெனில் எனது குழுவில் உள்ளவர்கள் அர்ப்பணிப்புடன் பணியாற்றுபவர்கள். நான் தலைவராக இருந்தாலும்கூட நாளை எனது குழுவில் வந்து இணையும் இளைஞர்களையும் தலைவராகவே பார்ப்பேன். மலையகத்தைக் கட்டிக் காக்கும் பொறுப்பு மலையக இளைஞர்களிடமே உள்ளது. இந்த அமைப்பில் இணையவுள்ளவர்களுக்கு இந்தப் பொறுப்பு சுமத்தப்பட்டுள்ளது. நான் பெரியவன், நான் சிறியவன் என்ற பேதமின்றியே நாம் செயற்பட்டு வருகிறோம். அத்துடன் தன்னெழுச்சி இளைஞர் அமைப்பிலிருந்து வெளியேறியவர்களை, மீண்டும் இந்த அமைப்பில் இணைத்துக்கொள்வது ஒருக்காலும் நடக்காது. மாகாண சபையில் போட்டியிட வாய்ப்புக் கிடைக்கும் என்று கருதி பலர், மாற்றுக் கட்சிகளில் இணைந்துள்ளனர். அவ்வாறானவர்களை மூளைச்சலவை செய்து, எமது குழுவில் இணைத்துக்கொண்டால், மீண்டும் அதே தவறை அவர்கள் செய்யக்கூடும்.

> ❝ மாணவர்களை அழைத்துச் செல்வதற்காக கங்காணியை பணிகளில் ஈடுபடுத்தவுள்ளோம்

**கே; உங்கள் அமைப்பைக் கொண்டு நடத்துவதற்கான உதவிகளை எவ்வாறு பெற்றுக்கொள்கின்றீர்கள்?**

ஆங்காங்கே கிடைக்கும் நிதிஉதவிகளை வைத்தே சேவையாற்றி வருகிறோம். அதைவிட எங்களால் முடிந்த தொகையை ஒதுக்கிக்கொள்கிறோம். அதனை வைத்து, பொதுப் பணியை முன்னெடுத்து வருகிறோம். நிதி உதவி வழங்குவதைவிட மக்களுக்கு எத்தகைய உதவி தேவை என்பதை ஆராய்ந்து அதன்படி உதவுவதே எமது நோக்கம்.

மலையகத்தில் இதுவரை தீவிபத்துக்குள்ளான பகுதிகளுக்குச் சென்று நாங்கள் அரிசி, பருப்பை வழங்கவில்லை. அந்தப் பகுதியில் எத்தனை மாணவர்கள் தீ விபத்தால் தங்களது உடைமைகளை இழந்தார்களோ அவர்களுக்கு எங்களாலான கற்றல் உபகரணங்களை வழங்கியுள்ளோம்.

குறிப்பாக வேவண்டன் என்று கூறப்படும் கோட்டையின் மேற் பகுதியிலிருந்து பார்த்தால் சிறைச்சாலைக்குக் கட்டப்படும் மதிலைவிட பாரிய மதிலொன்றைக் கட்டிவைத்துள்ளார்கள். ஆனால், அந்தப் பகுதியிலுள்ள லயனொன்று, இன்னும் அபிவிருத்தியடையாது உள்ளது. அந்த லயன் அண்மையில் தீ விபத்துக்குள்ளானபோதுகூட முக்கிய பிரமுகர் ஒருவர் 2,500 ரூபாய்க்கான பற்றுச்சீட்டை வழங்கினார். ஆனால் நாங்கள் 7,000 ரூபாய்க்கு அப்பியாசக் கொப்பிகள், பேனைகள், குடைகளை அங்குள்ள மாணவர்களுக்கு வழங்கினோம். ஆனால், 2,500 ரூபாய்க்கான பற்றுச்சீட்டு வழங்கியதையே ஊடகங்கள் பெருப்பித்துக் காட்டின. நாளைய தலைமுறையின் கல்வி வளர்ச்சிக்கு உதவிய எம்மை பொருட்படுத்தவில்லை.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் வியாழக்கிழமை, 23 ஜூலை 2020, இல. 8, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு 02 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.